# உதயன்

விலை ரூபா 7.00

சுடர்18 வள்ளுவர் ஆண்டு 2033 மார்கழி 04 வியாழக்கிழமை (19-12-2002) UTHAYAN - A Lively National Tamil Daily கதிர்:23


# ஆனையிறவில் வீதியை மேவி வெள்ளம்! வாகனப் போக்குவரத்துகள் ஸ்தம்பிதம்!!

யாழ்ப்பாணம்,டிசெ.19

வன்னிப் பிரதேசத்தில் பெய்து வரும் அடைமழையை அடுத்து ஆனையிறவுப் பகுதியில் ஏ-9 கண்டி வீதியை மேவி வெள்ளம் பாய்கின்றது. இதனால் அந்த வீதியூடான வாகனப் போக்குவரத்து தடைப்பட்டிருக்கிறது.

கண்டி வீதியில் ஆனையிறவுக்கும் பரந்தனுக்கும் இடைப்பட்ட வீதி வெள்ளக் காடாகியிருக்கின்றது. வீதிக்கு கிழக்கே இருந்து மேற்கு நோக்கி வீதியை மேவிப்பாயும் வெள்ளம் வீதியில் ஆங்காங்கே சேதங்களை ஏற்படுத்தியிருக்கிறது.

## சேதங்களைத் திருத்தும் பணி நேற்று இரவிரவாக நடந்தது

வீதியின் ஓரிடத்தில் மண்கொண்டு நிரவப்பட்டிருந்த சிறுபகுதி அப்படியே நீரினால் அடித்துச் செல்லப்பட்டிருப்பதாகக் கூறப்படுகிறது. அத்துடன், அந்த வீதியில் காணப்படும் மதகுகள் வெள்ளத்தினால் மூடப்பட்டுள்ளன. அவை சேதமடைந்திருக்கலாம் என்று கருதப்படுகிறது.

வெள்ள நிலைமை காரணமாக கண்டி வீதியூடான போக்குவரத்து முற்றாகத் தடைப்பட்டிருக்கிறது.

கொழும்பிலிருந்து வந்த பல வாகனங்களும் யாழ்ப்பாணத்திலிருந்து சென்ற வாகனங்களும் நேற்று முற்பகல் ஒருவாறு இந்த வீதிப் பிரதேசத்தைத் தாண்டிப் பயணஞ் செய்ய முடிந்தது. எனினும் சேதமடைந்துள்ள வீதி வழியே வாகனங்களை அனுமதிப்பது ஆபத்தானது என்று சுட்டிக் காட்டப்பட்டதை அடுத்து நேற்று நண்பகலுக்குப் பின் இந்த வீதியூடான போக்குவரத்து தற்காலிகமாக நிறுத்தப்பட்டிருக்கிறது. மிக அவசர தேவை கருதிச்செல்லும் ஓரிரு வாகனங்கள் மட்டுமே நேற்று பிற்பகல் ஆனையிறவைத் தாண்டி பயணம் செய்ய அனுமதிக்கப்பட்டன.

கிளிநொச்சியிலிருந்து இரு சடலங்களை ஏற்றிக்கொண்டு இலங்கை செஞ்சிலுவைச் சங்க அம்புலன்ஸ் வண்டி நேற்று நண்பகல் ஆனையிற

(12ஆம் பக்கம் பார்க்க)

# கொழும்புத் தீயில் பலியானோர் எண்ணிக்கை 17ஆக உயர்வு!

## இன்னும் அறுவரைக் காணோம்!

கொழும்பு,டிசெம்பர்19

**கொழும்பு, புறக்கோட்டை ஐந்துலாம்புச் சந்தியில் மூன்றடுக்குக் கட்டடத் தொகுதி எரிந்து நாசமான சம்பவத்தில் உயிரிழந்தோர் எண்ணிக்கை 17ஆக உயர்ந்தது.**

**நேற்றுமுன்தினம் தீ ஓரளவு கட்டுப்படுத்தப்பட்ட கையோடு ஒன்பது பேரின் சடலங்கள் மீட்கப்பட்டிருந்தன. நேற்று மேலும் எட்டுச் சடலங்கள் மீட்கப்பட்டன.**

**இன்னும் அறுவரைக் காணவில்லை. அவர்களின் கருகிய சடலங்கள் எரிந்த கடைகளுக்குள் கிடக்கலாம் என அஞ்சப்படுகின்றது.**

தீ விபத்தில் எரிகாயம் அடைந்தவர்கள் 28பேர். அவர்கள் கொழும்பு தேசிய வைத்தியசாலையில் அவசர சிகிச்சைக்காகச் சேர்க்கப்பட்டனர். அவர்களில் மூவர் மிகவும் ஆபத்தான நிலையில் உயிருக்காகப் போராடிக் கொண்டிருக்கின்றனர்.

கடைத் தொகுதியில் உள்ள பட்டாசுக் கடையில்தான் தீ மூண்டது என்று கூறப்படுகிறது. எனினும், பட்டாசுக் கடையில் தீ பிடித்துத்தான் அது மற்றக் கடைகளுக்கும் பரவியதா? எப்படித் தீ மூண்டது? இது

(12ஆம் பக்கம் பார்க்க)



தீயில் எரிந்த கடைகளில் ஒன்றான எம்.பி.சுவாம்பிள்ளை அன்சன்ஸ் உரிமையாளர் செல்லத்துரை பாலசிங்கம் (நடுவில்) அவரது மகன் பாலசிங்கம் ஐங்கரன் (இடது), மருமகன் சண்முகம் சிவகுமாரன் (வலது) ஆகியோரையே படங்களில் காண்கிறீர்கள். இவர்கள் மூவரும் மற்றும் கடை ஊழியர்கள் ஆறுபேரும் இச்சம்பவத்தில் காணாமற்போயிருக்கின்றனர்.

## பட்டாசுக் கடை மீது முதலில் கிரனேட் ஏதும் வீசப்பட்டதா?

### பிரதி மேயர் தெரிவிக்கும் சந்தேகம்

கொழும்பு,டிசெ.19

"கொழும்பு ஐந்துலாம்புச் சந்தி தீவிபத்துக்குப் பல காரணங்கள் கூறப்படுகின்றன. முதலில் கிரனேட் ஒன்றும் பட்டாசுக்கடை மீது வீசப்பட்டு சேதம் உண்டாக்கப்பட்டதாகக் கூறப்படுகிறது.

"அதைவிட பட்டாசுக்கடை உரிமையாளர்கள் கடைக்குள் ஐந்து ஊழியர்களை வைத்துப் பூட்டிவிட்டு வெளியே சென்றிருந்ததாகவும் கூடப் பேச்சு அடிபடுகிறது."

கொழும்பு மாநகர பிரதி மேயர் அசாத்சாலி இவ்வாறு தெரிவித்திருக்கின்றார்.

அவர் மேலும் கூறியதாவது:-

விமானப் படையினரும் தீயணைப்புப் படையினரும் ஒரு கடுமையான பணியைச் செய்துமுடித்துள்ளனர். தீ

(12ஆம் பக்கம் பார்க்க)

## 44 இந்திய மீனவர்களை யாழ்.நீதிமன்றம் விடுவித்தது

யாழ்ப்பாணம்,டிசெ.19

இலங்கைக் கடற்பரப்பில் ஊடுருவித் தொழில்செய்தவேளை கடற்படையினரால் கைதுசெய்யப்பட்டு யாழ் சிறைச்சாலையில் தடுத்து வைக்கப்பட்டிருந்த 44 இந்திய மீனவர்களையும் யாழ்நீதிவான் ஆர்.விக்னராஜா நேற்று விடுதலை செய்தார்.

சட்டமா அதிபரின் பணிப்புரையின் பேரில் அவர்களை விடுதலை செய்த நீதிவான், மீனவர்களின் வள்ளங்கள், வலைகள் ஆகியவற்றை அவர்களிடம் கையளிக்க வசதியாக காங்கேசன்துறை கடற்படை கட்டளை அதிகாரியிடம் ஒப்படைக்கும்படி காரைநகர்

(12ஆம் பக்கம் பார்க்க)

## ஒரே குடும்பத்தில் அறுவர் பலி!

ஐந்துலாம்படிச் சந்தி தீவிபத்தில் உயிரிழந்தவர்களில் 12 பேர் நேற்று மரண விசாரணைகளின்போது அடையாளங்காணப்பட்டனர். அவர்களில் ஒரே குடும்பத்தைச் சேர்ந்த 6 பேரும் அடங்குகின்றனர்.

கொழும்பைச் சேர்ந்தவர்களான பரராஜசிங்கம் இரத்தினம் (வயது 61), அவரது மனைவி சந்திராதேவி (வயது 54), அவர்களது பிள்ளைகளான தயாளினி (வயது 30), சுஜாதா (வயது 26), சுஜன் (வயது 21) மற்றும் அருமைத்துரை விஜயா (வயது 26) ஆகியோரே ஒரே குடும்பத்தைச் சேர்ந்தவர்களாவர்.

அடையாளங்காணப்பட்ட ஏனையோரின் விவரங்கள் வருமாறு:-

ரினோஷா ஜஸ்மின் (வயது 29), மொஹமட் நவ்பர் மொஹமட் ஜிப்ரி (வயது 34, ஆட்டுப்பட்டித்தெரு), ஜே.அரவிந்தன் (வயது 17, கொட்டாஞ்சேனை), சித்தி சொய்பா (வயது 52, ரத்தொழுகம), அய்யாத்துரை குகனேசன் (வயது 45, அளவெட்டி தெற்கு), வீரசிங்கம் அரியகுமாரன் (வயது 44, கொழும்பு)

இச்சடலங்களில் ஒன்பதை, அவர்களது உறவினர்கள் நேற்றுப் பொறுப்பேற்றுக்கொண்டனர். (ஐ)

### புறக்கோட்டையிலும் தீ விபத்து!

புறக்கோட்டை முதலாம் குறுக்குத் தெருவில் அமைந்துள்ள வர்த்தக நிலையம் ஒன்றிலும் நேற்றுப்பிற்பகல் இரண்டு மணியளவில் தீ விபத்து ஒன்று ஏற்பட்டது.

மின் உபகரணங்களை விற்பனை செய்யும் வர்த்தக நிலையம் ஒன்றில் மின்ஒழுக்குக் காரணமாக தீ விபத்து ஏற்பட்டதாக பொலீஸார் தெரிவித்தனர்.

தீ உடனடியாக பூரண கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவரப்பட்டதால் உடைமைகளுக்கு பாரிய சேதம் ஏற்படவில்லை. (ஐ)



கட்டடத்தின் உள்ளே இருந்து கருகிய நிலையில் மீட்கப்பட்ட ஒரு சடலம்.





திக்கம் வடிசாலையை மீள ஒப்படைக்குமாறு கோரி நேற்று பனை அபிவிருத்திச் சபையின் தலைமை அலுவலகத்துக்கு முன்பாக இடம்பெற்ற மறியற் போராட்டத்தின்போது எடுக்கப்பட்ட படங்கள் இவை. (படங்கள் : வசந்தன்)

# திக்கம் வடிசாலை விவகாரம்: மறியற் போராட்டம் ஆரம்பம்

யாழ்ப்பாணம்,டிசெ.19

பனை அபிவிருத்திச் சபையினால் பொறுப்பேற்கப்பட்ட திக்கம் வடிசாலையை மீளப்பெற்றுத்தரவேண்டும் என்றுகோரி வடமராட்சி பனை தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கங்களின் கொத்தணி நேற்றுமுதல் யாழ்.கச்சேரியடியில் கண்டி வீதியில் உள்ள பனை அபிவிருத்திச் சபை அலுவலகத்துக்கு முன்பாக மறியற் போராட்டத்தை ஆரம்பித்தது.

இந்த மறியற் போராட்டம் காரணமாக பனை அபிவிருத்திச் சபையின் அலுவலகப் பணிகள் யாவும் நேற்று முற்றாக ஸ்தம்பிதமடைந்தன.

நேற்றுக்காலை 7 மணிமுதல் மேற்படி சங்கத்தின் அச்சுவேலி, பருத்தித்துறை, கரவெட்டி ஆகிய கொத்தணிகளைச் சேர்ந்த சுமார் நூற்றுக்கும் அதிகமான அங்கத்தவர்கள் பனை அபிவிருத்திச் சபையின் தலைமை அலுவலகத்தின் முன்பாக ஒன்றுகூடி சுலோகங்களைத் தாங்கியவாறு மறியலில் ஈடுபட்டனர்.

இதனால் பனை அபிவிருத்திச் சபையின் தலைமை அலுவலகப் பணியாளர்கள், அலுவலகத்தினுள் செல்ல முடியாத நிலை ஏற்பட்டது. சிறிது நேரம் அங்கு காத்திருந்த பணியாளர்கள் பின்னர் வீடு திரும்பினர். இதனால் அலுவலகப் பணிகள் அனைத்தும் ஸ்தம்பிதமடைந்தன.

இதற்கிடையில் - மறியல் போராட்டம் காரணமாக கண்டி வீதியூடான போக்குவரத்து சிறிது நேரம் தடைப்பட்டது. (எ-5-12-51-173)

# கொட்டும் மழை பெய்த வேளை திருடப்பட்ட கதவுகள் பற்றைக்குள்!

## சாவகச்சேரிப் பகுதியில் சம்பவம்

தென்மராட்சி,டிசெ.19

நேற்றுமுன்தினம் செவ்வாய்க்கிழமை மழை பெய்துகொண்டிருந்த வேளையில் திருடிச் செல்லப்பட்ட 15 ஆயிரம் ரூபா பெறுமதியான இரண்டு இரும்புக் கதவுகள் மூன்று மைல்களுக்கு அப்பால் பற்றை மறைவில் இருந்து மீட்கப்பட்டன.

இந்தச் சம்பவம் நேற்றுக் காலை சாவகச்சேரிப் பகுதியில் இடம்பெற்றது.

சாவகச்சேரி - கச்சாய் வீதியில் உள்ள முஸ்லிம் ஒருவரின் காணியில் பொருத்தப்பட்டிருந்த இரும்புக் கதவுகளே இவ்வாறு திருடப்பட்டு மறுநாள் கெருடாவில் பகுதியில் இருந்து மீட்கப்பட்டன.

கடந்த மாதம இங்கு வந்த காணியின் உரிமையாளர், காணியைத் துப்புரவு செய்த பின் பக்கத்தில் உள்ள வீட்டுக்காரரிடம் தாங்கள் மீளக் குடியமர வரும்வரை பாதுகாக்குமாறு கூறிச்சென்றதாகவும்-

நேற்று முன்தினம் மழை பெய்துகொண்டிருந்த வேளையில் இக் கதவுகள் அகற்றப்பட்டதைக் காலையில் அறிந்த காணிப் பராமரிப்பாளர், கெருடாவில் பகுதியில் வைத்துக் கதவுகளைக் கண்டுபிடித்ததாகவும் தெரிவிக்கப்பட்டது.

(எ-117)

## அம்பாறை, மட்டு. மாவட்டங்களில் வெள்ள அனர்த்தம் நீடிப்பு

# நாவிதன்வெளியில் 273 வீடுகள் இடிந்தன; நிவாரணம் வழங்க அதிகாரிகள் நடவடிக்கை

மட்டக்களப்பு,டிசெ.19

அம்பாறை, மட்டக்களப்பு மாவட்டங்களில் வெள்ள அனர்த்தம் தொடருகின்றது. பாதிக்கப்பட்ட மக்களுக்கு உடனடி நிவாரண உதவிகள் வழங்க அரசாங்க அதிகாரிகள் நடவடிக்கை எடுத்துவருகின்றனர். கடந்த சில நாளகளாகப் பெய்துவரும் மழை, நேற்றும் தொடர்ந்ததால் வெள்ள நிலைமை சில இடங்களில் மேலும் மோசமடைந்தது.

அம்பாறை மாவட்டத்தில் ஏற்பட்டிருக்கும் வெள்ளத்தால் நாவிதன் வெளிப் பிரிவில் 273 வீடுகள் இடிந்து வீழ்ந்துள்ளன என்று பிரதேச செயலாளர் எம்.கோபாலரெத்தினம் தெரிவித்தார்.

நாவிதன்வெளிப் பிரிவில் ஆயிரத்து 895 குடும்பங்கள் முற்றாகப் பாதிக்கப்பட்டுள்ளன எனவும் அவர் தெரிவித்தார்.

கிட்டங்கி பாலத்தின் மேலாக 3 அடி வெள்ளம் பாய்கிறது. வாகனப் போக்குவரத்து முற்றாகத் துண்டிக்கப்பட்டுள்ளது. இதனால் தோணியில் சிலர் சென்று வருகின்றனர். பிரதேச செயலாளர் எம்.கோபாலரெத்தினமும் தோணியில் நேற்று பிரதேச செயலகத்துக்குச் சென்று வந்தார்.

அம்பாறை மாவட்டத்தின் கரையோரப் பிரதேசம் மழையால் வெகுவாகப் பாதிக்கப்பட்டுள்ளது.

அட்டாளைச்சேனை பிரதேச செயலாளர் பிரிவில் உள்ள நான்கு கிராமங்களில் உள்ள மக்கள் தத்தமது உறவினர்களின் வீடுகளில் தங்கியிருக்கின்றனர்.

பாதிக்கப்பட்ட மக்களுக்கான உடனடி நிவாரண நடவடிக்கைகளை அமைச்சர் ரவூப் ஹக்கீமின் அட்டாளைச்சேனை பிரதேச இணைப்பதிகாரியான சட்டத்தரணி எஸ்.எம்.ஏ. நஷீட், அவரது செயலாளர் பீ.ரீ.இக்பால் ஆகியோர் மேற்கொண்டு வருகின்றனர்.

அட்டாளைச்சேனை பிரதேச செயலாளர் பிரிவிலுள்ள 8,200 குடும்பங்களில் 4,500 குடும்பங்கள் மிகமோசமாகப் பாதிக்கப்பட்டிருப்பதாக பிரதேச செயலாளர் யூ.எல்.ஏ. அஸீஸ் தெரிவித்துள்ளார்.

அட்டாளைச்சேனை பிரதேச செயலாளர் காரியாலயத்தில் நேற்றுப் பகல் நடைபெற்ற வெள்ள நிவாரணம் வழங்குவது தொடர்பான உயர் மட்ட அதிகாரிகளின் கூட்டத்தில் திகாமடுல்ல மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் எச்.எம்.எம்.ஹரீஸ் கலந்துகொண்டு நிவாரணம் வழங்குவதற்கான ஏற்பாடுகளைச் செய்தார். ஒலுவில், பாலமுனை, அட்டாளைச்சேனை ஆகிய இடங்களையும் சென்று பார்வையிட்டார்.

அம்பாறை மாவட்டத்துக்கு விரைந்த நாடாளுமன்ற உறுப்பினர் எம்.ஐ.அன்வர் இஸ்மாயில், பிரதமரின் செயலாளர் பிரட்மன் வீரக்கோனுடனும் சமூகசேவைகள் அமைச்சருடனும் தொடர்புகொண்டு பாதிக்கப்பட்ட குடும்பங்களுக்கு நிவாரண உதவிகளை வழங்குமாறு கேட்டுக்கொண்டார்.

வெள்ளத்தினால் பாதிக்கப்பட்ட பிரதேசங்களிலும் ஏனைய பிரதேசங்களிலும் மின்சார இணைப்பு துண்டிக்கப்பட்டிருக்கிறது.

சமூகசேவைகள் அமைச்சர் ரவீந்திர சமரவீர, அம்பாறை மாவட்ட அரசாங்க அதிபருடன் தொடர்புகொண்டு வெள்ள நிவாரண உதவியாக 30 லட்சம் ரூபாவை வழங்கியிருக்கிறார்.

வெள்ளப் பெருக்கினால் மட்டக்களப்பு - திருமலை வீதி முற்றாகச் சேதமடைந்துள்ளது.

மயிலம்பாவெளி மற்றும் ஏறாவூர் போன்ற இடங்களில் தாம்போதிகள் உடைந்துள்ளன. இத்தாம்போதிகளூடாகப் பிரயாணம் செய்வதற்கான வசதிகளை வீதி அபிவிருத்தி அதிகார சபையினர் நேற்று மேற்கொண்டனர்.

ஏறாவூர்பற்று பிரதேச செயலாளர் பிரிவுக்குட்பட்ட சித்தாண்டிக் கிராமம் வெள்ளத்தில் மூழ்கியுள்ளது. இங்குள்ள மக்கள் பாடசாலைகளில் தஞ்சமடைந்துள்ளனர்.

ஈரளக்குளம் கிராமசேவகர் பிரிவில் வதியும் இருநூறுக்கும் மேற்பட்ட குடும்பங்கள் வெள்ளத் தால் பாதிக்கப்பட்டுள்ளதாகவும் - இவர்கள் போக்குவரத்துச் செய்ய முடியாத நிலைமை ஏற்பட்டுள்ள தாகவும் -தெரிவிக்கப்படுகிறது. (ஐ)

## விசேட கலந்துரையாடல்

யாழ்ப்பாணம்,டிசெ.19

வலி.தெற்கு பொது அமைப்புக்களின் ஒன்றியம் ஏற்பாடு செய்துள்ள விசேட கலந்துரையாடல் இன்று பிற்பகல் 3 மணிக்கு சுன்னாகம் பல நோ.கூ.சங்க மண்டபத்தில் ஒன்றியத் தலைவர் சி.குமாரவேல் தலைமையில் நடைபெறவுள்ளது.

மேற்படி பிரதேசத்தில் உள்ள சகல பொது அமைப்புக்களினதும் தலைவர், செயலாளர்களை இந்தக் கலந்துரையாடலில் தவறாது கலந்துகொள்ளுமாறு அறிவிக்கப்பட்டுள்ளது. (எ)

## அமைச்சர் சமரவீர இன்று கிழக்கிற்கு விஜயம்

அக்கரைப்பற்று,டிசெ.19

மட்டக்களப்பு - அம்பாறை மாவட்டங்களின் வெள்ள அனர்த்தங்களை பார்வையிடுவதற்காக சமூக சேவைகள் அமைச்சர் ரவீந்திர சமரவீர இன்று இந்த இரு மாவட்டங்களுக்கும் விஜயம் செய்கிறார்.

இன்று காலை 9 மணிக்கு மட்டக்களப்பு கச்சேரியில் அரச அதிபர் இ.மோனகுருசாமி தலைமையில் நடைபெறும் கூட்டத்தில் அமைச்சர் கலந்துகொள்வார். மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர்களும் இதில் கலந்துகொள்வர்.

அம்பாறை மாவட்டத்துக்கு விஜயம் செய்யும் அமைச்சர், கல்முனை, சம்மாந்துறை, பொத்துவில் ஆகிய இடங்களைச் சென்று பார்வையிடுவார். திருகோணமலை மாவட்டத்துக்கும் அமைச்சர் செல்லவிருக்கிறார். (எ)

# இராணுவத்தின் ஒரு பிரிவாக புலிகளை இணைத்துக்கொள்ளலாம்

## விக்கிரமபாகு தெரிவித்த யோசனை

கொழும்பு,டிசெ.19

சமாதானப் பேச்சுக்கள் வெற்றியடைந்து தீர்வுகள் அமுல்படுத்தப்படும்போது விடுதலைப் புலிகளின் இராணுவப் பிரிவினரையும் அரசாங்கம் தமது இராணுவத்தின் ஒரு பிரிவினராக இணைத்துக்கொள்ள வேண்டும்.

நவசமாஜக் கட்சியின் தலைவர் கலாநிதி விக்கிரமபாகு கருணாரத்ன நேற்று நடத்திய பத்திரிகையாளர் மாநாட்டில் இவ்வாறு தெரிவித்தார்.

இப்பிரிவிற்கு பராராஜசேகரன், பண்டாரவன்னியன் அல்லது சங்கிலியன் பிரிவு எனப் பெயரிடலாம். நாட்டின் பாதுகாப்பினை மேலும் உறுதி செய்யும் நடவடிக்கையாக இது அமையும் எனவும் அவர் சொன்னார். (ஐ)

# நெதர்லாந்திலிருந்து 45 பேர் திருப்பி அனுப்பப்பட்டனர்

நெதர்லாந்து சென்று அங்கே சட்டவிரோதமாக இருந்துவந்த 45 இலங்கையர்களை நெதர்லாந்து திருப்பி அனுப்பியிருக்கிறது.

நெதர்லாந்து அரசாங்கத்திற்கும் இலங்கை அரசாங்கத்திற்கும் இடையே நடைமுறையில் இருக்கும் ஒப்பந்தம் ஒன்றின் அடிப்படையில் இரு அரசாங்கங்களின் அதிகாரிகளும் இலங்கையில் உள்ள நெதர்லாந்து தூதரகமும் கலந்து பேசியே இந்த 45 பேரையும் அவசர பிரயாண ஆவணங்களுடன் இலங்கைக்குத் திருப்பி அனுப்பினர்.

இவர்களை உறவினர்களும் நண்பர்களும் கட்டுநாயக்கா விமான நிலையத்தில் வரவேற்றுத் தம்முடன் அழைத்துச் சென்றனர்.

இப்படி நெதர்லாந்துத் தூதரக அறிக்கை ஒன்று தெரிவிக்கிறது. இன்னும் பலர் இப்படி திருப்பி அனுப்பப்பட இருக்கிறார்கள் என்றும் அறிக்கையில் குறிப்பிடப்பட்டிருக்கிறது. (ஐ)

## திருவாசக முற்றோதல்

தென்மராட்சி திவ்ய ஜீவன சங்கத்தினர் துன்னாலை ஸ்ரீ வல்லிபுர ஆழ்வார் தேவஸ்தானத்தில் நடைபெறும் மார்கழி ஞாயிறு உற்சவங்களில் திருவாசக முற்றோதலை நிகழ்த்தவுள்ளனர். (எ-117)




நேற்று யாழ்.மத்திய கல்லூரி - கொழும்பு ஆனந்தாக் கல்லூரி அணிகளுக்கிடையில் நடைபெற்ற உதைபந்தாட்டப்போட்டியின்போது எடுக்கப்பட்ட படங்கள்.

யாழ்.மத்திய கல்லூரி அணியை முதலாவது படத்திலும், ஆனந்தாக் கல்லூரி அணியை இரண்டாவது படத்திலும் காணலாம். (படங்கள் : வசந்தன்)

புதிய முகாம்கள் அமைத்து பயிற்சி நடக்கிறது

# அல்கெய்டா அச்சுறுத்தல் ஆப்கானில் தொடர்கிறது!

## ஐ.நா. கண்காணிப்புக் குழு அறிக்கை

லண்டன்,டிசெ.19

ஆப்கானிஸ்தானில் இன்னும் அல்கெய்டா அமைப்பின் செயற்பாடுகள் இடம்பெற்றுவருவதாகவும் அங்கு அவர்களின் அச்சுறுத்தல் நீங்கவில்லையெனவும் ஐ.நா. குழு ஒன்று தெரிவித்துள்ளது.


கந்தகாரில் உள்ள அமெரிக்கப் படைத்தளம்

கடந்த ஒரு வருட காலமாக ஆப்கானில் தலிபான் மற்றும் அல்கெய்டா அமைப்புகளுக்கு எதிராக அங்குள்ள பன்னாட்டுப் படைகள் எடுத்துவரும் நடவடிக்கைகளைக் கண்காணித்து வரும் ஐ.நா.குழுவே இந்தத் தகவலை வெளியிட்டுள்ளது. இது தொடர்பாக அந்தக் குழு அறிக்கை ஒன்றையும் வெளியிட்டுள்ளது. கடந்த ஒரு வருடத்தில் அந்தக் குழு வெளியிடும் மூன்றாவது அறிக்கை இது.

கிழக்கு ஆப்கானிஸ்தானில் அல்கெய்டா அமைப்பு புதிய பயிற்சி முகாம்களை அமைத்துச் செயற்பட்டு வருகின்றது. புதிதாக அமைப்பில் சேர்ந்து கொண்டவர்களுக்கு அங்கு ஆயுதப் பயிற்சி வழங்கப்படுகின்றது - என்று ஐ.நா. குழுவின் அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

இந்தப் புதிய முகாம்கள் ஆப்கானிஸ்தானின் புதிய அரசுக்கு கணிசமான அச்சுறுத்தல்களை ஏற்படுத்தும் என்று ஐ.நா. குழுவின் தலைவர் மைகல் சன்டலர் தெரிவித்தார்.

அல்கெய்டாவினரின் புதிய முகாமகள் பாகிஸ்தான் எல்லையோரத்தில் அமைந்துள்ள கிராமங்கள் மத்தியிலேயே இயங்குவதாகவும் அவர் கூறினர். இந்தக் கிராமங்களில் இஸ்லாமியக் கடும் போக்காளர்களின் கட்டுப்பாட்டில் உள்ள பல்வேறு சமூகங்களைச் சேர்ந்த மக்கள் வசிக்கிறார்கள் இதனால் இப்பகுதிகளில் பன்னாட்டுப் படையினர் தீவிர நடவடிக்கைகளை எடுக்க முடியாமல் இருக்கின்றனர்.

அல்கெய்டா அமைப்பின் மீது இப் பகுதி மக்கள் அனுதாபம் கொண்டவர்களாக இருப்பதனால் பன்னாட்டுப படையினரின் செயற்பாடுகளுக்கு அவர்கள் உதவியளிப்பதில்லை - என்று ஐ.நா. குழுவின் அறிக்கை விவரமாக எடுத்துரைக்கின்றது.

வெளிநாடுகளில் இருந்து பின்லேடனின் தீவிரவாத வலைப் பின்னலுக்கு இன்னும் போதியளவு நிதி உதவி கிடைத்து வருவதாகவும் ஐ.நா.குழு நம்புகின்றது.

இதேவேளை -

பாகிஸ்தான் எல்லையோரப் பகுதிகளான பெஷாவர், ஹைபர் பாஸ், ஜலலாபாத் ஆகிவற்றின் அருகே அமைந்துள்ள எல்லை யோரக் கிராமங்களிலேயே அல்கெய்டாவினரின் புதிய முகாம்கள் இருக்கின்றன என்றும் -

இந்த முகாம்களை அவர்கள் அடிக்கடி இடம்மாற்றி வருவதால் அவற்றின் மீது சரியான முறையில் தாக்குதல் நடத்துவதற்கு முடியாமல் இருப்பதாகவும் -

ஐ.நா.குழுவின் தலைவர் மைக்கல் தெரிவித்தார்.

அல்கெய்டா அமைப்பின் செயற்பாடுகளை முடக்குவதற்கு உலக நாடுகளின் ஒருங்கிணைந்த நடவடிக்கை தேவை என்றும் குழுவின் அறிக்கை பரிந்துரை செய்துள்ளது. (ம)

# சதாம் அகற்றப்பட்டால் அடுத்து என்ன செய்வது?

## எதிர்ப்பாளர்கள் லண்டனில் கூடி ஆராய்வு

லண்டன்,டிசெ.19

ஈராக்கில் ஆட்சி அதிகாரத்திலிருந்து சதாம் ஹுசைன் அகற்றப்பட்டால் அங்கு மேற்கொள்ள வேண்டிய நடவடிக்கைகள் குறித்து சதாமுக்கு எதிரான குழுவினர் லண்டனில் கூடி ஆராய்ந்துள்ளனர்.

பெரும் களேபரத்துக்கு மத்தியில நான்கு நாள்கள் இந்தக் கூட்டம் தொடர்ந்து நடந்தது. கடும் காரசாரமான விவாதங்கள் இடம்பெற்றன. இறுதியில் ஈராக்கில் ஆட்சி மாற்றம் ஏற்பட்டால் அடுத்த இரண்டு வருடகாலத்துக்கு அங்கு சட்டம் ஒழுங்கை நிலைநாட்டுவதற்கும் அரசியல் ஜனநாயகத்தை ஏற்படுத்துவதற்குமான இரு திட்ட ஆவணங்களைக் கூட்டம் அங்கீகரித்தது.

இந்த நிர்வாக அலுவல்களைக் கவனிப்பதற்கென 75 உறுப்பினர்களைக் கொண்ட ஒரு குழுவும் நியமிக்கப்பட்டுள்ளது. இந்தக் குழு திட்டமிடப்பட்டுள்ள உண்மையான குழுவிலும் பெரியது.

உலக அரங்கில்

அமெரிக்காவின் ஆதரவிலேயே இந்தக் கூட்டம் நடைபெற்றுள்ளது. "ஈராக்கிய மக்களுக்கு நல்லதொரு எதிர்காலத்தைப் பெற்றுத்தர அமெரிக்கா அவர்களுடன் இணைந்து செயற்படும்' - என்று அதிபர் புஷ்ஷின் விசேட தூதரான சல்மே ஹாலில் சாட் தெரிவித்தார். (ம)


கூட்டத்தின் ஆரம்ப நாள் நிகழ்வின் போது எடுக்கப்பட்ட படம்.

# உடனடிப் போர் இல்லை: ஈராக் ஆயுத அறிக்கை தொடர்பான அமெ. கருத்து இன்று வெளியாகும்!

நியூயோர்க்,டிசெ.19

ஈராக்கில் உள்ள பேரழிவு ஆயுதங்கள் பற்றிய விவரங்களை அறிவிக்கக் கோரும் ஐ.நா.பிரேரணையை ஈராக் மீறிவிட்டதாக அமெரிக்கா அறிவிக்கவுள்ளது. அனேகமாக இன்று இந்த அறிவிப்பு வெளியாகலாம் என்று நியூயோர்க்கிலிருந்து வெளியாகும் பத்திரிகைகள் தெரிவித்துள்ளன. ஆனாலும், உடனடியாக ஈராக் மீது போர் தொடுக்கப்படாது என்றும் தெரிகிறது.

இந்த மாத ஆரம்பத்தில் தனது ஆயுதங்கள் பற்றிய முழு விவரங்கள் அடங்கிய 12 ஆயிரம் பக்க அறிக்கையை ஈராக் ஐ.நா.விடம் சமர்ப்பித்திருந்தது. இந்த அறிக்கை அப்படியே ஐ.நா.பாதுகாப்புச் சபையில் அங்கம் வகிக்கும் நிரந்தர உறுப்பு நாடுகள் ஐந்திடமும் சமர்ப்பிக்கப்பட்டிருந்தது.

இந்த அறிக்கையை ஆராய்ந்த அமெரிக்கா அது குறித்த தனது கருத்தை ஐ.நா.ஆயுதப் பரிசோதனைக் குழுத் தலைவர் ஹன்ஸ் பிள்க்ஸிடம் இன்று வியாழக்கிழமை கையளிக்க உள்ளதாக 'நியூயோர்க் ரைம்ஸ்' பத்திரிகை நேற்றுத் தெரிவித்திருந்தது. மூத்த அதிகாரி ஒருவரை மேற்கோள் காட்டி இந்தச் செய்தியை அது வெளியிட்டிருந்தது.

'வோஷிங்ரன் போஸ்ட்' பத்திரிகை அமெரிக்காவின் கருத்து நாளை வெள்ளிக்கிழமையே வெளியாகும் என்று தெரிவித்திருந்தது. 'வோல் ஸ்ரீட் ஜேர்னல்' பத்திரிகை, அமெரிக்காவின் கருத்து இன்று வெளியாகும என்றும் -


'ஐ.நா. பிரேரணையை ஈராக் முழுமையாக மீறிவிட்டது என்று தனது கருத்தில் அமெரிக்கா தெரிவிக்க இருக்கிறது' என்றும் தெரிவித்திருந்தது.

ஆனால், மூன்று பத்திரிகைகளும், ஈராக் மீது உடனடிப் போர் தொடுப்பதற்கான சாத்தியம் இல்லை என்றே அதிகாரிகள் தெரிவித்ததாகக் குறிப்பிட்டுள்ளன. போருக்குப் பதிலாக ஐ.நா. மூலம் ஈராக்குக்கு மேலும் அழுத்தங்களைக் கொடுப்பதற்கே அமெரிக்கா தீர்மானித்துள்ளதாகவும் அவை கூறியுள்ளன. (ம)

# எதிர்ப்பு ஏவுகணைகளை தயாரிக்க புஷ் உத்தரவு!

வாஷிங்ரன்,டிசெ.19

அமெரிக்காவைப் பாதுகாப்பதற்குத் தேவையான வரையறுக்கப்பட்ட பாதுகாப்புத் திட்டத்தின்கீழ் ஏவுகணை எதிர்ப்பு ஏவுகணைகளை உற்பத்தி செய்யுமாறு தனது இராணுவத்திற்கு அதிபர் புஷ் உத்தரவிட்டுள்ளார்.



எதிர்ப்பு ஏவுகணைத் திட்டம் தொடர்பான வரைபடம்

அதிபரின் உத்தரவில் 2004ஆம் ஆண்டுக்குள் ஏவுகணைகளைப் பின்பற்றிச் சென்று தாக்கி அழிக்கவல்ல 10 எதிர்ப்பு ஏவுகணைகளைத்( Anti - missile) தயாரிக்கும்படி கேட்கப்பட்டுள்ளது.

இந்த நடவடிக்கை அமெரிக்காவின் சிறந்த பாதுகாப்புக்கான முதல் அடியாக இருக்கும் என்று இராணுவத்துக்கு எழுதிய அறிக்கையில் புஷ் குறிப்பிட்டுள்ளார்.

அமெரிக்கா பசுபிக் கடலில் நடத்திய எதிர்ப்பு ஏவுகணைச் சோதனை தோல்வியில் முடிவடைந்த ஒரு நாளின் பின்னர் புஷ்ஷின் இந்த உத்தரவு வெளியாகியுள்ளது.

இத்தகைய எதிர்ப்பு ஏவுகணைகளை உற்பத்தி செய்வதில்லை என்ற ஒப்பந்தம் ஒன்றில் அமெரிக்காவும் சோவியத் யூனியனும் 1972இல் கைச்சாத்திட்டிருந்தன. ஆனால், இந்த ஒப்பந்தத்தில் இருந்து கடந்த ஜூன் மாதம் அமெரிக்கா ஒருதலைப்பட்சமாக வெளியேறியது. அதன் பின்னர் எதிர்ப்பு ஏவுகணைகளை உருவாக்கும் முயற்சிகளில் அது ஈடுபட்டது. எனினும், பல முயற்சிகள் தோல்வியில் முடிவடைந்தன.

தற்போதைய புஷ்ஷின் உத்தரவுப்படி இந்த சோதனை முயற்சிகள் தீவிரப்படுத்தப்படும். இந்தத் திட்டத்தின்கீழ் தரையிலிருந்தும் கடலிலிருந்தும் மற்றும் பிற இடங்களிலிருந்தும் இலக்குகளைத் தாக்கவரும் ஏவுகணைகளை வழிமறித்து அழிக்கும் வகையில் எதிர்ப்பு ஏவுகணைகள் உருவாக்கப்படும். 2004ஆம் ஆண்டுக்குள் இத்தகைய 10 எதிர்ப்பு ஏவுகணைகள தயாரிக்கப்படும். அடுத்த 10 ஆண்டுகளுக்கு இந்தத் திட்டம் தொடரும். (ம)

# டில்லி நாடாளுமன்றத் தாக்குதல்; மூவருக்கு மரணதண்டனை விதிப்பு

புதுடில்லி,டிசெ.19

இந்திய நாடாளுமன்றம் மீது கடந்த வருடம் நடத்தப்பட்ட தீவிரவாதத் தாக்குதல் தொடர்பான வழக்கில் தாக்குதலுக்கு உதவியதாகக் குற்றம் நிருபிக்கப்பட்ட மூவருக்கு புதுடில்லி விசேட நீதிமன்றம் மரண தண்டனை விதித்துள்ளது.

கடந்த டிசெம்பரில் நடந்த நாடாளுமன்றத் தாக்குதலின்போது 9 போ கொல்லப்பட்டனர். தாக்குதலை நடத்திய 5 தீவிரவாதிகளுக்கு உதவியதாகக் குற்றஞ்சாட்டப்பட்ட கல்லூரி ஆசிரியர் ஒருவர் உட்பட மூவர் மீதான குற்றச்சாட்டுக்களும் நிரூபிக்கப்பட்டதாக கடந்த திங்கட்கிழமை நீதிமன்றம் அறிவித்தது. தீர்ப்பு நேற்று வெளியிடப்பட்டது.

பழ வியாபாரியான முகமட் அவ்ஸால் (வயது 35), டில்லி பல்கலைக்கழக மாணவன் ஷூகட் ஹுசைன் மற்றும் டில்லி கல்லூரி ஆசிரியர் கிலானி ஆகியோருக்கே மரணதண்டனை விதிக்கப்பட்டுள்ளது. இவர்கள குறித்துப் பொலீஸாருக்கு தகவல் தரமறுத்த பெண் ஒருவருக்கு 5 வருட சிறைத் தண்டனையும் விதிக்கப்பட்டது. (ம)

# பங்களாதேஷ் - பர்மா இடையே நேரடிப் பாதை

## இரு நாட்டுத் தலைவர்களும் பேச்சு

டாக்கா,டிசெ.19

பங்களாதேஷுக்கும் மியான்மருக்கும் (பர்மா) இடையே முதற்றடவையாக நேரடியான வீதித் தொடர்பு ஒன்றை ஏற்படுத்துவதற்கான சாத்தியங்கள் குறித்துப் பரிசீலிக்க இரு தரப்புக்களும் இணங்கியுள்ளன.

மியான்மரின் இராணுவ ஆட்சியாளர் ஜெனரல் தான் ஷ்வே, வரலாற்று ரீதியான விஜயம் ஒன்றை மேற்கொண்டு நேற்றுமுன்தினம் பங்களாதேஷ் வந்தார்.

பிரதமர் காலிதா ஷியாவைச் சந்தித்துப் பேச்சு நடத்தினார். அப்போதே இரு நாடுகளுக்கும் இடையில் நேரடிப பாதை ஒன்றைத் திறப்பது குறித்துப் பரிசீலிக்க இணக்கம் காணப்பட்டது.

தெற்காசியாவுக்கும் தென்கிழக்கு ஆசியாவுக்கும் இடையிலான பாலமாக பங்களாதேஷின் அமைவிடம் காணப்படுகின்றது. எனவே பங்களாதேஷுடன் நேரடிப் பாதை ஒன்றைப் திறப்பதன் மூலம் தெற்காசியப் பொருளாதார வலயத்துக்குள் இலகுவில் நுழைந்து கொள்ள முடியும் என்று மியான்மர் இராணுவ அரசு கருதுகின்றது.

இரு தலைவர்களிடையேயான பேச்சுக்களும் சுமுகமாகவும் இணக்கமாகவும் நடைபெற்றதாக வெளிவிவகார அலுவலகப் பேச்சாளர் தெரிவித்தார். பொருளாதார மற்றும் தொழில்நுட்ப விடயங்களில் இருநாடுகளதும் பரஸ்பர ஒத்துழைப்பை மேலும் விரிவாக்கவும் இணக்கம் காணப்பட்டது என்று அவர் கூறினார். (ம)


காலிதா ஷியாவும் மியான்மர் இராணுவ ஆட்சியாளரும்.....

## விவரம் சேகரிப்பு

யாழ்.கல்வி வலயத்தைச் சேர்ந்த அனைத்துப் பாடசாலைகளினதும் அதிபர்கள் தமது பாடசாலையில் உள்ள அதிபர், ஆசிரியர் மற்றும் ஆசிரியரல்லாத ஊழியர் பற்றிய விவரங்களை இந்த மாதச் சம்பளப் பட்டியலில் உள்ளவாறு பதிவுசெய்து எதிர்வரும் 24ஆம் திகதிக்கு முன்னதாக வலயக் கல்வி அலுவலகத்துக்கு அனுப்பிவைக்குமாறு வலயக்கல்விப் பணிப்பாளர் கேட்டுள்ளார். (ரி)

# சின்மயா மிஷன் ஏற்பாட்டில் இலவச மருத்துவ முகாம்

## சனிக்கிழமை மானிப்பாயில்

யாழ்ப்பாணம்,டிசெ.19

இலங்கை சின்மயா மிஷன் அமைப்பினரால் மானிப்பாய் கிறீன் ஞாபகார்த்த ஆஸ்பத்திரியில் எதிர்வரும் சனிக்கிழமை இலவச மருத்துவ முகாம் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. அன்றையதினம் முற்பகல் 9 மணிக்கு மருத்துவ முகாம் ஆரம்பமாகும். அன்று முழுநாளும் இச்சேவை இடம்பெறும்.

காது, மூக்கு, தொண்டை, குழந்தைகள் மருத்துவம், பொது மற்றும் இயன் வைத்தியம் ஆகிய துறைகளில் நிபுணத்துவம் பெற்ற மருத்துவ நிபுணர்கள் இச்சிகிச்சை முகாமில் சேவை வழங்கவுள்ளனர்.

இச்சேவையின்போது சகல வசதிகளும் கொண்ட நடமாடும் ஆய்வுகூடம் ஒன்றும் சேவையில் ஈடுபடுத்தப்படவுள்ளது.

அத்துடன் கேட்கும் சக்தியை அதிகரிக்கும் கருவிகள் செவிப்புலனற்றவர்களில் பொருத்தமானவர்களுக்கு இல்வசமாக வழங்கப்படவுள்ளது.

இந்த இலவச மருத்துவ முகாமில் பயன்பெற விரும்பும் நோயாளர்கள் இன்று வியாழக்கிழமையும், நாளை வெள்ளிக்கிழமையும் மானிப்பாய் லயன்ஸ் கழக அலுவலகத்தில் பதிவுகளை மேற்கொள்ளலாமென அறிவிக்கப்பட்டுள்ளது. (ஒ)

## வலி.தெற்கில் ஒருங்கிணைப்பு குழுக்கூட்டம்

வலிகாமம் தெற்கு,டிசெ.19

வலிகாமம் தெற்கு பிரதேச செயலகத்தின் ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டமும், விவசாயக் குழுக்கூட்டமும் நாளை வெள்ளிக்கிழமை நடைபெறவுள்ளது.

பிரதேச செயலக மாநாட்டு மண்டபத்தில் உதவிப் பிரதேச செயலர் த.தேவராஜன் தலைமையில் கூட்டம் நடைபெறும்.

(ஒ-152)


## பதவி வெற்றிடங்கள்

கிளிநொச்சியில் இயங்கும் பிரபல வர்த்தக நிலையத்திற்கு கீழ்க்காணும் வெற்றிடங்கள் நிரப்பப்படவுள்ளன.

1) சிட்டை லிகிதர் (Bill Clerk)
2) விற்பனையாளர் (Salesman)

உங்கள் சுயவிவரக் கோவையினை 31.12.2002இற்கு முன்னதாக கீழ்க்காணும் முகவரிக்கு அனுப்பிவைக்கவும்.

விளம்பர இல. 1724,
C/o உதயன் பணிமனை.
(11884)


## பாராட்டி வாழ்த்துகின்றோம்



கத்தாப்படி வீதி, நுணாவில் மத்தி, சாவகச்சேரியைச் சேர்ந்த
திரு.திருமதி பொன்னுச்சாமி - மகேஸ்வரி தம்பதிகளின் சிரேஷ்ட புதல்வி

### திருமதி சுதாகரன் சுமதி
(செல்வி B.A.)

அவர்கள் இன்று (19.12.2002) வியாழக்கிழமை நடைபெறும் யாழ்.பல்கலைக்கழகப் பட்டமளிப்பு விழாவில் கலைமாணி (B.A.) பட்டம் பெறுவதை மனமாரப் பாராட்டி வாழ்த்துகின்றோம். அவர்கள் சகல செல்வங்களும் பெற்று மேன்மேலும் பல சிறப்புக்கள் பெற எல்லாம்வல்ல ஸ்ரீஜெய ஞான துர்க்கை அம்மன் அருள் புரிவாராக.

பாராட்டுவோர்: அப்பா, அம்மா,
தம்பி, தங்கைகள்,
பொன்னுச்சாமி குடும்பம்.
(11867)

## 3ஆம் ஆண்டு நினைவஞ்சலி



மண் மகிழ 10 - 04 - 1972
கண் நெகிழ 22 - 12 - 1999

### செல்வன் நடராஜக்குருக்கள் ரவிச்சந்திர சர்மா

திதி: 19.12.2002 பூரணை

மூன்று ஆண்டுகள் சென்றாலும் உன்
நினைவுகள் எம் நெஞ்சைவிட்டு அகலாது.

அம்மா, அப்பா,
தங்கை மற்றும்
குடும்ப உறவினர்கள்.

முதலாம் கட்டை,
கல்வயல், சாவகச்சேரி. (11904)

## இரண்டாம் ஆண்டு நினைவஞ்சலி



மண்ணுலகில் 10 - 02 - 1936
விண்ணுலகில் 10 - 01 - 2001

### அமரர் பூலோகசுந்தரம் வைத்தியநாதன்
(ஓய்வுபெற்ற தொலைத் தொடர்பு இயக்குநர்)

திதி: 19.12.2002

என்றும் உங்கள் நீங்காத நினைவுடன்
உங்கள் ஆத்மசாந்திக்குப் பிரார்த்திக்கின்றோம்.

என்றும் உங்கள் நினைவுடன்:
மனைவி, மக்கள்,
மருமக்கள், பேரப்பிள்ளைகள்.

வை.தனநாதன்,
சொந்தப்புலம், தெல்லிப்பழை.
(11885)

## 31ஆம் நாள் நினைவஞ்சலி



பிறப்பு 25 - 08 - 1930
இறப்பு 19 - 11 - 2002

### அமரர் நயினை விஸ்வலிங்கம் இராசதுரைப் பத்தர்

அன்புக்கோர் அணிகலமாய் பண்புக்கோர் இருப்பிடமாய்
அவனியிலே வாழ்ந்த எம் அன்புத் தெய்வமே! ஐயாவே!
உங்களது ஆத்மா சாந்திபெற ஆண்டவனைப் பிரார்த்திக்கிறோம.
ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!

இன்று (19.12.2002) வியாழக்கிழமை எமது இல்லத்தில் அன்னாரது நினைவாக நடைபெறும் ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் மதியபோசனத்திலும் கலந்துகொள்ளுமாறு உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

அன்பு மனைவி,
பிள்ளைகள்,
மருமக்கள்.

53, புளியடி வீதி,
கொக்குவில் மேற்கு, கொக்குவில். (11861)

## நீங்காத நினைவில் ஈராண்டு



தோற்றம் 04 - 08 - 1945
மறைவு 09 - 01 - 2001

### திருமதி யோகமலர் நடராசா

திதி: 19.12.2003

எம் இதயத்தின் ஒளிவிளக்கு
எம் இல்லத்தின் அன்புக்கோலம்
பூவோடும் பொட்டோடும்
இறையடி கலந்த நன்னாள் மார்கழிப் பூரணை.
அவரின் ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கும்:

கணவர், மகள்,
மருமகள்.

"லிங்கவாசா"
நெல்லியடி, கரவெட்டி.
(11702)


## மாபெரும் சிறப்புத் தள்ளுபடி

கிறிஸ்மஸ் புதுவருடத்தை முன்னிட்டு

## மெக்ஸ் புடவை மாளிகை

நிறுவனத்தாரின் அதிரடி மலிவு விற்பனை 06.12.2002முதல் 31.12.2002வரை

* சுபமுகூர்த்தப் பட்டுப்புடைவைகள் உட்பட இந்தியாவில் இருந்து இறக்குமதி செய்யப்பட்ட நவீன சாறி வகைகளும் பிளவுஸ் தினிசுகளும்.
* நங்கையர் விரும்பும் ஸ்கேட் அன் பிளவுஸ், புறொக்ஸ், பினபோம், சல்வார்கமிஸ்.
* ஆடவர் விரும்பும் சேட், Tசேட், ஜீன்ஸ், சூட்டிங்.
* சிறுவர், சிறுமியர்களுக்கான நவீன ஆடைத் தெரிவுகளுக்கும் இன்றே நாடுங்கள்:



மெக்ஸ் புடவை மாளிகை
இல.34, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.
(11460)


உ
சாமியே சரணம் ஐயப்பா!



## மண்டல பூர்த்தி மகரஜோதி பெருவிழா

### அகில இலங்கை யாழ்.மாவட்டம்
### 18 ஆம் படி குருசாமி அ.இந்துதாசன் - தாவடி

ஐயப்பன் அடியார்களே!

எதிர்வரும் (21.12.2002) சனிக்கிழமை பிற்பகல் 2.00மணிமுதல் மாலை 6.00 மணிவரை காயத்ரிபீடம் பிரம்மஸ்ரீ தா.மகாதேவக்குருக்களும் அவரது சிவாச்சாரியார்களும் இணைந்து நடத்தும் -

❑ விநாயகர் வழிபாடு, பஜனை, சகஸ்ரநாம அர்ச்சனை, படிபூஜை என்பன வழமைபோல் இந்த வருடமும் நடைபெற ஸ்ரீ ஐயப்பன் திருவருள் கைகூடியுள்ளது.

ஐயப்ப பக்தர்கள் அனைவரும் இந்த விழாவில் கலந்து ஐயப்பன் திருவருளுக்குப் பாத்திரமாகுமாறு அன்புடன் அழைக்கப்படுகின்றனர்.

மானிப்பாய் வீதி,
தாவடி தெற்கு,
கொக்குவில்.

"ஐயப்பா பந்தல் சேவை"
அ.இந்துதாசன் (குருசாமி).

சாமியே சரணம் ஐயப்பா!

☞ இந்த மகரஜோதிப் பெருவிழாவில் யாழ். சபரீச ஐயப்பன் தேவஸ்தான குருசுவாமி ஸ்ரீ. ஹரிகரசுத சர்மா அவர்களும் ஐயப்ப மாலையணிந்த பக்தர்களும் இணைந்து நிகழ்த்தும் பஜனையும் இடம்பெறும்.

பிரசுர அன்பளிப்பு: காரை மணிகண்டன்
(11933)

உதயன்

## காணாமற் போனோர் விவகாரம்

"படையினரால் கைதுசெய்யப்பட்டு காணாமற் போனோர் தொடர்பாக அடுத்த கட்டப் பேச்சிலாவது பிரஸ்தாபித்து உரிய பதிலைப் பெற்றுத் தாருங்கள்!"

வடபகுதியில் படையினரால் கைதுசெய்யப்பட்ட பின்னர் காணாமற்போனோரின் பாதுகாவலர் சங்கமும், அன்னையர் முன்னணியும் இணைந்து தமிழீழ விடுதலைப் புலிகளின் தலைவர் வே.பிரபாகரனிடம் இவ்வாறு கோரியுள்ளன.

1995 பிற்பகுதியில் குடாநாட்டில் கணிசமான பிரதேசம் இராணுவத்தின் கட்டுப்பாட்டில் மீண்டும் வந்தது.

குடாநாட்டில் வலிகாமம் பகுதியிலிருந்த மக்கள் இராணுவ நடவடிக்கைகளை அடுத்து வடமராட்சி, தென்மராட்சிப் பிரதேசங்களுக்கும் வன்னிக்கும் இடம்பெயர, ஆள்கள் இல்லாத வலிகாமம் பகுதியை இராணுவம் கைப்பற்றியது.

மீண்டும் 1996 ஏப்ரலில் வலிகாமத்திலிருந்து வடமராட்சி, தென்மராட்சிப் பிரதேசத்தை நோக்கி இராணுவ நடவடிக்கை நகர்வு ஆரம்பமானது.

மக்களை அஞ்சவேண்டாம் என்றும் மக்களுக்கு அநீதி இழைக்கப்படமாட்டாது என்றும் இராணுவம் அறிவித்தது. "எங்களை நம்பி வாருங்கள். உங்களுக்குத் தகுந்த பாதுகாப்புத் தருவோம்!" - என்று இராணுவத் தரப்பில் விடுக்கப்பட்ட அறிவிப்பை நம்பி வந்த மக்களில் பல நூற்றுக்கணக்கானோரின் கதி அதோ கதியாகிவிட்டது.

வலிகாமத்தில் அப்பாவிகள் - பெரும்பாலும் இளைஞர்கள் - காரண, காரியமின்றிப் பல நூற்றுக் கணக்கில் கைதானார்கள். அதன்பின் அவர்கள் என்னவானார்கள் என்பது தெரியாமற்போயிற்று.

வலிகாமத்தில் அப்போது நிலைகொண்டிருந்த 51ஆவது டிவிஷன் படையணியின் கட்டளை அதிகாரியும், பலாலியில் நிலைகொண்டிருந்த வடபகுதி இராணுவத் தளபதியும் அப்பதவிகளிலிருந்தும் இடமாற்றம் செய்யப்படும்வரை - 1996 ஒக்ரோபர்வரை - கைதாகிக் காணாமற்போனோர் கதை தொடர்ந்தது.

அப்பாவித் தமிழ் இளைஞர்களை இருந்த இடம் தெரியாமல் - அடி தெரியாமல் அழித்த - அந்த இராணுவ அதிகாரிகளில் ஒருவர், பின்னர் அவுஸ்திரேலியாவுக்கான தூதுவர் என்ற இராஜதந்திரப் பதவி வழங்கிக் கௌரவிக்கப்பட்டார். மனித உரிமைகள் அமைப்புகள் பல கடும் ஆட்சேபனை தெரிவிக்க, அவற்றை ஒதுக்கிவிட்டு, தமிழ் இளைஞர்களை அடையாளம் தெரியாமல் ஒழித்த கெட்டித்தனத்துக்காக அந்தப் பதவிப் பரிசை வழங்கிப் பெருமைகொண்டது ஸ்ரீலங்கா அரசு.

காணாமற்போனோர் விவகாரத்துக்குப் பொறுப்பேற்க வேண்டிய அப்போதைய வடபகுதி இராணுவத் தளபதி குறித்து இப்போது சில செய்திகள் வெளியாகியுள்ளன.

நாகமை, குருந்தலாவையில் வசிக்கும் இந்த ஓய்வுபெற்ற இராணுவ மேஜர் ஜெனரலின் வீட்டை கடந்த சனியன்று திடீர் முற்றுகையிட்டு தேடுதல் நடத்திய பொலீஸார், அவரது வீட்டுத் தோட்டத்தில் புதைத்து வைக்கப்பட்டிருந்த இரண்டு துப்பாக்கிகளையும் பெருந்தொகையான ரவைகளையும் மீட்டிருக்கின்றனர். ஆனால், சம்பந்தப்பட்ட இராணுவ அதிகாரி மட்டும் கைதாகாமல் வெளியே இருக்கின்றார்.

1980களின் பிற்பகுதியில் - தென்னிலங்கையில் ஜே.வி.பி. தீவிரவாதம் கையோங்கியிருந்த வேளையில் - ஜே.வி.பியுடன் தொடர்புடையவர்கள் என்று சந்தேகிக்கப்படும் இளைஞர்கள் ஆயிரக்கணக்கில் படுகொலை செய்யப்பட்டனர்; அல்லது கைதாகிக் காணாமற்போயினர்.

அத் 'திருவிளையாடல்'களிலும் பெரும் பகுதிக்குப் பொறுப்பாயிருந்தவர் இந்த இராணுவ அதிகாரி என்றுதான் தகவல்கள் கூறுகின்றன.

அவுஸ்திரேலியாவில் இராஜதந்திர சீருடைக்குள் ஒளிந்திருக்கும் இராணுவ அதிகாரியையும், அவரது மேலதிகாரியாக அப்போது பணியாற்றிய வடபகுதி இராணுவத் தளபதியையும் சட்டத்தின் முன் நிறுத்தி, உரிய முறையில் விசாரணைகளை நடத்தினால் அடங்கிப் போன பல உண்மைகள் அம்பலத்துக்கு வரும். காணாமற்போனோர் பிரச்சினைக்கு ஒரு முடிவுகிட்டும் என எதிர்பார்க்கலாம்.

சமாதானப் பேச்சுக்களில் இந்த விடயத்தை வலியுறுத்துவது, காணாமற்போனோர் விவகாரத்துக்கு ஒரு முற்றுப்புள்ளி வைக்க உதவக்கூடும்.

# வடக்குகிழக்கு ஆசிரியர்களுக்கு பயிற்சி வழங்கக் கல்விநிறுவகம்

## புதிதாக அமைப்பது தொடர்பாக ஆராய்வு

கிளிநொச்சி,டிசெ.19

வடக்கு - கிழக்குப் பாடசாலைகளில் கல்விபோதிக்கும் ஆசிரியர்களுக்கு மேலதிக பயிற்சிகளை வழங்க கல்வி நிறுவகம் ஒன்று அமைப்பது குறித்து ஆலோசிக்கப்பட்டு வருகின்றது.

தற்சமயம் மகரகமவில் இயங்கும் தேசிய கல்வி நிறுவகம் வடக்கு - கிழக்குப் பாடசாலைகளில் கல்வி போதிக்கும் ஆசிரியர்களுக்கு மேலதிக பயிற்சிகளைத் தற்சமயம் வழங்கி வருகிறது.

இந்தப் பயிற்சி வழங்கப்படும் நடைமுறைகளில் புறக்கணிப்புகளை வடக்கு - கிழக்கு ஆசிரியர்கள் எதிர்நோக்க வேண்டியிருப்பதாக பல்வேறு முறைப்பாடுகள் தெரிவிக்கப்பட்டு வருகின்றன.

இந்த முறைப்பாடுகள் தொடர்பாக கிளிநொச்சியில் தற்சமயம் நடைபெறும் கல்வி அபிவிருத்தி மாநாட்டில் ஆராயப்பட்டது.

புறக்கணிப்புகள் போன்றவற்றை தவிர்க்க வடக்கு - கிழக்கில் கல்வி போதிக்கும் ஆசிரியர்களுக்கு பயிற்சிகளை வழங்கவும் கல்வித் திட்டங்களை வகுக்கவும் தனியான கல்வி நிறுவகம் ஒன்றை அமைக்க வேண்டும் என்று இக்கூட்டத்தில் கல்வியாளர்கள் வலியுறுத்தினர்.

இதனையடுத்து திருகோணமலையில் மாகாணக் கல்வி அமைச்சில் இந்த நிறுவகத்தை அமைப்பது தொடர்பாக ஆராயப்பட்டுவருகின்றது. (ஒ-3)

## கடல் நீர் உட்புகுந்து விடுவதால்

# மண்டைதீவு வயல்கள் உவராகிவரும் அபாயம்!

## தகுந்த உதவிகளில்லை என விவசாயிகள் கவலை

மண்டைதீவில் உள்ள பல நூற்றுக்கணக்கான ஏக்கர் வயல நிலங்கள் நீண்டகாலமாகப் பயிரிடப்படாது தரிசாகிப் பாழ்பட்டு போயுள்ளதாக மண்டைதீவு விவசாயிகள் தெரிவிக்கின்றனர்.

பன்னிரெண்டு வருடங்களுக்கு மேலாக பயிரிடப்படாத நிலங்களில் கோரைப்புல் பற்றிப்படர்ந்துள்ளது. இந்த வயல் நிலங்களுக்குள் கடல் நீர் பெருக்கெடுத்து புகுகின்றது. இதனால் உவர் நிலமாக இவை மாறிவருகின்றன.

ஒக்ரோபர், நவம்பர் மாதங்களில் கடல் மட்டம் உயர்வதால் காலத்திற்குக் காலம் கடல் நீர் வயல் நிலங்களில் புகுந்துவிடுகிறது.

ஊரிவயல், தில்லைக்குடா, வாகையடி, கம்பன் புலம் மற்றும் ஆலிகாடு சாத்தவாரி வயல் வெளிகளே இதனால் மோசமாகப் பாதிக்கப்பட்டுள்ளன.

இப்பகுதியில் தாழ்நிலக் கடற்கரையோரங்களைச் சுற்றி அமைக்கப்பட்டிருந்த கடல்நீர்த் தடுப்பணைகள் நீண்டகாலமாக பராமரிப்பு இல்லாததாலும், காவலரண்கள் அமைக்கப்பட்டதாலும் வேறு பல காரணங்களாலும் முற்றாகச் சேதமடைந்துள்ளன.

இவற்றின் ஊடாக வரும் கடல்நீர் தீவின் மத்தியில் உள்ள சம்புக் குளம்வரை வந்துவிடுவதை அவதானிக்க முடிகிறது.

இதுமட்டுமன்றி நன்னீரைத் தேக்கிவைக்கும் 'கிராஞ்சி' போன்ற குளங்களும் தூர்ந்து போயுள்ளன.

இதனால் தோட்ட நிலங்களில் உள்ள கிணறுகளும் உவர்த தன்மை அடைந்துள்ளன. நீண்டகாலமாக செய்கை பண்ணப்படாத இந்த நிலங்கள் புதார் முட்காடு மண்டிக் காணப்படுகின்றன.

1991 ஆம் ஆண்டு ஒக்ரோபர் மாதம் நெல்வயல்களில் விதைப்புப் பணிகள் மேற்கொள்ளப்பட்ட வேளையில், இராணுவ நடவடிக்கை ஏற்பட்டது. இதனால் பாதியில் வயல் வேலைகளை விட்டு விட்டு இடம்பெயர்ந்த விவசாயிகள் தற்பொழுது இப்பகுதியில் மீளக்குடியமர்ந்து வருகின்றனர். இருந்தபோதும் இவர்கள் இந்தப் பகுதியில் நெற்பயிர்ச் செய்கையில் ஈடுபட முடியாதுள்ளனர்.

இப்பகுதி விவசாயிகளுக்கு உதவி செய்வதற்கு அரச நிறுவனங்களும் அரசசார்பற்ற நிறுவனங்களும் பெரிய அளவில் ஆர்வங்காட்டுவதாக இல்லை என்று இப்பகுதி விவசாயிகள் தெரிவிக்கின்றனர்.

விவசாயிகள் வறுமைநிலை மற்றும் நீண்டகால கடன் சுமை என்பவற்றால் வயல்களில் களை அகற்றும் பணியைக் கூட மேற்கொள்ள இயலாதவர்களாக உள்ளனர்.

ஆகவே, இப்பகுதிக்கான உதவித்திட்டங்களை உடனடியாக சம்பந்தப்பட்டவர்கள் முன்னெடுக்க வேண்டுமென விவசாயிகள் எதிர்பார்க்கின்றனர். (ஒ-188)

## தமிழகத்திலிருந்து திரும்பி வன்னியில்

# மீளக்குடியமர்ந்தோருக்கு உதவ 10 லட்சம் டொலர் ஒதுக்கீடு

கிளிநொச்சி,டிசெ.19

தமிழகத்தில் இருந்து திரும்பி வன்னியில் மீளக்குடியமரும் மக்களுக்கு புனர்வாழ்வு வழங்க அடுத்தவருடம் 10 லட்சம் அமெரிக்க டொலர்களை அகதிகளுக்கான ஐநா.தூதரகம் ஒதுக்கியுள்ளது.

அந்த அமைப்பின் வன்னிப் பிராந்திய வதிவிடப் பிரதிநிதி கனேக்கோ கசிகீறோ இத்தகவலைத் தெரிவித்தார்.

மீளக்குடியமர்ந்த மக்களுக்கு விவசாய அபிவிருத்திக்காக நெல், பசளைகள் போன்றவற்றை இந்த வருடத்தில் வழங்கியதாகவும் -

அந்த மக்கள் மீளக்குடியமரத் தேவையான உதவிகளை செய்துள்ளதாகவும் - அவர் மேலும் சொன்னார்.

அடுத்த வருடம் மீளக்குடியமரும் மக்களுக்கு உதவ பல்வேறு திட்டங்களை நடைமுறைப்படுத்தவிருப்பதாகவும் -

அத்திட்டங்களுக்கு 10 லட்சம் அமெரிக்க டொலர் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளதாகவும் - அவர் கூறினார். (ஒ-3)

## அக்கராயன் பிரதேசத்தில்

# 2,600 குடும்பங்கள் வெள்ளத்தில் சிக்கின!

நேற்றுமுன்தினம் பெய்த கடும் மழை காரணமாக ஏற்பட்ட வெள்ளத்தால் அக்கராயன் பிரதேசத்தைச் சேர்ந்த 2 ஆயிரத்து 600 குடும்பங்கள் வெள்ளத்தில் சிக்கியுள்ளன. இவை வெளித் தொடர்புகள் இன்றி உள்ளதாக கிளிநொச்சி அரச அதிபர் எஸ்.இராசநாயகம் தெரிவித்தார். வன்னேரிக்குளத்துக்கும் பூநகரிக்கும் இடையில் உள்ள அக்க ராயன் பிரதேசத்துக்குச் செல்லும் பாதைகள் வெள்ளத்தால் மூடப்பட்டுள்ளதால் இந்நிலை ஏற்பட்டுள்ளது என்று அரச அதிபர் தெரிவித்தார்.

வெள்ளத்தால் பாதிக்கப்பட்டுள்ள பரந்தன, வட்டக்கச்சி, உருத்திரபுரம், ஊரியான், மாயவனூர் ஆகிய பகுதிகளிலிருந்து இடம்பெயர்ந்துள்ள ஆயிரத்துக்கும் மேற்பட்ட குடும்பங்களுக்கு மூன்று நாள்களுக்கு சமைத்த உணவு வழங்கப்பட்டுள்ளது. தொடர்ந்து ஒரு வாரத்துக்கு இக்குடும்பங்களுக்கு உலர் உணவு நிவாரணம் வழங்கும்படி பணித்துள்ளதாகவும் அரச அதிபர் மேலும் கூறினார்.

வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட ஏனைய பிரதேசங்களின் புள்ளி விவரங்கள் இன்னமும் கிடைக்கவில்லை என்றும் -

பாதிக்கப்பட்டவர்களின் எண்ணிக்கை மேலும் அதிகரிக்கும் என்றும் - அவர் மேலும் சொன்னார். (ஒ-3)

### நாளை

மார்கழி 05
வெள்ளிக்கிழமை
(20.12.2002)
திதி : பிரதமை
பின்னிரவு 1.33 வரை.
நட்சத்திரம்: மிருகசீரிடம்
காலை: 6.53 வரை
சுபநேரம் : 6.24 - 7.54
ராகுகாலம் : 10.54 - 12.24
(பழைய நேரப்படி)

### உதய வாக்கு

தோற்றத்தில் எளிமை, செயலில் மனிதத் தன்மை, வெற்றியில் வெறியின்மை இவையே பெருமையின் அறிகுறிகள்.

# சுவிஸ் நாட்டுத் தூதுவர் தமிழ்ச்செல்வனுடன் பேச்சு

கொழும்பு,டிசெ.19

இலங்கைக்கான சுவிஸ் நாட்டுத் தூதுவர் நேற்றுமுன்தினம் தமிழீழ விடுதலைப் புலிகளின் அரசியல்துறைப் பொறுப்பாளர் சு.ப.தமிழ்ச்செல்வனை கிளிநொச்சியில் சந்தித்துப் பேசியுள்ளார்.

தமிழீழ விடுதலைப் புலிகளின் அரசியல் துறை நடுவகப் பணியகத்தில் நடைபெற்ற இந்தச் சந்திப்பில் வடக்குக்கிழக்கு அபிவிருத்தி மற்றும் புனர்வாழ்வு, மீள்குடியமர்வுக்கென அமைக்கப்பட்டிருக்கும் வடக்குக் கிழக்கு உடனடி மனிதாபிமான உதவி வழங்கும் உபகுழுவின் செயலகம் ஊடாக சுவிஸ் அரசு எவ்வாறு நிதி உதவிகளை வழங்குவது என்பது பற்றியும் ஆராயப்பட்டதாகக் கூறப்படுகிறது.

இச்சந்திப்பில் சுவிஸ் நாட்டுத் தூதுவர் பிர்னாடினோ ரிகாகோனி தலைமையிலான குழு சு.ப.தமிழ்ச்செல்வனுடன் பேச்சு நடத்தியது. நேற்றுமுன்தினம் முற்பகல் 11 மணி முதல் பிற்பகல் 12.45 வரை இச்சந்திப்பு இடம்பெற்றுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது. (ஒ-12-ரி)

# ஈழத்துச் சிதம்பரத்தில் நாளை ரதோற்சவம்

காரைநகர்,டிசெ.19

ஈழத்துச்சிதம்பரம் எனப் போற்றப்படும் காரைநகர் சிவன் கோயிலின் திருவாதிரை உற்சவ தேர்த்திருவிழா நாளை காலை 7.00 மணிக்கு நடைபெறவுள்ளது.

நாளை அதிகாலைமுதல் சிவன், ஐயனார் ஆகிய மூலமூர்த்திகளுக்கு விசேட அபிஷேக ஆராதனைகள் இடம்பெறும். தொடர்ந்து காலை 7.00 மணிக்கு வசந்தமண்டபப் பூசை, பஞ்சரத பவனி இடம்பெறும்.

நாளைமறுதினம் சனிக்கிழமை அதிகாலை 2.00 மணி தொடக்கம் நடேசர் அபிஷேகமும் அதிகாலை 6.00 மணிக்கு ஆருத்திரா தரிசனமும் நடைபெறும். பிற்பகல் 3.00 மணிக்கு திருவூடலும் மாலை 4.00 மணிக்கு தீர்த்தோற்சவமும் நடைபெறும்.

இந்த உற்சவங்களை இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனத்தின் தேசிய சேவை, யாழ்.சேவை என்பன நேரடியாக ஒலிபரப்புச் செய்யவுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டது.

உற்சவ காலத்தை முன்னிட்டு வடபிராந்திய போக்குவரத்துச் சபை காரைநகர் சாலையினால் யாழ்.மத்திய பஸ் நிலையத்திலிருந்து ஆலயம்வரை நேரடி பஸ்சேவைகளை நடத்துகின்றனர். மாணிக்கவாசகர் மடாலய அன்னதான சபையினர் அன்னதானம் வழங்கி வருகின்றனர். (ஒ-73)

# தமிழீழ மீட்பு நிதி மீள

## வேலணை
## உதவி அரச அதிபர் பிரிவு

வெ/1373 திருமதி. இதயமலர் சிவநாதன்
வெ/1384 திரு. செல்லப்பா தர்மலிங்கம்
வெ/1391 திரு. சாமிநாதர் ஜோர்ச இம்மானுவேல்
வெ/1421 திரு. இராமலிங்கம் குலசேகரம்பிள்ளை
வெ/1422 திரு. சின்னப்பு பாக்கியநாதன்
வெ/1428 திரு. குழந்தைவேலு பாலரட்ணம்
வெ/1459 திருமதி. பத்மாவதி பாலசுப்பிரமணியம்
வெ/1466 செல்வி. யூடிற்ஜெயமதி ஞானப்பிரகாசம்
வெ/1471 செல்வி. மங்களவாணி சபாநாதன்
வெ/1481 செல்வன். பேரம்பலம் மகிந்தகுமார்
வெ/1483 திரு. சுப்பிரமணியம் சோமசுந்தரம்
வெ/1512 திரு. சிதம்பரப்பிள்ளை கணபதிப்பிள்ளை
வெ/1515 திருமதி. சுந்தரவதனி வில்வரட்ணம்
வெ/1516 திரு. மருதையினார் சிவசாமி
வெ/1549 திருமதி. சிவக்கொழுந்து இராமசாமி
வெ/1556 திருமதி. நாகேஸ்வரி வைத்தியநாதர்
வெ/1654 செல்வி. வசந்தினி வீரசிங்கம்
வெ/1655 செல்வி. யமுனாம்பிகை சேனாதிராசா
வெ/1674 செல்வி. மதசாலினி சோமசுந்தரம்

## கரவெட்டி
## உதவி அரச அதிபர் பிரிவு

க/22 திரு. முத்துக்குமாரு சோதீஸ்வரன்
க/43 திரு. கந்தப்பு விசுவலிங்கம்
க/47 திருமதி. சரோஜினிதேவி குணசிங்கம்
க/98 திரு. அம்பலவி முருகேசு
க/207 திருமதி. சிவபாக்கியம் சண்முகவடிவேலு
க/296 திருமதி. புஸ்பவதி சபாநாயகம்
க/329 திருமதி. அம்சம்மா இராமநாதக்குருக்கள்
க/368 திரு. சுப்பிரமணியஐயர் வரதராசசர்மா
க/528 திருமதி. தவமணி இரத்தினசிங்கம்
க/533 திருமதி. கமலம் சுப்பையா
க/539 திருமதி. கமலநாயகி பாலசுப்பிரமணியம்
க/566 திருமதி. கமலாவதி தனபாலசிங்கம்
க/612 திரு. இரத்தினம் இராசதுரை
க/620 திரு. கணேசஐயர் வீரமணிஐயர்
க/648 திருமதி. சின்னமணி இராசையா
க/655 செல்வி. சந்திரயோகம் சேதுலிங்கம்
க/661 திருமதி. சாந்தநாயகி இராஜேந்திரன்
க/700 திருமதி. குலக்கொழுந்து இராசசிங்கம்
க/725 திரு. இராமநாதர் முத்துக்குமாரு
க/770 திரு. வல்லிபுரம் சிவசிதம்பரம்
க/772 திருமதி. அன்னலட்சுமி ஸ்ரீஜெயானந்தம்
க/809 திரு. சின்னப்பொடியர் சபாரத்தினம்
க/819 திருமதி. செல்வமலர் இராஜலிங்கம்
க/853 திரு. ஆழ்வாப்பிள்ளை சிவகுமார்
க/878 திருமதி. இரஞ்சினி பாலகிருஸ்ணன்
க/895 திருமதி. சூரியமாலா ஜெயக்குமார்
க/926 திருமதி. குலமணிதேவி லோகேஸ்வரன்
க/927 திரு. யாகோப் செல்வராசா
க/1016 திரு. நல்லதம்பி விவேகானந்தன்
க/1047 திரு. தாமு பொன்னையா
க/1055 திரு. கந்தையா இராசையா
க/1161 திருமதி. அன்னபூரணம் நடராசா
க/1167 திருமதி. புவனேஸ்வரி பரஞ்சோதி
க/1230 திரு. சிதம்பரப்பிள்ளை தணிகாசலம்
க/1319 திருமதி. கமலேஸ்வரி பரம்சோதி
க/1377 திருமதி. இரத்தினகுமாரி ஜெயவீரசிங்கம்
க/1408 திரு. செல்லப்பா சதானந்தன்
க/1486 செல்வி. மனோரஞ்சிதசுஸ்வரி வீரசிங்கம்
க/1495 திரு. செல்லையா அழகேஸ்வரசாமி ஞானசந்திரா
க/1517 திரு. இராசசிங்கம் முருகதாசன்
க/1519 திருமதி. நல்லம்மா கோவிந்தசாமி
க/1573 திருமதி. இராசம்மா நடராசா
க/1606 திரு. சபாபதிப்பிள்ளை தவச்செல்வம்
க/1617 திருமதி. சிவபாக்கியம் கிருஷ்ணபிள்ளை
க/1683 திருமதி. இராசமலர் நவரத்தினம்
க/1687 திருமதி. பரமேஸ்வரி சுப்பிரமணியம்
க/1709 திரு. தனபாலசிங்கம் பாலகுமார்
க/1746 திருமதி. மகேஸ்வரி கனகரத்தினம்
க/1752 திருமதி. கமலாம்பிகை பாலச்சந்திரன்
க/1773 திருமதி. பரமேஸ்வரி சண்முகநாதன்
க/1845 திரு. கதிரிப்பிள்ளை செல்வராசா
க/1882 திரு. சிதம்பரப்பிள்ளை முருகேசு
க/1891 திருமதி. ரஞ்சினி மகேஸ்வரநாசா
க/1906 திருமதி. ஜெயரதி யோகராஜா
க/1993 செல்வி. சிவரஞ்சினி இரத்தினம்
க/1996 திருமதி. நந்தினி இராஜேஸ்வரன்
க/2022 திரு. பாலன் சிவேந்திரன்
க/2162 திரு. வல்லிபுரம் சின்னத்தம்பி
க/2205 செல்வி. பவானினி குமாரசுப்பிரமணியம்
க/2350 திரு. சின்னத்துரை துரைராசா
க/2393 திரு. சின்னத்துரை இராசையா
க/2402 திரு. நாராயணசாமி புகழேஸ்வரன்
க/2404 திரு. சுந்தரம் செல்வச்சந்திரன்
க/2466 திருமதி. இராஜேஸ்வரி சிவசண்முகவடிவேல்
க/2542 திரு. சின்னத்தம்பி மகேசன்
க/2583 திருமதி. தங்கமணி சபாரத்தினம்
க/2629 திரு. இராஜரட்ணம் மகேந்திரராசா
க/2682 திரு. அரியகுட்டி செல்வராசா
க/2699 திரு. சின்னத்தம்பி பூபாலசிங்கம்
க/2705 திரு. சின்னத்தம்பி கோவிந்தராஜா
க/2746 திரு. மயில்வாகனம் சாந்தலிங்கம்
க/2768 திருமதி. றோசலின் மதுரமணி தயானந்தன்
க/2795 திரு. சின்னத்துரை செல்வரட்ணம்
க/2823 திருமதி. விமலாதேவி நல்லையா
க/2861 செல்வி. வினோதினி நடராஜா
க/2900 திருமதி. பிலோமினா யோகராசா
க/2963 திரு. பொன்னையா துரைராசா
க/2986 திருமதி. றெஜீனா வின்சென்ற்
க/2994 திரு. வீரசிங்கம் கோபாலசிங்கம்
க/3071 திரு. ஆறுமுகம் சிவலிங்கம்
க/3161 திருமதி. இலட்சுமி செல்லத்துரை
க/3195 திருமதி. பத்மாவதி மெய்யழகன்
க/3202 திரு. கந்தையா சிவகுருநாதன்
க/3215 திரு. வல்லிபுரம் ஆறுமுகம்
க/3273 திருமதி. நவரத்தினதேவி திருச்செல்வம்
க/3289 திரு. கந்தையா சிவஞானசுந்தரம்
க/3303 திரு. சண்முகம் வேலாயுதம்
க/3344 திருமதி. செல்வமலர் தேவராசா
க/3398 திரு. ஐயாத்துரை சண்முகலிங்கம்
க/3404 திருமதி. தவமணி இராமச்சந்திரன்
க/3412 திருமதி. குணராசாவதி ஐயாத்துரை
க/3424 திரு. ஆறுமுகம் அருளானந்தம்
க/3471 திரு. சுப்பிரமணியம் சண்முகநாதன்
க/3476 திரு. தேசிங்கம் குலேந்திரராசா
க/3481 திருமதி. செல்வராணி சிவராசா
க/3579 திரு. தம்பையா பவராசா
க/3660 திருமதி. வாசுகி பாஸ்கரமூர்த்தி
க/3665 திரு. சின்னப்பொடி அப்புக்குட்டி
க/3682 திருமதி. சிவனேஸ்வரி தருமலிங்கம்
க/3711 திரு. தம்பையா சபாரட்ணம்
க/3735 திருமதி. பிள்ளை சின்னத்துரை
க/3745 திரு. செல்லப்பா திருச்சந்திரன்
க/3762 திரு. வேலுப்பிள்ளை ஆறுமுகம்
க/3787 திரு. ஐயாத்துரை தவகுகநேசன்
க/3891 திரு. கிருஸ்ணபிள்ளை மகாலிங்கம்
க/3908 திரு. சுப்பிரமணியம் குகரூபன்
க/3918 திரு. முருகன் செல்லத்தம்பி
க/3925 திரு. இளையகுட்டி ஜெகநாதன்
க/3983 திருமதி. நாகம்மா சரவணமுத்து
க/3990 திரு. சின்னப்பு சுப்பிரமணியம்
க/4004 திரு. இராமலிங்கம பொன்னையா
க/4082 திருமதி. லட்சுமி துரைராசா
க/4087 திருமதி. கமலாதேவி இராசரத்தினம்
க/4121 திரு. சின்னப்பு கார்க்கண்டு
க/4172 திரு. தம்பு சபாநாயகம்
க/4204 திரு. பொன்னையா சின்னராசா
க/4226 திருமதி. தவமலர் தங்கேஸ்வரன்
க/4258 திரு. சபாபதி மார்க்கண்டு
க/4260 திரு. கணபதியார் சீனித்தம்பி
க/4278 திரு. அப்புக்குட்டி சின்னத்தம்பி குமாரசுவாமி
க/4297 திரு. முருகேசு ஸ்ரீஸ்கந்தராஜா
க/4407 திருமதி. யோகேஸ்வரி பத்மநாதன்
க/4417 திரு. இரத்தினம் மனோகரன்
க/4429 திருமதி. ஜோர்ஜினா கதிரவேல்
க/4461 திரு. முத்துத்தம்பி சுப்பிரமணியம்
க/4554 திருமதி. கண்மணி பத்மநாதசாமி
க/4559 திருமதி. ஈஸ்வரி குட்டித்தம்பி
க/4590 திருமதி. ருக்குமணிதேவி பழனிநாதன்
க/4612 திருமதி. பவளம் சிவசம்பு
க/4633 திரு. இராமநாதன் செல்வவிநாயகம்
க/4653 செல்வன். கிட்டினன் ஆனந்தசுஸ்வரன்
க/4722 திரு. நாகரத்தினம் ஜெகன் மோகனதாஸ்
க/4751 திரு. கந்தையா கணபதிப்பிள்ளை
க/4840 திருமதி. இராசலட்சுமி ஆனந்தவடிவேலு
க/4865 திருமதி. பாக்கியம் தம்பிராசா
க/4868 செல்வி. வெண்மதி இராசலிங்கம்
க/4881 திரு. ஆழ்வாப்பிள்ளை சூரியகுமாரன்
க/4905 செல்வி. சுமதி நடராசா
க/4908 திரு. துரையப்பா சத்தியசீலன்
க/4912 திரு. வாரி ஆழ்வாப்பிள்ளை
க/4991 திரு. செல்லன் தங்கராசா
க/4998 திருமதி. சந்திராதேவி சபாரட்ணம்
க/5007 திருமதி. இரத்தினம் பாலசிங்கம்
க/5033 திரு. கதிரவேலு ஸ்ரீகாந்தா
க/5057 திரு. சின்னப்பொடி ராசன்
க/5242 திரு. சரவணமுத்து சபாரத்தினம்
க/5266 திருமதி. சிவக்கொழுந்து பொன்னையா
க/5292 திரு. வேலன் வெள்ளையன்
வெ/10 திருமதி. அம்பிகை ஆறுமுகம்
வெ/11 திருமதி. பிறேமலா சுகுமார்
வெ/80 திரு. சின்னத்துரை விஸ்வலிங்கம்
வெ/85 செல்வன். தில்லையம்பலம் தயாபரன்
வெ/89 திருமதி. தில்லைநாயகி இராசரத்தினம்
வெ/94 திரு. செல்வநாயகம் பாஸ்கரலிங்கம்
வெ/101 திருமதி. மங்கையற்கரசி பாலகிருஷ்ணன்
வெ/120 திரு. சபாபதி வல்லிபுரம்
வெ/226 திருமதி. பூமணி அழகதுரை
வெ/552 செல்வி. சாரதாதேவி இராஜரட்ணம்
வெ/584 திரு. கந்தையா அப்புத்துரை
வெ/798 திருமதி. பாக்கியலட்சுமி இராஜேந்திரசிங்கம்
வெ/800 திரு. சுப்பையா மனோகரன்
வெ/849 திரு. திருநாவுக்கரசு யோகேஸ்வரன்
வெ/883 திரு. தம்பு சிவசோதிலிங்கம்
வெ/1033 திரு. கந்தையா சிவனாத்துரை
வெ/1057 திருமதி. சூரியகலா முருகானந்தன்
வெ/1137 திரு. புவனேஸ்வரி மரகதலிங்கசிவம்
வெ/1141 திருமதி. பிரபாவதி பொன்னம்பலம்
வெ/1148 திரு. ஐயாத்துரை தருமலிங்கம்
வெ/1149 திரு. தம்பு கந்தசாமி
வெ/1150 திருமதி. அம்பிகாதேவி சின்னத்துரை
வெ/1204 திரு. சின்னத்துரை பாலச்சந்திரன்
வெ/1206 திரு. அமிர்தலிங்கம் பிரதீப்குமார்
வெ/1210 திருமதி. சின்னம்மா கனகசபை
வெ/1277 திருமதி. பார்வதபவானி தேவராசா
வெ/1316 திருமதி. சத்தியபாமா குமாரயோகேந்திரம்
வெ/1317 திருமதி. இராஜேஸ்வரி வாசரட்ணம்
வெ/1403 திருமதி. பத்மாவதி தியாகராசா
வெ/1444 திருமதி. இரத்தினமலர் செந்திவடிவேல்
வெ/1445 திருமதி. நாகம்மா சின்னையா

## பருத்தித்துறை
## உதவி அரச அதிபர் பிரிவு

பரு/118 திரு. பாலசுந்தரம் பாலேந்திரன்
பரு/171 திருமதி. ஸ்ரீகலாமணி ஜெயச்சந்திரன்
பரு/365 திருமதி. புவனேஸ்வரி சிவானந்தன்
பரு/377 திருமதி. சித்திரா அன்பழகன்
பரு/383 திரு. சூரன் குணம்
பரு/459 திரு. தில்லையம்பலம் ஜெயராஜ்
பரு/472 திரு. மயில்வாகனம் ஆறுமுகம்
பரு/481 திரு. பொன்னுத்தம்பி விசாகரட்ணம்
பரு/551 திருமதி. இராசம்மா இரதிச்சந்திரா
பரு/566 திருமதி. கமலாம்பிகை திருஞானசம்பந்தர்
பரு/604 திரு. கனகசபை கதிர்காமத்தம்பி
பரு/607 திருமதி. பவளரஞ்சனி சிவராசா
பரு/613 திரு. கணபதிப்பிள்ளை மகாதேவன்
பரு/697 திருமதி. சிவனேஸ்வரி நமசிவாயம்
பரு/736 திருமதி. தேவராணி சற்குணராஜா
பரு/780 திரு. இராமநாதர் சிவராஜா
பரு/883 திரு. வேலுப்பிள்ளை சிங்கராசா
பரு/897 திரு. இராசையா இராசதுரை
பரு/1003 திரு. வேலாயுதம் சிவசுப்பிரமணியதேவா
பரு/1138 திரு. கணபதிப்பிள்ளை தேவேந்திரன்
பரு/1233 திரு. தங்கராசா ஞானவடிவேல்
பரு/1252 திருமதி. ஜெயலட்சுமி வல்லிபுரம்
பரு/1253 திரு. சபாரத்தினம் துரைச்சாமி
பரு/1284 திரு. சிவகுரு நித்தியானந்தன்
பரு/1313 திரு. சிற்றம்பலம் கந்தையா செல்வராசா
பரு/1340 திருமதி. புவனேஸ்வரி இரவீந்திரன்
பரு/1357 திரு. யோசேப்பு இருதயநாயகம்
பரு/1464 திரு. சுப்பிரமணியம் தம்பிராசா
பரு/1488 திரு. கந்தையா சுந்தரலிங்கம்
பரு/1516 திருமதி. சிவகாமிப்பிள்ளை கணபதிப்பிள்ளை
பரு/1621 திருமதி. பாகீரதி சோமசுந்தரம்
பரு/1653 திரு. முருகேசு வேலுப்பிள்ளை
பரு/1685 திரு. வேலுப்பிள்ளை பாலசிங்கம்
பரு/1742 திரு. வேலாயுதம் சிவேந்திரராசா
பரு/1766 திரு. மோசேஸ் அரியரத்தினம்
பரு/1780 திருமதி. ஜெயசிறி முருகதாசன்
பரு/1787 திரு. பொன்னர் திருப்பதி
பரு/1812 திரு. நல்லதம்பி தர்மராசா
பரு/1883 திரு. திருஞானசம்பந்தமூர்த்தி தர்மலிங்கம்
பரு/1953 திரு. சுந்தரம் இராசலிங்கம்
பரு/1958 திருமதி. திலகவதி அம்மா சிறிநேதாஜி
பரு/1973 திரு. சண்முகவேல் பழனிவேல்
பரு/1987 திரு. கிட்டினன் தங்கவேல்
பரு/2085 திருமதி. நாகபூஷணி கோணலிங்கம்
பரு/2087 திருமதி. ஜெயலெட்சுமி சந்திரராசா
பரு/2158 திருமதி. நீலாம்பிகை இரத்தினசோதி
பரு/2166 திரு. நாராயணசுவாமி தில்லைநாதன்
பரு/2175 திருமதி. அன்னபூரணம் சிவபாதசுந்தரம்
பரு/2189 திரு. சோதிப்பிரமானந்தம் இரத்தினவடிவேல்
பரு/2205 திரு. வல்லிக்குட்டி வேலுப்பிள்ளை
பரு/2240 திரு. கணபதி ஆனந்தன்
பரு/2287 திரு. வேதநாயகக்குருக்கள் கந்தசாமிக்குருக்கள்
பரு/2328 திரு. கந்தசாமி நகுலேஸ்வரன்
பரு/2334 திரு. கந்தையா சிவராசா
பரு/2380 திருமதி. நவமணி வேலுப்பிள்ளை
பரு/2416 திருமதி. பூரணம் நடனசிகாமணி
பரு/2452 திருமதி. தங்கமாமயில் கனகரத்தினம்
பரு/2495 திரு. நடராசா இராஜமாணிக்கம்
பரு/2588 திரு. வீரகத்திப்பிள்ளை விநாயகம்
பரு/2623 திருமதி. தங்கேஸ்வரி சோமசுந்தரம்
பரு/2629 திருமதி. தெய்வானைப்பிள்ளை செல்வராசா
பரு/2714 திரு. இராசன் பத்மநாதன்
பரு/2716 திருமதி. பொன்னம்மா ஜயரத்தினம்
பரு/2773 செல்வி. தங்கராணி ஆழ்வாப்பிள்ளை
பரு/2810 திருமதி. வாசுகி நகுலராஜா
பரு/2835 திரு. நாகலிங்கம் இராசேந்திரன்
பரு/2844 திரு. கதிரமலை நடராசா
பரு/2920 திரு. முருகுப்பிள்ளை சிவபாதசுந்தரம்பிள்ளை
பரு/2922 திரு. முருகேசு இராமச்சந்திரன்
பரு/2928 திருமதி. நாகம்மா இராசஇரத்தினம்
பரு/2995 திரு. இராமலிங்கம் அருளானந்தம்
பரு/3001 திரு. கதிர்காமு வயிரமுத்து
பரு/3033 திரு. சின்னத்துரை லோகநாதன்
பரு/3047 திரு. நாதன் சிவராசா
பரு/3050 திருமதி. ஹன்னா இன்பராணி இரத்தினம்
பரு/3207 திருமதி. சகுந்தலா பீதாம்பரம்
பரு/3213 திருமதி. வரதாம்பிகை கமலநாதன்
பரு/3223 திரு. வேலுப்பிள்ளைக்குருக்கள் நவரத்தினக்குருக்கள்
பரு/3231 திருமதி. செல்வரத்தினம் சந்திரசேகரம்
பரு/3282 திருமதி. அருந்ததி பாலகிருஷ்ணன்
பரு/3362 திரு. பொன்னம்பலம் வேலாயுதம்
பரு/3344 திரு. சிவசிதம்பரம் சற்குணரத்தினம்
பரு/3376 திரு. கணபதிப்பிள்ளை திருநாவுக்கரசு
பரு/3477 திருமதி. சரஸ்வதி வீரபத்திரமகாதேவா
பரு/3502 திரு. சுப்பர் சந்திரசேகரம்
பரு/3506 திரு. பொன்னையா கணேசலிங்கம்
பரு/3511 திருமதி. கலைச்செல்வி கிருஸ்ணலிங்கம்
பரு/3512 திருமதி. கமலாதேவி கந்தசாமி
பரு/3550 திருமதி. சிவமலர் இராமேஸ்வரன்
பரு/3573 திரு. சங்கரப்பிள்ளை கணபதிப்பிள்ளை
பரு/3599 திருமதி. தங்கம்மா சபாபதிப்பிள்ளை
பரு/3654 திருமதி. இரத்தினம் முத்துக்கிருஷ்ணன்
பரு/3684 திருமதி. விஜயலட்சுமி சுப்பிரமணியம்
பரு/3844 திருமதி. இராஜகீதம் குணரத்தினம்
பரு/3982 திரு. கார்த்திகேசு ஜெயராசா
பரு/4005 திருமதி. சிவகாமசுந்தரி சண்முகரத்தினம்
பரு/4007 திரு. கார்த்திகேசு கதிர்காமத்தம்பி
பரு/4028 திருமதி. பரமேஸ்வரி தனபாலசிங்கம்
பரு/4031 திரு. வேலுப்பிள்ளை இராசா
பரு/4043 திருமதி. ஈஸ்வரி ஈஸ்வரன்
பரு/4060 திருமதி. புனிதவதி தங்கவடிவேலு
பரு/4073 திரு. முருகேசு செல்லத்தம்பி
பரு/4083 திரு. தியாகராசா நாகராசா
பரு/4132 செல்வி. இந்துமதி இராமநாதன்
பரு/4143 திருமதி. தனபாக்கியம் சிவபாதம்
பரு/4200 திரு. கதிர்காமு ஆறுமுகம்
பரு/4264 திரு. சின்னத்தம்பி சுப்பிரமணியம்
பரு/4310 திருமதி. மகேஸ்வரி காராளசிங்கம்
பரு/4323 திரு. வல்லிபுரம் யோகநாதன்
பரு/4327 திருமதி. ரதி ஞானம் யோகேஸ்
பரு/4336 திருமதி. சரஸ்வதி சிவராஜா
பரு/4363 திரு. முருகேசு ஜெகநிதன்
வெ/91 திரு. ஆறுமுகம் தர்மகுலசிங்கம்
வெ/191 திரு. கந்தசாமி நாகேஸ்வரன்
வெ/192 திரு. கந்தசாமி நாகேஸ்வரன்
வெ/284 திரு. துரையப்பா வீரகத்திப்பிள்ளை.
வெ/287 திரு. வைரமுத்து விஜயநாயகம்
வெ/288 செல்வி. விஜயகுமாரி வைரமுத்து
வெ/351 திரு. கிருஸ்ணபிள்ளை சபாரத்தினம்
வெ/478 திருமதி. லீலா. புவனேந்திரன்
வெ/486 செல்வன். சற்குணராசா கோபிநாத்
வெ/554 திரு. கணபதிப்பிள்ளை தனபாலசிங்கம்
வெ/566 திரு. சின்னையா புவனேந்திரன்
வெ/567 திரு. முத்தையா திருநாதன்
வெ/587 திரு. மகாலிங்கம் இலக்சுமிகாந்தன்
வெ/588 திருமதி. ஞானசுந்தரி சிவாஜி
வெ/593 திரு. சுந்தரலிங்கம் மகேந்திரன்
வெ/597 திரு. கேதுலிங்கம் சிவமோகன்
வெ/678 திரு. தணிகாசலம் ஸ்ரீதர்
வெ/703 திரு. செல்லத்துரை தர்மராசா
வெ/704 திரு. நாராயணசாமி பூபாலு
வெ/766 திருமதி. புவனேஸ்வரி மாணிக்கதியாகராஜா
வெ/772 திரு. சிங்காரவேலு பாலச்சந்திரன்
வெ/801 திரு. சிவாலிங்கம் கிருஷ்ணமூர்த்தி
வெ/909 திருமதி. ஜமுனா லெட்சுமணன்.
வெ/932 திரு. செல்லையா முருகேசு
வெ/933 திரு. கந்தசாமித்சுந்த...
வெ/939 திருமதி. சிவயோகி மே...
வெ/1026 திருமதி. கமலாதேந்திர...
வெ/1044 திரு. கோபா... வாசா...
வெ/1092 திரு. சபாரத்தினத்கு...
வெ/1109 திருமதி. விமலாயேஸ்...
வெ/1239 திருமதி. தனலட்சுதச...
வெ/1240 திரு. நாகலிங்கம் பாலி...
வெ/1246 திருமதி. மேரிகுரே கலே...
வெ/1247 திருமதி. நிலோஜினஸ்...
வெ/1262 திருமதி. சீதாங்கரைரா...
வெ/1273 திரு. இராசு தம்பிர...
வெ/1292 திரு. தங்கராசா குவரா...
வெ/1302 திரு. திருமேனிப்பிள்ளை தி...
வெ/1303 திருமதி. தேவகுஞ்சிவக...
வெ/1311 செல்வன். பரமராசாகு...
வெ/1314 திருமதி. காம்சனா ம...
வெ/1315 திரு. பத்மநாதன் ஸ்ண...
வெ/1319 திரு. பாலசுந்தரம் ஜசு...
வெ/1320 திரு. இராஜசிங்கம்னே...
வெ/1321 செல்வி. சாந்திக்கு செ...
வெ/1416 திரு. நடனசிகாமணசில...
வெ/1453 திரு. இராசு பஞ்சாம்...
வெ/1458 திருமதி. தேவாம்பி கு...
வெ/1462 திருமதி. விசாகேஸ் ...
வெ/1571 திரு. முத்துக்குமாரயே...
வெ/1632 திரு. பாலசுப்பிரமணி கு...

## வடமராட்சி...
## உதவி அரச அதிப...

வ.கி/2 திருமதி. மேரி றேமெ...
வ.கி/66 திருமதி. அன்னருகசே...
வ.கி/109 திருமதி. ஜெயராசகி ...
வ.கி/120 திருமதி. இலட்சுமி ...
வ.கி/165 திருமதி. பொன்மலைசெ...
வ.கி/277 திருமதி. ... னட்...
வ.கி/346 திரு. இரான... வெக்...
வ.கி/409 திரு. நல்லதம்பி த்தல...
வ.கி/421 திரு. வேலுப்பிள்ளையி...
வ.கி/442 திருமதி. அழகேஸ் கி...
வ.கி/455 திரு. சதாசிவம் புராசி...
வ.கி/469 திரு. அப்புக்குட்டி புத்...
வ.கி/513 திரு. அந்தோனி றெ...
வ.கி/525 திருமதி. பிலோமினாடி...
வ.கி/637 திருமதி. சரஸ்வதி நந்தி...
வ.கி/673 திருமதி. மனோன்மணி ...
வ.கி/702 செல்வன். கிருஷ்ணன...
வ.கி/762 திரு. இராமலிங்கம் ணி...
வ.கி/813 திரு. செபமாலை றெ...
வ.கி/825 திரு. வல்லிபுரநாதர்ல்...
வ.கி/896 திரு. நல்லையா இரகு...
வெ/558 திரு. நாகலிங்கம் ...
வெ/1134 திரு. மரியாம்பிள்ளை செ...
வெ/1170 திரு. கந்தசாமி சிவபி...
வெ/1308 திருமதி. கிறிஸ்ரீனயா...
வெ/1310 திருமதி. கலையரசிரா...
வெ/1318 திரு. மறுவேற்பிள்ளை ...
வெ/1570 திரு. அந்தோனிப்பிள்ளை யே...
வெ/1667 திரு. நாகமுத்து செலே...

## சாவகச்சேரி...
## உதவி அரச அ...

சா/36 திரு. நடராசா குமாரதே...
சா/61 திரு. தம்பியையா ...
சா/91 திரு. செல்லமுத்தர் து...
சா/129 திரு. நன்னி பூபாலசிங்க...
சா/169 திரு. தம்பிப்பிள்ளை மு...
சா/226 திருமதி. இராஜேஸ்வரி ...
சா/257 செல்வி. பிரமிளா குரை...
சா/313 திரு. நிற்சிங்கத்திருவம்...
சா/315 திருமதி. உதயகுமார் ...
சா/392 திரு. சிதம்பரநாதன் கந்...
சா/473 திரு. பாலேஸ்பிள்ளை ...
சா/484 திரு. கந்தையா இளைப...
சா/551 திருமதி. செல்வராணி ...
சா/631 திரு. செல்லையா இராச...
சா/644 திரு. சுப்பையா சபாரத்...
சா/651 திருமதி. மனோன்மணி ...
சா/658 திரு. செல்லத்துரை இர...
சா/671 திருமதி. செல்வராணி ...
சா/781 செல்வி. இராஜேஸ்வரி ...
சா/888 திருமதி. மாலினி யோக...
சா/903 திரு. செல்லர் நவரத்தி...
சா/916 திரு. சபாநாயகம் திரு...
சா/991 திருமதி. உமாதேவி செ...
சா/1050 திரு. கணபதிப்பிள்ளை ...
சா/1086 திரு. சீனிவாசகம் இரா...
சா/1111 திரு. செல்லப்பா நகுலே...
சா/1118 திரு. பாலசிங்கம் உத...
சா/1154 திரு. ஆறுமுகம் தம்பா...
சா/1215 திரு. மைலன் நல்லை...
சா/1221 திரு. சின்னையா பொ...
சா/1296 திரு. கார்த்திகேசு இர...
சா/1316 திரு. பொன்னையா கு...
சா/1319 திரு. கந்தையா மனோ...
சா/1392 திரு. அருணாசலம் சி...
சா/1504 திரு. சின்னையா போ...
சா/1523 திரு. மாணிக்கம் சந்தி...
சா/1556 திருமதி. ஜெகசோதி ...
சா/1584 திருமதி. பவளம்மா கு...
சா/1594 திரு. வைத்திலிங்கம் ...
சா/1596 திரு. சின்னப்பு ஐயாத்...
சா/1601 திரு. கந்தையா தர்மரா...
சா/1611 திரு. நல்லதம்பி வேலு...
சா/1646 திரு. சுவாமிநாதர் மகே...
சா/1762 திரு. இரத்தினம் துரை...
சா/1907 திரு. நாகலிங்கம் தியா...
சா/1908 திரு. சங்கரப்பிள்ளை ...
சா/1960 திரு. செல்லையா ஐயா...
சா/1977 திரு. மயில்வாகனம் ப...
சா/2002 திரு. இளையதம்பி க...
சா/2011 திருமதி. சொர்ணம்மா ...

# ...ப் பெறுவோர் விவரம்

...துரை சுந்தரகுமார்
...ாகராணி யோகானந்தன்
...தேவி சந்திரசேகரம்
...வித்தியாசாகரம்
...ம் சாந்தகுமார்
...தேவி புஸ்பநாதன்
...சுமி கந்தசாமி
...ம் ஞானபாஸ்கரன்
...றோஸ் கணேசலிங்கம்
...ஜினி வீனஸ்ஜெயா
...னி துரைராசா
...பித்துரை
... அருந்தவராசா
...பிள்ளை தியாகலிங்கம்
...ஞ்சரி சிவசுப்பிரமணியம்
...ாசா கோகுலராஜ்
...ாதேவி மதியாபரணம்
... கிருஸ்ணன்
...ம் கணேசமூர்த்தி
...கம் புவனேஸ்வரன்
...குமாரி செல்வராஜா
...ணி காசிலிங்கம்
...சரட்ணம்
...பிகை குணரத்தினம்
...ஸ்வரி செல்வரட்ணம்
...மாரு தாமோதரம்பிள்ளை
...மணியம் குணபாலசிங்கம்

## ...ட்சி கிழக்கு அதிபர் பிரிவு

...றோஸ்மெற்றில்டா மரியதாஸ்
...ருபி புகனேந்திரம்
...ாசசுந்தரி நமசிவாயம்
...மி இராசையா
...லர் செல்வராசா
...ம் சின்னப்...
... செல்வச்...ராசாமி
... தர்மகுலசிங்கம்
...ளை மயில்வாகனம்
...ஸ்வரி கிருஷ்ணபிள்ளை
... புஸ்பராசா
...டி அப்புத்துரை நடராசா
... கென்றிக்குரூஸ்
...னா வடிஸ்லாஸ்
...தி நித்தியானந்தம்
...ன்மணி சேதுநாதன்
...ணபிள்ளை சற்குணதாஸ்
...கம் தணிகாசலம்
... கௌடிபுவன்
...தர் தில்லைநாதன்
... இராசகிளி
... விநாயகமூர்த்தி
...ளை ஜெறாட்தர்மராஜா
... சிவசுப்பிரமணியம்
...னா யோகதாஸ்
...ரசி இராசரத்தினம்
...ள்ளை செல்வராசா
...ர்ளை டேவிற் அன்ரன் வின்சாலோ
... தெய்வேந்திரமூர்த்தி

## ...கச்சே... அதி... பிரிவு

...மாரதேவன்
... தியாகராசா
...தர் சதாசிவமூர்த்தி
...லசிங்கம்
...ளை முத்துக்குமாரசாமி
...ஸ்வரி சுப்பிரமணியம்
... குணரத்தினம்
...திருவம்பலம் யோகேந்திரா
...மாரி மோகனதாஸ்
...ன் கந்தசாமி
...ளை ஞானப்பிரகாசம்
... இளையதம்பி
...ாணி சதானந்தன்
... இராசதுரை
...பாரத்தினம்
...மணி பொன்னுத்துரை
...ர இராசலிங்கம்
...ாணி பத்மநாதன்
...ஸ்வரி சந்திரசேகரம்
... யோகராசா
...வரத்தினம்
... திருநந்தி
...வி செல்வத்துரை
...ள்ளை தேவேந்திரன்
... இராசசேகரம்
...நகுலேஸ்வரதாசன்
... உதயகுமார்
...தம்பாப்பிள்ளை
...லையா
... பொன்னுச்சாமி
... இரத்தினம்
...ா முருகன்
...மனோகரன்
...ம் சின்னத்தம்பி
... யோசேப் செல்வத்துரை
... சந்திரன்
...தி சிவகுரு
...ா குமாரசாமி
...கம் சிவபாலன்
...யாத்துரை
...தர்மராசா
... வேலுப்பிள்ளை
... மகேஸ்வரன்
...துரைராசா
... தியாகராசா
...ளை கதிர்காமநாதன்
...ஐயாத்துரை
...ம் பத்மநாதன்
... சுப்பிரமணியம்
...மா மகாலிங்கம்

சா/2026 திரு. செல்லத்துரை சண்முகநாதன்
சா/2044 திருமதி. நிர்மலாதேவி இராஜவேல்
சா/2048 திரு. சின்னத்தம்பி கந்தசாமி
சா/2072 திருமதி. திரவியம் பரமசாமி
சா/2099 திருமதி. வயலா புஸ்பராணி செல்வரத்தினம்
சா/2144 திரு. நாகமுத்து காங்கேசு
சா/2152 திருமதி. நாகரத்தினம் தருமரத்தினம்
சா/2156 திருமதி. சின்னப்பிள்ளை குமாரசாமி
சா/2186 திருமதி. ஜோதிமலர் செல்லத்துரை
சா/2222 செல்வி. தர்மேந்திரா தம்பிராசா
சா/2256 திருமதி. மேரி சிவராசா
சா/2298 திரு. பழனி நடராசா
சா/2354 திருமதி. பத்மாதேவி தியாகராசா
சா/2356 திருமதி. இராசபூபதி இராமலிங்கம்
சா/2405 திரு. தம்பு சோமசுந்தரம்
சா/2411 திருமதி. சந்திரமதி யோகநாதன்
சா/2428 திருமதி. கமலாதேவி தேவதாசன்
சா/2450 திரு. கந்தையா பரமராசா
சா/2460 திரு. சுந்தரம் சின்னத்தம்பி அருளானந்தம்
சா/2462 திரு. பொன்னுத்துரை விவேகானந்தன்
சா/2486 திரு. சுப்பிரமணியம் நாகேந்திரன்
சா/2516 திருமதி. யோகராணி சற்குணராசா
சா/2533 திரு. தம்பு குமாரசாமி கார்த்திகேசு
சா/2560 திரு. மார்க்கண்டு சரவணபவன்
சா/2564 திரு. தில்லைம்பலம் வன்னியசிங்கம்
சா/2607 திருமதி. சுமங்கலா ஈஸ்வரபாதம்
சா/2685 திரு. வாரித்தம்பி சின்னத்தம்பி
சா/2754 திருமதி. நாகம்மா செல்லன்
சா/2787 திரு. ஞானப்பிரகாசம் அருந்தவராசா
சா/2887 திரு. சின்னத்தம்பி நாகலிங்கம்
சா/2934 திருமதி. மகாதேவி குணநாயகம்
சா/2991 திருமதி. மஞ்சுளா சிவராஜா
சா/3048 திரு. தம்பையா நடராசா
சா/3058 திரு. ஆறுமுகம் சிதம்பரப்பிள்ளை
சா/3062 திரு. நல்லதம்பி கனகசபை
சா/3100 திரு. நாகமுத்து இராசையா
சா/3102 திரு. சின்னத்தம்பி சுப்பிரமணியம்
சா/3110 திருமதி. நல்லம்மா சண்முகராஜா
சா/3111 திருமதி. புனிதம் வசந்தகுமார்
சா/3149 திருமதி. சுவர்ணா ரவிக்குமார்
சா/3268 திரு. சபாரத்தினம் விநாயகமூர்த்தி
சா/3310 திரு. நாகபூரணம் பொன்னையா
சா/3365 திருமதி. தையல்நாயகி கெங்காதரன்
சா/3392 திரு. சதாசிவம் யோகராசா
சா/3411 திருமதி. வரதாமணி சிதம்பரநாதன்
சா/3428 திரு. கதிர்காமு ஐயாத்தம்பி
சா/3594 திரு. இளையதம்பி யோகராசா
சா/3604 திருமதி. நாகம்மா முருகேசு
சா/3629 திருமதி. சின்னப்பிள்ளை சின்னையா
சா/3656 திரு. சின்னத்தம்பி குணநாயகம்
சா/3872 திரு. பொன்னுச்சாமி மாப்பாணி
சா/3944 திரு. இராமப்பிள்ளை கனகசிங்கம்
சா/4003 திரு. செல்லையா இராசதுரை
சா/4006 திரு. கந்தையா கிருஷ்ணர்
சா/4047 திரு. விநாசித்தம்பி சிவானந்தம்
சா/4158 திரு. மாணிக்கம் கமலநாதன்
சா/4186 திரு. வேலுப்பிள்ளை இரத்தினசிங்கம்
சா/4190 திரு. கிட்டிணர் கார்த்திகேசு
சா/4204 திரு. வேலுப்பிள்ளை கந்தையா
சா/4288 திருமதி. மகேஸ்வரி அருளானந்தம்
சா/4342 திரு. முருகுப்பிள்ளை கதிர்காமத்தம்பி
சா/4368 திரு. பெரியதம்பி தங்கவேலு
சா/4396 திரு. கூழையன் சின்னன்
சா/4414 திரு. முருகன் மாணிக்கம்
சா/4442 திரு. செல்லையா உருத்திரமூர்த்தி
சா/4605 திரு. குமாரசாமி சேதீஸ்வரநாதன்
சா/4663 திரு. கதிரேசு தியாகராசா
சா/4668 திரு. விநாசித்தம்பி நடராசா
சா/4751 திரு. கந்தையா சற்குணநாதன்
சா/4761 திரு. சுப்பிரமணியம் நடராசலிங்கம்
சா/4776 திரு. பிரான்சிஸ் சேவியர் அன்ரன்
சா/4781 திருமதி. சிசிலியா செபமாலை ஜோண்
சா/4796 திரு. சின்னத்தம்பி சிதம்பரப்பிள்ளை
சா/4831 திரு. சின்னத்துரை தங்கராசா
சா/4854 திரு. சில்வேஸ்ரர் மரிசலீன்
சா/5002 திரு. முத்து வீரகத்தி
சா/5006 திரு. காசிந்தம்பி சின்னத்துரை
சா/5010 திரு. நடராசா தர்மலிங்கம்
சா/5036 திரு. தில்லையம்பலம் நடராசபிள்ளை
சா/5060 திரு. பொன்னையா சுப்பிரமணியம்
சா/5095 திரு. தங்கராசா திலகரத்தினம்
சா/5112 திருமதி. சிவபாக்கியவதி திருநாவுக்கரசு
சா/5192 திரு. சிதம்பரப்பிள்ளை சின்னத்துரை
சா/5212 திருமதி. சிவமணி தெய்வேந்திரம்பிள்ளை
சா/5223 திருமதி. கமலம்மா வீரசிங்கம்
சா/5261 திரு. வேலுப்பிள்ளை தம்பு
சா/5339 திரு. சின்னத்தம்பி கணபதிப்பிள்ளை
சா/5388 திருமதி. செல்லம்மா தம்பையா
சா/5390 திரு. நல்லதம்பி தியாகராசா
சா/5406 திருமதி. இராசேஸ்வரி பத்மநாதன்
சா/5473 திருமதி. மகேஸ்வரி கந்தசாமி
சா/5474 திருமதி. புவனேஸ்வரி சபாபதி
சா/5515 திருமதி. அன்னலட்சுமி கனகரத்தினம்
சா/5522 திருமதி. புவனேஸ்வரி தர்மராசரட்ணம்
சா/5564 செல்வி. நாகேஸ்வரி சபாபதிப்பிள்ளை
சா/5600 திரு. மார்க்கண்டு யோகேஸ்வரன்
சா/5604 திரு. முத்துக்குமாரு சூரியகுமார்
சா/5610 திருமதி. நாகேஸ்வரி தம்பிராசா
சா/5688 திரு. பொன்னம்பலம் கணபதிப்பிள்ளை
சா/5708 திரு. கதிர்காமு இராமலிங்கம்
சா/5756 திரு. வயிரமுத்து சின்னத்தம்பி
சா/5766 திருமதி. மகேஸ்வரி பரமசிவம்
சா/5780 திரு. சங்கரன் கனகலிங்கம்
சா/5797 திரு. கதிர்காமர் பரமானந்தர்
சா/5851 திருமதி. இராசம்மா ஆறுமுகம்
சா/5854 திரு. சின்னவன் செல்வராசா
சா/5867 திரு. வீரகத்தி சின்னத்தம்பி
சா/5925 திருமதி. சின்னப்பிள்ளை சின்னையா
சா/5931 திரு. மாணிக்கர் கதிர்த்தம்பி
சா/6001 திரு. சுப்பிரமணியம் சண்முகம்
சா/6016 திரு. கணேசு விமலநாதன்
சா/6031 செல்வி. முத்துப்பிள்ளை சின்னத்தம்பி
சா/6040 திருமதி. கலைமதி உமாபதிசிவம்
சா/6053 திரு. சந்தியோகு பிரான்சிஸ்
சா/6055 திருமதி. அமலோற்பவராணி தேவதயாளன்
சா/6111 திருமதி. சரஸ்வதி தவராசா

சா/6142 திரு. காசிநாதர் சின்னத்துரை
சா/6161 செல்வி. விஜயகௌரி சுப்பிரமணியம்
சா/6171 திரு. வாரித்தம்பி கணேசமூர்த்தி
சா/6203 திரு. வாரித்தம்பி அதிஸ்டலிங்கம்
சா/6206 திரு. கணபதிப்பிள்ளை வேலாயுதபிள்ளை
சா/6225 திரு. செல்லையா கந்தசாமி
சா/6328 செல்வி. சுகிர்தராணி சுப்பிரமணியம்
சா/6350 செல்வி. இரத்தினேஸ்வரி இராசேந்திரம்
சா/6355 திரு. முத்தர் செல்லையா
சா/6454 திருமதி. தெய்வானை வல்லிபுரம்
சா/6472 செல்வன். சிவசுப்பிரமணியம் தினேஷ்
சா/6578 திரு. சின்னையா திருநாவுக்கரசு
சா/6591 திரு. நாகர் சின்னர்
சா/6633 திரு. சடையன் சிவஞானம்
சா/6651 திரு. முருகுப்பிள்ளை பரமசாமி
சா/6654 திருமதி. வள்ளிப்பிள்ளை அமிர்தலிங்கம்
சா/6656 திரு. துரைச்சாமி தனபாலசிங்கம்
சா/6661 திரு. வேலுப்பிள்ளை பாலசிங்கம்
சா/6723 திரு. செல்லத்துரை சிவலிங்கம்
சா/6771 திருமதி. செல்வராணி அருமைரத்தினம்
சா/6823 திருமதி. மங்களாதேவி விநாயகமூர்த்தி
சா/6825 திரு. சுந்தரம் விமலச்சந்திரன்
சா/6863 திரு. இராசரத்தினம் இரவி
சா/6894 திரு. சுப்பிரமணியம் பாலசிங்கம்
சா/6930 திரு. செல்லையா அழகராசா
சா/6966 திரு. வைத்திலிங்கம் வேலுப்பிள்ளை
சா/6984 திருமதி. செல்வம் கந்தையா
சா/7005 திரு. ஆறுமுகம் செல்லையா
சா/7018 திருமதி. தங்கம்மா விநாசித்தம்பி
சா/7033 திரு. சினனத்தம்பி சின்னத்துரை
சா/7046 திரு. வேலாயுதம் பாலச்சந்திரன்
சா/7048 திரு. சண்முகம் திரவியநாயகம்
வெ/37 திருமதி. கிறிஸ்ரீனாசாந்தி பாலசிங்கம்
வெ/51 திருமதி. நாகேஸ்வரி தேவபாலன்
வெ/102 செல்வி. றோகினி விநாயகமூர்த்தி
வெ/103 திருமதி. பிறேமினி இராமேஸ்வரன்
வெ/313 திரு. தம்பு சின்னத்துரை
வெ/363 திருமதி. ஜெயந்தி இராசரத்தினம்
வெ/525 திருமதி. தங்கமலர் மரியதாஸ்
வெ/602 திருமதி. நல்லமுத்து சங்கரப்பிள்ளை
வெ/654 திரு. வேலுப்பிள்ளை இராஜேந்திரன்
வெ/808 திருமதி. சிவயோகம் சந்திரசேகரம்

வெ/1002 திருமதி. யசோதராணி செல்வராஜா
வெ/1004 திருமதி. மீனாட்சி சிவகுருநாதன்
வெ/1081 திரு. தியாகராஜா திசைவீரசிங்கம்
வெ/1085 திருமதி. திலகவதி அருணாசலம்
வெ/1096 திருமதி. செல்லம்மா விஸ்வலிங்கம்
வெ/1101 திருமதி. நவமணி குணபாலசிங்கம்
வெ/1257 திருமதி. சிவபாக்கியேஸ்வரி சோமசுந்தரம்
வெ/1286 திரு. தாமோதரம்பிள்ளை பாலசுப்பிரமணியம்
வெ/1340 திரு. சந்தனம் அருளானந்தம்
வெ/1360 திருமதி. பவளம் மாணிக்கம்
வெ/1383 திருமதி. யோகராணி துரைசிங்கம்
வெ/1385 திருமதி. மேரிஅக்னஸ் ஸ்ரீபன்ஜோர்ச்
வெ/1397 திருமதி. சரஸ்வதி பாஸ்கரன்
வெ/1409 திரு. கந்தையா தர்மலிங்கம்
வெ/1417 திருமதி. சத்தியலச்சுமி வீரசிங்கம்
வெ/1426 திருமதி. சாரதா தயாபரன்
வெ/1437 திருமதி. கௌரி மகேந்திரன்
வெ/1448 திரு. அண்ணாச்சாமி நிர்மலானந்தன்
வெ/1454 திருமதி. சிவசோதி கிருஸ்ணசாமி
வெ/1627 திரு. இளயதம்பி சோமசுந்தரம்
வெ/1653 திரு. கிருஸ்ணசாமி ஏரம்பமூர்த்தி

## பச்சிலைப்பள்ளி உதவி அரச அதிபர் பிரிவு

ப/2 திரு. குழந்தைவேலு தம்பாப்பிள்ளை
ப/46 திரு. செல்லத்துரை சிவசிதம்பரம்
ப/50 திரு. செல்லத்துரை மகேந்திரன்
ப/69 திரு. மாணிக்கம் குமாரசாமி
ப/75 திரு. வீரகத்தி கதிர்காமு
ப/101 திரு. சின்னத்தம்பியர் பொன்னையா
ப/306 திரு. முருகேசு தங்கவேல்
ப/310 திரு. ஆசீர்வாதம் அருளப்பு
ப/348 திருமதி. கிறிஸ்ரீனம்மா சீமாம்பிள்ளை
ப/406 திருமதி. அனிற்றா ஜொய்சி பீற்றர் அருள்தாஸ்
ப/447 திருமதி. பரேசம்மா பேதுறுப்பிள்ளை
ப/501 திரு. சிவஞானம் சிவயோகநாதன்
ப/512 திருமதி. இராசலட்சுமி செல்வரத்தினம்
ப/515 திரு. வீரகத்தி இராசரத்தினம்
ப/559 திருமதி. சின்னாச்சி கிட்டினன்
ப/694 திருமதி. இந்திராணி கந்தசாமி

# நூற்றுக்கும் மேற்பட்டோருக்கு புற்றுநோய்க்கான சிகிச்சை

தெல்லிப்பழை உயர்பாதுகாப்பு வலயத்தில் அமைந்துள்ள ஜி.ஜி. பொன்னம்பலம் புற்றுநோய் சிகிச்சை நிலையத்தில் நேற்றுமுன்தினம் நூற்றுக்கும் மேற்பட்ட நோயாளர்கள் சிகிச்சை பெற்றனர்.

மகரகம புற்றுநோய் வைத்தியசாலையின் வைத்திய நிபுணர் திருமதி கலைவாணி உக்கிரபெருவழுதிப்பிள்ளை சிகிச்சையை மேற்கொண்டார்.

மேலும் இரண்டு வைத்திய நிபுணர்கள் வருகை தரலாமென எதிர்பார்க்கப்பட்டபோதிலும் இறுதி நேரத்தில் அவர்கள் வருகை தரவில்லை.

காலை 8.00 மணிக்கு வலிவடக்குப் பிரதேச செயலகத்திலிருந்து சிகிச்சை பெறுவதற்காக முதல் தொகுதியினர் வைத்தியசாலைக்கு அழைத்துச் செல்லப்பட்டனர்.

அதனைத் தொடர்ந்து கட்டம் கட்டமாக நோயாளர்கள் வைத்திய சிகிச்சைக்கு உட்சென்றனர்.

கொழும்பிலிருந்து வருகைதந்த வைத்திய நிபுணருக்கு உதவியாக யாழ்.போதனா வைத்தியசாலையைச் சேர்ந்த ஏழு மருத்துவர்கள் கடமையாற்றினர்.

இந்த வைத்தியசிகிச்சையின் போது ஏற்கனவே மகரகமவிற்கு சென்று சிகிச்சை பெற்ற நோயாளர்கள் உட்பட புதிய நோயாளர்களும் சிகிச்சைக்கு உட்படுத்தப்பட்டனர்.

இதேநேரம், தெல்லிப்பழை பலநோக்குக் கூட்டுறவுச் சங்கத்தின் வைத்தியசாலை வளவினுள் சிற்றுண்டிச் சாலையை காலையில் அமைக்காமையினால் அதிகாலையிலேயே வீடுகளிலிருந்து புறப்பட்டு வந்த நோயாளர்கள உணவு வசதியின்றி தவித்ததாகவும் கூறப்படுகின்றது.

வைத்தியசாலையில் சிகிச்சை பெற வந்த நோயாளர்களுக்கு குடிதண்ணீர் வசதியை அங்கு நிலை கொண்டுள்ள இராணுவத்தினர் ஏற்படுத்திக் கொடுத்தமை குறிப்பிடத்தக்கது. (ஒ-86-173)

# நோயாளருக்கான உபகரணங்கள் களஞ்சியசாலையில் முடக்கம்

தெல்லிப்பழை புற்றுநோய் வைத்தியசாலைப் பயன்பாட்டிற்கெனக் கொண்டுவரப்பட்ட சக்கரநாற்காலி போன்றவை களஞ்சியத்திலிருந்து கொண்டுவரப்படாமையால் வலிவடக்குப் பிரதேச செயலாளர் அங்கவீனர்களுக்கு வழங்கவென வைத்திருந்த சக்கரநாற்காலிகளை வழங்கி சிகிச்சைக்கு உதவிசெய்துள்ளார்.

புற்றுநோய் வைத்தியசாலையில் முதற்றடவையாக சிகிச்சைகள் ஆரம்பிக்கப்பட்டன. ஆனால், இவ்வைத்தியசாலைப் பயன் பாட்டிற்கென வழங்கப்பட்ட சக்கர நாற்காலிகள் மற்றும் உபகரணங்கள் பண்டத்தரிப்பிலுள்ள களஞ்சிய சாலையில் வைத்துப் பூட்டப்பட்டுள்ளன.

இப்பொருள்களை தெல்லிப்பழைக்குக் கொண்டுவருவதில் உரிய உயர் அதிகாரிகள் முன்னேற்பாடாக நடவடிக்கை எடுக்காமையினால் இப்பொருள்கள் நோயாளர்களின் பாவனைக்குப் பயன்படுத்தமுடியாத நிலைமை காணப்பட்டது.

சுமார் இருபது லட்சம் ரூபாவிற்கு மேற்பட்ட பல்வேறு உபகரணங்களோ பயன்படுத்தமுடியாத நிலையில் இருந்தது குறிப்பிடத்தக்கதாகும். (ஒ-86)

## வாராந்த நிகழ்வு

யாழ்ப்பாணம்,டிசெ.18

சந்நிதியான் ஆச்சிரம சைவகலை பண்பாட்டுப் பேரவையினர் சந்நிதியான் ஆச்சிரம மண்டபத்தில் நடத்திவரும் வாராந்த வெள்ளி நிகழ்வில் இவ்வார நிகழ்வாக முருகனடியார்களால் பஜனை நிகழ்வு இடம்பெறவுள்ளது. அத்துடன் வருடாவருடம் இடம்பெறும் திருவாசக விழாவும் நடைபெறவுள்ளது.

# விவசாயிகளுக்கு கடன் உதவி

சண்டிலிப்பாய்,டிசெ.19

பண்டத்தரிப்பு பலநோக்குக் கூட்டுறவுச் சங்கம் எதிர்வரும் ஜனவரி மாதத்தில் மிளகாய்ச் செய்கையில் ஈடுபடவுள்ள சங்க உறுப்பினர்களான விவசாயிகளுக்கு மிளகாய்ச் செய்கை ஊக்குவிப்பு கடன் வழங்கவுள்ளது.

ஒரு பரப்புக்கு 6,000 ரூபா வீதம் இக்கடன் வழங்கப்படவுள்ளதாகவும்-

இதனைப் பெறவிரும்பும் விவசாயிகள் தமது பிரிவு கிளைக் குழுவின் சிபாரிசுடன் சங்கத் தலைமை அலுவலகத்திற்கு விண்ணப்பிக்க முடியும் என்றும் -

சங்கத்தின் பொதுமுகாமையாளர் சு.வைரவநாதன் தெரிவித்தார். (ஐ-135)

# ஆன்மீகச் சொற்பொழிவு

யாழ்ப்பாணம்,டிசெ.19

நல்லூர் கந்தசுவாமி கோயில் முன்றிலில் அமைந்துள்ள நாவலர் மணி மண்டபத்தில் நடைபெறும் ஆன்மீகச் சொற்பொழிவுத் தொடரில் இந்துசமய கலாசார அலுவல்கள் திணைக்களத்தின் உதவிப் பணிப்பாளர் வி.குமார்வடிவேல் நாளை வெள்ளிக்கிழமை பிற்பகல் 5.30 மணிக்கு 'இந்துசமய நெறிமுறைகள்' என்னும் தலைப்பில் சொற்பொழிவு ஆற்றவுள்ளார்.

இந்துசமய விவகார அலுவல்கள் அமைச்சின் உதவிப் பணிப்பாளர் சிவமகாலிங்கம் தலைமையில் நடைபெறவுள்ள இந்த நிகழ்வில் கொழும்பு பிறெஸ்பற்றேரியான் பெண்கள் பாடசாலை ஆசிரியை திருமதி கங்கேஸ்வரி குமார்வடிவேல வழங்கும் திருவாசகப் பண்ணிசையும் இடம்பெறும். (ரி)

# தொழில்நுட்ப அலுவலருக்கான தடைகாண் பரீட்சையை இங்கும் நடத்த கோரிக்கை

வலி.மேற்கு,டிசெ.19

தொழில்நுட்ப உத்தியோகத்தர்களுக்கான வினைத்திறன் தடைகாண் பரீட்சையை யாழ்ப்பாணத்தில் நடத்துவதற்கு நடவடிக்கை எடுக்குமாறு தொழில்நுட்ப உத்தியோகத்தர்கள் வேண்டுகோள் விடுத்துள்ளனர்.

ஸ்ரீலங்கா தொழில்நுட்ப சேவையைச் சேர்ந்த மத்திய, மாகாண உத்தியோகத்தர்களுக்கு வினைத்திறன் தடைதாண் பரீட்சை தரம் II 'இ' தரம் II 'ஆ' அதிபர் பரீட்சை... கொழும்பில் எதிர்வரும் ஜனவரி மாதத்தில் நடத்துவதற்கு பரீட்சை திணைக்களத்தினால் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது.

யாழ்மாவட்டத்திலிருந்து சுமார் 50 பேர் இப்பரீட்சைக்குத் தோற்றவுள்ளனர். ஆகவே, இப்பரீட்சையை யாழ்ப்பாணத்திலும் நடத்துவதற்கு யாழ். மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர்கள் ஆவனசெய்யவேண்டுமென தொழில்நுட்ப உத்தியோகத்தர்கள் வேண்டு... (ஒ-...)

## நல்லூர் பொதுச் சந்தைப் பகுதியில்
# நாணயத் தொலைபேசி நீண்ட காலமாக செயலிழப்பு

நல்லூர் சந்தை அருகே அமைந்துள்ள வன்னியசிங்கம் பொதுப்பணி மன்றத்தினுள் ஸ்ரீலங்கா ரெலிகொம் நிறுவனத்தினால் அமைக்கப்பட்டிருந்த நாணயக் குற்றி தொலைபேசி நீண்ட காலமாக செயலிழந்த நிலையிலுள்ளது.

மிக நீண்ட காலமாக செயலிழந்திருக்கும் இத்தொலைபேசியைத் திருத்தி இயங்கவைக்க எந்தவித நடவடிக்கையும் இதுவரை எடுக்கப்படவில்லை என பாவனையாளர்கள் அதிருப்தி தெரிவிக்கின்றனர்.

பொது இடத்தில் பாவனையாளர்களின் நலன்கருதி அமைக்கப்படுகின்ற இத்தொலைபேசி, பாதுகாப்பு மற்றும் பராமரிப்பு வசதியைக்கருத்தில்கொண்டு பொதுப்பணி மன்ற மண்டபத்திற்குள் நிறுவப்பட்டது என்றும் - ஆனால், இத்தொலைபேசி இணைப்பு முறைகேடாகப் பயன்படுத்தப்பட்டு பெருந்தொகைப்பணம் செலுத்தப்படாது நிலுவையாக இருப்பதாகவும் - ரெலிகொம் வட்டாரங்கள் மூலம் அறியவந்தது.

கடந்தகால இராணுவ நடவடிக்கையின்போது - இந்தப் பகுதியிலிருந்து மக்கள் இடம்பெயர்ந்திருந்தவேளை- இந்த நாணயக் குற்றித் தொலைபேசிகான இணைப்பு, முறைகேடாகப் பயன்படுத்தப்பட்டிருப்பதாகக் கூறப்படுகிறது.

சந்தைப்பகுதியில் கூடும் மக்களின நலன் கருதி புதிய ஓர் இடத்தில் இத தொலைபேசியை நிறுவி இயங்க வைக்கவேண்டும் என்று பொதுமக்கள் தரப்பில் தெரிவிக்கப்படுகிறது. (ஐ-ரி)

### வலி. தெற்கு பொது அமைப்புகளின் கூட்டம் நாளை

வலி.தெற்கு பொது அமைப்புகள் ஒன்றியத்தின் கூட்டம் நாளை வெள்ளிக்கிழமை பிற்பகல் 3.00 மணிக்கு ஒன்றியத் தலைவர் சி.குமாரவேல் தலைமையில சுன்னாகம் பலநோக்கு கூட்டுறவுச்சங்க மண்டபத்தில் இடம் பெறவுள்ளது.

இக்கூட்டத்தில் கூட்டுறவுச்சங்க கிளைகள், சனசமூக நிலையங்கள், கிராம அபிவிருத்தி சங்கங்கள், ஆலய பரிபாலன சபைகள் பாடசாலை அபிவிருத்தி சங்கங்கள், வர்த்தக சங்கங்கள் விளையாட்டுக் கழகங்கள், விவசாய சம்மேளனங்கள், சிகை ஒப்பனையாளர் சங்கம், சிற்றூர்தி உரிமையாளர் சங்கங்களின் தலைவர், செயலாளர்களைக் கலந்துகொள்ளும்படி வேண்டப்பட்டுள்ளது. (86)


**சாவகச்சேரி கல்வயல் வேதவனம் பிள்ளையார் திருக்கோயில்**

**தேர்த்திருவிழா விஞ்ஞாபனம்**

*காலம்:* நாளை (20.12.2002) வெள்ளிக்கிழமை

காலை 5.30 மணி - அபிஷேகம்
7.00 மணி - வசந்த மண்டப பூஜை
9.00 மணி - திருத்தேர் எழுந்தருளல், வீதியுலா.

முற்பகல் 10.30 பச்சைசாத்தி சுவாமி தேரில் இருந்து அவரோகணித்து பஞ்சமுக அர்ச்சனை நடைபெறும்.

அனைத்து அடியார்களும் கலந்து சிறப்பிக்க வேண்டுகின்றோம்.

(95144) தேவஸ்தானகுரு பிரம்மஸ்ரீ சு.மகாதேவசர்மா



**சாமியே சரணம் ஐயப்பா!**

**யாழ்ப்பாணம் ஸ்ரீ ஐயப்ப மணிகண்ட சபை**

மேற்படி ஸ்ரீ ஐயப்ப மணிகண்ட சபையினரின் சபரிமலை யாத்திரைக்கான மண்டல பூஜை பூர்த்தி அபிஷேகம், சகஸ்ரநாம அர்ச்சனை, படிப்பூஜை, இருமுடிகட்டல், சக்திபூஜை (அன்னதானம்) நிகழ்வுகள் எதிர்வரும் 26.12.2002 வியாழக்கிழமை காலை 7 மணி தொடக்கம் 12 மணிவரை நடைபெறும். அனைத்து ஐயப்ப பக்தர்களும் வருகைதந்து ஐயப்பனின் இஷ்ட சித்திகளைப் பெற்று சிறப்புற அன்புடன் அழைக்கின்றோம்.

★ ஸ்ரீ ஐயப்ப மணிகண்ட சபையின் ஊடாக யாத்திரை செய்ய விரும்பும் அடியார்கள் 20.12.2002 வெள்ளி மாலை 4 மணிக்கு முன்னர் சபையினரிடம் தொடர்புகொள்ளவும்.

*இடம்:* செட்டியந்தாழ்வு ஞானவைரவர் ஆலயம்

*இல. 48, 2ஆம் ஒழுங்கை,*
*கந்தர்மடம், யாழ்ப்பாணம்.* (95143) ஸ்ரீ ஐயப்ப மணிகண்ட சபை


## 31 ஆம் நாள் நினைவஞ்சலியும் அந்தியேட்டி அழைப்பும்



தோற்றம் 05 ✦ 06 ✦ 1932

மறைவு 19 ✦ 11 ✦ 2002

## சுப்பிரமணியம் பாலசிங்கம்

*(இளைப்பாறிய R.M.P.)*

பாசத்துடன் எமை வளர்த்து
எம் உயர்வுக்காக மாண்புடன் வாழ்ந்து
வாழ்வுறையும் தெய்வமாகிவிட்ட உங்களை
நினைவு கூர்ந்து துதிக்கின்றோம்.

19.11.2002இல் அமரத்துவம் அடைந்த எமது குடும்பத் தலைவரின் பிரிவுச் செய்திகேட்டு எம் இல்லம் நாடிவந்து எமது துயரில் பங்குகொண்டு எமக்கு அனுதாபம் தெரிவித்தவர்களுக்கும் இறுதிக் கிரியைகளின்போது எமக்கு பல வழிகளிலும் உதவிகள் புரிந்து ஆறுதலளித்த உற்றார், உறவினர்கள், நண்பர்கள், அயலவர்களுக்கும் எமது நன்றியறிதலைத் தெரிவித்துக்கொண்டு, இன்று (19.12.2002) வியாழக்கிழமை நடைபெறுகின்றன ஆத்மசாந்திப் பிரார்த்தனை, மதியபோசனம் ஆகியவற்றில் கலந்துகொள்ளுமாறு அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

*"ஸ்ரீமகால்",*
*நுணாவில் கிழக்கு, சாவகச்சேரி.* மனைவி, மக்கள், மருமக்கள், பேரப்பிள்ளைகள். (C/25484)

### தியானம் குறித்த விளக்க நிகழ்வு

இலங்கை பிரம்மகுமாரிகள் இராஜ யோக நிலையத்தினரின் கண்காட்சியும் விரிவுரையும் நேற்று யாழ்.பல்கலைக்கழக கைலாசபதி கலையரங்கில் நடைபெற்றது.'மன ஒருமைப்பாட்டுக்குத் தியானம்' என்ற தலைப்பிலான விரிவுரையை பிரம்மகுமார் கதிரவேலு ஜெகதீஸன் நிகழ்த்தினார்.

விரிவுரை முடிவில், கலந்துகொண்ட அனைவருக்கும் ஆரம்ப கட்டத் தியானப் பயிற்சியும் வழங்கப்பட்டது. (ஒ-9)

### மீள்குடியமர்வு கொடுப்பனவு நிதிப்பற்றாக்குறை

கிளிநொச்சி மாவட்டத்தில் 11 ஆயிரத்து 527 குடும்பங்கள் மீளக் குடியமர்ந்தபோதும், ஆயிரத்து 888 குடும்பங்களுக்கே மீள்குடியமர்வுக் கொடுப்பனவுகள் வழங்கப்பட்டுள்ளன. ஏனைய குடும்பங்களுக்கு கொடுப்பனவு வழங்க நிதியுதவி கிடைக்கவில்லை எனக் கூறப்படுகிறது.

- இப்படிக் கூறினார் கிளிநொச்சி அரச அதிபர் தி.இராசநாயகம்.

மீளக்குடியமர்ந்த குடும்பங்களுக்குக் கொடுப்பனவு தொடர்பாகக் கேட்டபோதே அவர் இப்படித் தெரிவித்தார்.

எஞ்சிய குடும்பங்களுக்கு கொடுப்பனவு வழங்க 14 கோடி 30 லட்சம் ரூபா தேவையாகவுள்ளது என்றும்- இதற்கான நிதியை வழங்குமாறு அரசிடம் தாம் கோரியுள்ளதாகவும்- அவர் சொன்னார். (ஒ-30)

### வலி.வடக்கு மக்களின் பிரச்சினை குறித்த கலந்துரையாடல்

வலி.வடக்கு,டிசெ.19

வலி.வடக்கு மக்களின் பல்வேறு வகையான பிரச்சினைகள் சம்பந்தமான கலந்துரையாடல் இன்று வியாழக்கிழமை பிற்பகல் 2.00 மணிக்கு சி.சிவமகாராசா தலைமையில் தெல்லிப்பழை பல நோக்குக் கூட்டுறவுச் சங்க மண்டபத்தில் இடம்பெறவுள்ளது.

வலி.வடக்கு பல நோக்குக் கூட்டுறவுச் சங்கக் கிளைகள், விவசாய சம்மேளனங்கள், புனர்வாழ்வுக் கழகங்கள், விவசாய சங்கங்கள், கிராம அபிவிருத்திச் சங்கங்கள், சனசமூகநிலையங்கள், விளை யாட்டுக் கழகங்கள், ஆலய நிர்வாகங்கள், தெங்கு பனம்பொருள் அபிவிருத்திச் சங்கக் கிளைகள், வர்த்தக சங்கங்கள், உற்பத்தியாளர் சங்கங்கள், கடற்றொழிலாளர் சங்கங்கள், கைத்தொழிலாளர் சங்கங்கள், கால்நடை வளர்ப்போர் சங்கங்கள் ஆகியவற்றின் நிர்வாகிகளை இதில் கலந்துகொள்ளுமாறு வேண்டப்பட்டுள்ளது. (ஒ-86)

### அமைய ஊழியரை நிரந்தரமாக்க நடவடிக்கை

குருநகர்,டிசெ.19

அரச திணைக்களங்கள் மற்றும் நிறுவனங்களில் சேவைபுரியும் அமைய தற்காலிக உத்தியோகத்தர்கள், ஊழியர்களை நிரந்தரமாக்க நடவடிக்கை மேற்கொள்ளப்படுகிறது. ஆகவே, இவர்கள் தொடர்பான விவரங்களை உடனடியாகத் தமக்கு அனுப்பிவைக்குமாறு சகல பிரதேச செயலாளர்களையும் பொதுநிர்வாக முகாமைத்துவ மறுசீரமைப்பு அமைச்சுச் செயலாளர் கேட்டுள்ளார்.

இதற்கிணங்க வடக்குக் கிழக்கு மாகாண பிரதேச செயலகங்கள், திணைக்களங்களில் நிரந்தரமாக்கப்படாமல் சேவைபுரியும் இணைந்த சேவையைச் சேராத உத்தியோகத்தர், ஊழியரின் பெயர் விவரம், பதவி, பதவியை நிரந்தரமாக்க முடியாமைக்கான காரணங்கள் ஆகியவைகளுடன்கூடிய விவரங்களை உடன் தமக்கு அனுப்பிவைக்குமாறு வடக்குக் கிழக்கு மாகாண பொதுநிர்வாக அமைச்சு சம்பந்தப்பட்ட திணைக்களங்களைக் கோரியுள்ளது. (ஒ-51)


**PHYSICS A/L - 2004**

**K.றமேஸ் *B.Sc.***

**ஒளியியல் (Light)**

*ஆரம்பம்:* 20.12.02 - 5.30 p.m.
செவ்., வெள்ளி - 4.30

**திகழ் கல்வி நிறுவனம்**

(95138) இணுவில்.


# தெரிவான ஆலயங்களுக்கு அமைச்சு நிதி வழங்கும் விழா

யாழ்ப்பாணம்,டிசெ.19

இந்து கலாசார அமைச்சினால் புனரமைப்புக்கென ஆலயங்களுக்கு ஒதுக்கீடு செய்யப்பட்ட நிதிக்குரிய காசோலைகளை வழங்கும் நிகழ்வு, எதிர்வரும் 22ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 10.30 மணிக்கு நல்லூர் நாவலர் மணிமண்டபத்தில் நடைபெறவுள்ளது.

இந்து கலாசார அமைச்சின் செயலாளர் கே.பரமேஸ்வரன் தலைமையில் நடைபெறும் இந்த நிகழ்வில், ஆசியுரையை நல்லை ஆதீன முதல்வர் ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர தேசிக ஞான சம்பந்த சுவாமிகளும், வரவேற்புரையை இந்து கலாசார அமைச்சின் யாழ்.பிராந்திய உதவிப்பணிப்பாளர் சிவமகாலிங்கமும் வழங்குவர்.

இந்த நிகழ்வில் இந்து கலாசார அமைச்சினால் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்ட 55 இந்து ஆலயங்களுக்கும், 8 இந்து நிறுவனங்களுக்கும் உரிய காசோலைகளே வழங்கப்படவுள்ளன.

இக்காசோலைக்குரிய ஆலயத்தின் தலைவர், பொருளாளர் ஆகியோர் ஆலயத்தின் கடிதத் தலைப்பு, இறப்பர் முத்திரை, வருவோரின் அடையாள அட்டைகள், காசோலை பெறுவதற்கென உறுதிப்படுத்தப்பட்ட சான்றிதழ் கடிதம் ஆகியவற்றுடன் நிகழ்வுக்கு சமுகமளிக்கும்படி கேட்கப்பட்டுள்ளனர். (ஒ-5)

# பதிவுசெய்யாத வாகனங்கள் உள் நுழையத் தடை!

கொழும்பு,டிசெ.19

சட்டபூர்வ உத்தரவுப் பத்திரங்கள் இல்லாத வாகனங்கள், மோட்டார் சைக்கிள்கள் இராணுவக் கட்டுப்பாட்டுப் பகுதிக்குள் வருவது அனுமதிக்கப்படமாட்டாது என்று இராணுவத்தினர் தெரிவித்திருப்பதாக இலங்கை வானொலி அறிவித்துள்ளது.

இராணுவத்தின் கட்டுப்பாட்டில் இல்லாத பகுதியிலிருந்து சட்டபூர்வ உத்தரவுப் பத்திரம் இல்லாத வாகனங்கள் மற்றும் மோட்டார் சைக்கிள்கள் இராணுவக் கட்டுப்பாட்டுப் பகுதிகளுக்குள் வந்துசெல்வதாகத் தகவல் கிடைத்துள்ளதையடுத்து இராணுவத் தரப்பு இந்த உத்தரவை விடுத்துள்ளது.

இவ்வாறு சட்டபூர்வ உத்தரவுப் பத்திரம் இல்லாமல் உள்நுழையும் எந்தவொரு வாகனமும் திருப்பி அனுப்பப்படும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

இராணுவக் கட்டுப்பாட்டுப் பகுதிகளுக்குள் பிரவேசிக்கும் வானங்களின் உரிமையாளர்கள், தமது வாகனத்திற்குரிய உத்தரவுப்பத்திரங்களைப் பெறுவதற்கு ஏற்கனவே ஒரு மாதகால அவகாசம் வழங்கப்பட்டது என்றும்-

அந்த அவகாசம் மேலும் ஒரு மாதகாலத்துக்கு நீடிக்கப்படுவதாகவும் இக்காலப்பகுதி முடிவடைந்ததும் இந்த நடைமுறை இறுக்கமாகக் கடைப்பிடிக்கப்படும் எனவும் இலங்கை வானொலி தெரிவித்தது. (ஐ-12)

### உதவிப் பொருள்கள் வழங்கப்பட்டன

இலங்கை செஞ்சிலுவைச் சங்க சாவகச்சேரிக் கிளையினர் தென்மராட்சிப் பிரதேசத்தைச் சேர்ந்த ஒன்பது கிராம அலுவலர் பிரிவுகளில் மீளக் குடியமர்ந்துள்ள குடும்பங்களில் வறுமைக்கோட்டின்கீழ் வாழும் 50 குடும்பங்களுக்கு உணவுப்பண்டம் அல்லாத பொருள்களை வழங்கியுள்ளனர். (ஒ-117)

## ஏழாம் ஆண்டு நினைவஞ்சலி



அன்னை மடியில் 13 - 03 - 1956

ஆண்டவன் அடியில் 05 - 01 - 1996

அமரர்

## முத்துக்கிருஷ்ணர் சிவகுமாரன்

(குமார்)

திதி: 19.12.2002

கருணையில் வள்ளலாய் கடமையில் வீரனாய்
திடமான மனதுடனே தீரனாய் வாழ்ந்த எம் அன்புக் குமாரா
நீ எங்கே? நின் பிரிவு தாழாது ஆறாத்துயருடனே
ஏழாண்டு நிறைவுதனை இந்நாளில் நினைவு கூருகின்றோம்.

*காளிகோவிலடி,*
*மல்லாகம்.* (C/25486)

உன்பிரிவால் வாடும்:
பிள்ளைகள், தாய்,
சகோதரர்கள்.

## மரண அறிவித்தல்கள்

### சின்னவி அருள்

சூசையப்பர் கோவிலடி, அலுக்கை, அளவெட்டியைச் சேர்ந்த சின்னவி அருள் அவர்கள் 13.12.2002 வெள்ளிக்கிழமை காலமானார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று(19.12.2002) வியாழக்கிழமை அவரது இல்லத்தில் நடைபெற்றுப் பூதவுடல் மல்லாகம் இந்து மயானத்தில் தகனஞ்செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரும ஏற்றுக்கொள்ளவும்.

*சூசையப்பர் கோயிலடி,*
*அலுக்கை, அளவெட்டி.* (95142)

தகவல்:
அ.முருகானந்தம் (மகன்)

### திருமதி சுப்பிரமணியம் தெய்வானைப்பிள்ளை

(தங்கம்மா)

புலோலி தெற்கைச் சேர்ந்த திருமதி சுப்பிரமணியம் தெய்வானைப்பிள்ளை (தங்கம்மா) 15.12.2002 ஞாயிற்றுக்கிழமை காலமானார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (19.12.2002) வியாழக்கிழமை காலை 10மணிக்கு அவரது இல்லத்தில் நடைபெற்றுப் பூதவுடல் புலோலி ஆனைவிழுந்தான் மயானத்தில் தகனஞ்செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*புலோலி தெற்கு, புலோலி.* (95136)

தகவல்:
குடும்பத்தினர்.

# பரீட்சைகள் எதிர்நோக்கும் பிரச்சினைகள்:
# தரம் 5 புலமைப்பரிசில் திட்டம் மறுபரிசீலனை செய்யப்படவேண்டும்

மாணவனை அளவிட பரீட்சை ஓர் அளவு கோலாக பயன்படுத்தப் பட்டு வருகிறது. ஐரோப்பியர் இப் பரீட்சை முறையை உலகுக்கு அறிமுகப்படுத்தினர்.

இலங்கை போன்ற கீழைத்தேய நாடுகளில் பண்டைய குருகுலக் கல்வி முறைமை நிலவிய காலந் தொட்டு மாணவரை அளவிடுவதில் அக்கால ஆசான்கள், உபாத்தியாயர்கள் பல்வேறு மதிப்பீட்டு உபாயங்களைக் கையாண்டு வந்துள்ளனர்.

பாடசாலைக் கல்வி முறைமையில் இம்மதிப்பீடு பல்வேறு ரூபங்களில் தொடர்ந்துவருவதை அனைவரும் அறிவர். கல்வித்துறையில் இன்று மதிப்பீடானது கணிப்பீடாக ஒரு தலைமுறைப் பெயர்வுக்கு உள்ளாகியுள்ளது.

மாணவர்களின் கற்றல் அடைவுகளைக் கணிப்பிட பரீட்சைகள் உதவுகின்றன. இன்று அபிவிருத்தியடைந்த பலநாடுகளில் வகுப்பறை மட்டக் கணிப்பீடு சிறந்ததாகப் பின்பற்றப்பட்டு வருகிறது.

எழுத்துச் சோதனைகள்மூலம் கணிப்பிடமுடியாத அறிவுசார்திறன்கள் அல்லாத ஏனைய திறன்களை, ஆளுமைப் பண்புகளை, தேர்ச்சிகளை அடிப்படைத் தேர்ச்சி மட்டங்களைக் கணிப்பிட பாடசாலை மட்டக் கணிப்பீடு உதவுகிறது.

இலங்கையில் 1998முதல் அறிமுகமான பாடசாலை மட்டக் கணிப்பீட்டுத் திட்டத்தை தரம் 6 முதல் தரம் 9 வரை தேசிய கல்வி நிறுவகமும், 2001முதல் பரீட்சைத் திணைக்களமும் தரம் 10-11இற்கும் நடைமுறைப்படுத்திவருகின்றன.

பாடசாலை மட்டக் கணிப்பீடு தொடர்பான பூரண விளக்கங்கள்

| விவரம் | 1999 | 2000 | 2001 |
|---|---|---|---|
| விண்ணப்பித்தோர் | 53,712 | 52,577 | 61,704 |
| தோற்றியோர் | 47,617 | 47,510 | 54,886 |
| வெட்டுப்புள்ளிக்கு மேல் சித்தி | 4,522 | 4,309 | 4,257 |
| ஆகக்கூடிய புள்ளி | 187 | 185 | 186 |
| புலமைப் பரிசில் பெற்றவர்கள் | 2,484 | 2,484 | 2,497 |

ஆசிரியர்களை சரியாக எட்டியுள்ளனவா? அவை சரியாக அமுல்படுத்தப்படுகின்றனவா? என்பது ஆய்வுக்குரியதாகும். ஆசிரியர்களுக்கு மேலதிக சுமை, பளு என்றும் கூறப்படுகிறது. பொதுப் பரீட்சைகளாக தரம் 5 புலமைப்பரிசில் பரீட்சை, க.பொ.த. (சா/த), (உ/த) பரீட்சைகள் இடம்பெற்றுவருகின்றன.

திறமைமிக்க வறிய மாணவர்கள், உயர்கல்வியைத் தொடர இப்புலமைப் பரிசில் திட்டம் நன்கொடை அளிக்கிறது. பிரபலமான பாடசாலைக்குச் செல்லவும் ஏற்பாடு செய்கிறது.

கடந்த மூன்று ஆண்டுகளில் தரம் 5 புலமைப்பரிசில் பரீட்சையில் தோற்றி சித்திபெற்றோர் விவரம் இங்கு தரப்படுகிறது.

வினா அமைப்பிலும் மாற்றம் வந்துள்ளது. அவை மேலும் மாற்றம் பெறலாம். முன்பு வினாப்பத்திரம் i - தமிழ், வினாப்பத்திரம் ii - கணிதம் என்றிருந்தது. தற்போது வினாப்பத் திரம் i - நுண்ணறிவு பரீட்சித்தல் வினாப்பத்திரம் ii - மொழி 30%, கணிதம் 30%, ஏனையவை 40%.

தரம்5 புலமைப்பரிசில் பரீட்சையில் வினாத்தயாரிப்பு, மொழிபெயர்ப்பு தொடர்பான பிரச்சினைகள், கலாசாரம் தொடர்பான பிரச்சினைகள் என்பன அடிக்கடி எதிர்நோக்கப்பட்டு வருகின்றன.

தரம்5 புலமைப் பரீட்சை மிகவும் போட்டி வாய்ந்த, குறிப்பாக பெற்றோர் மத்தியில் மிகவும் முக்கியம் வாய்ந்த பரீட்சையாக மாறிவருகிறது.

10வயது பிள்ளையை கசக்கிப் பிழிவதற்கு இப்பரீட்சை வழிசமைக்கிறது கல்வியியல் நிபுணர் பியாஜேயின் கல்விச் சிந்தனைக்கு மாறாக இதன்போக்கு அமைந்திருப்பதனைக் காணலாம். வயதுக்கு மீறிய சுமை ஏற்றப்படுகிறது. எதிர்காலத்தில் இப் பரீட்சை ஏழாம் தரத்திற்கு கொண்டு செல்லப்படவிருக்கிறது என்ற கருத்து உயர்மட்டத்தில் ஏற்றுக்கொள்ளப்பட்டுள்ளது.

இதேவேளை, தரம் 5 புலமைப் பரிசில் பரீட்சையை வைத்துப் பலர் வியாபாரமும் செய்துவருகின்றனர். கல்விக் கருத்தரங்கு என்று பல வர்ணங்களில் நோட்டீஸ்கள், விளம்பரங்கள் வெளியிடப்படுகின்றன

ஒரு வகுப்பிற்கு சுமார் 500 மாணவர்கள் ஒரு சில மணி நேரத்தில் 50 ஆயிரம் ரூபா பணத்தைச் சம்பாதித்தவர்களாக இருக்கின்றார்கள். போட்டியின் காரணமாக வியாபாரம் மேலும் முன்னேற்றம் கண்டுள்ளது.

இப்பரீட்சை முறைமையில் மாற்றம் அவசியமென்று தற்போது உணரப்பட்டுள்ளது.

இனி க.பொ.த.(சா/த), (உ/த) பரீட்சைகளை எடுத்துக்கொள்வோம்.

(சா/த) பரீட்சை டிசெம்பரிலும், (உ/த) பரீட்சை ஏப்ரலில் நடைபெற்று வருகின்றன.

தமிழ்மொழிமூல வினாத்தாள்கள் தொடர்பான பிரச்சினைகள், மொழி பெயர்ப்பிலும் கலாசார விடயத்திலும் எழத்தான் செய்கின்றன.

பரீட்சை நடத்துவதிலும் பல பிரச்சினைகள் எழுகின்றன. குதிரை ஓட்டம், ஆள்மாறாட்டம், ஆளுக்காள் தாள் மாற்றுதல், பரீட்சகர் உதவுதல் இப்படிப் பல பிரச்சினைகள் இன்றும் வலம் வருகின்றன. அவற்றை நிறுத்த முடியாதிருப்பதற்குப் பல காரணங்கள் உண்டு.

ஆள்மாறாட்டத்தைக் கண்டுபிடிக்கும் பரீட்சகருக்கு நீதிமன்றத் தாமதம் போன்ற காரணங்களால் அவர்கள் ஆள்மாறாட்டத்தைப் பிடிக்க தயக்கம் காட்டுவது இயல்பு.

மேலும், மதிப்பீட்டுப் பணியை விட பரீட்சகர் தெரிவுப்போக்கு பல மாவட்டங்களிலும் சர்ச்சைக்குரியதாகி வருவதைப் பத்திரிகைகளின் செய்திகள் கூறுகின்றன.

நம்பகம், தகுதி, நம்பிக்கை என்பனவற்றை வைத்து விரும்பியவர்களைத் தெரிவுசெய்யும் நடைமுறை ஆய்வுக்குட்படுத்தப்படவேண்டியது.

அதிகாரிகளுக்கு ஆலவட்டம் போடும் சிலருக்குத் தொடர்ந்து (சா/த), (உ/த), புலமைப்பரிசில் பரீட்சை என்று கிடைத்துவருவதனையும் சுட்டிக்காட்டுகிறார்கள்.

உண்மையான சிலருக்கு பரீட்சைக் கடமை மறுக்கப்படுவதும் நிகழ்ந்துள்ளது. பரீட்சகர் பதவியை வைத்து வியாபாரம் அல்லது செல்வாக்குச் சேர்க்கும் கைங்கரியங்களும் இடம்பெற்றுத்தான் வருகின்றன.

வேலியே பயிரை மேயும் கதையும் இடம்பெறாமலில்லை. இவை பரீட்சைத் திணைக்களம் எடுக்கும் இதயசுத்தியான, நேர்மையான சோதனையின்மூலம் நிவர்த்திக்கப்படலாம். அதிலிருந்து தவறினால் பரீட்சையின் நம்பகத்தன்மை இல்லாமற்போகும் வாய்ப்புண்டு.

**வி.ரி.சகாதேவராஜா**

பரீட்சைப் பெறுபேறுகளில் குறிப்பாக கணிதம், விஞ்ஞானம், ஆங்கிலம் போன்ற பாடங்களில் தமிழ் மொழிமூல மாணவர்களின் அடைவு மட்டம் ஆய்வுக்குட்படுத்தப்படவேண்டியதாகும். எனவே, பரீட்சை - பரீட்சையாக நடைபெற அனைவரும் விழிப்பாக இருத்தல் அவசியம்.

## 'கலாபூசணம்' விருது வைபவம் 26ஆம் திகதிக்கு ஒத்திவைப்பு

யாழ்ப்பாணம்,டிசெ.19

இந்துசமய கலாசார அலுவல்கள் திணைக்களத்தினால் வருடந்தோறும் நடத்தப்பட்டுவருகின்ற 'கலாபூரணம்' விருது வழங்கும் வைபவம் இம்மாதம் 26ஆம் திகதிக்குப் பிற்போடப்பட்டுள்ளதாகத் திணைக்களப் பணிப்பாளர் அறிவித்துள்ளார்.

முன்னர் இவ்வைபவம் இன்று வியாழக்கிழமை நடைபெறும் என அறிவிக்கப்பட்டிருந்தது. ஆயினும், தவிர்க்கமுடியாத காரணத்தினால் இவ்வைபவம் இம்மாதம் 26ஆம் திகதிக்கு ஒத்திவைக்கப்பட்டுள்ளதென கலாசார அலுவல்கள் திணைக்களம் அறிவித்துள்ளது.

எதிர்வரும் 26ஆம் திகதி காலை 10 மணிக்கு கொழும்பு ஆனந்தக் குமாரசாமி மாவத்தையில் அமைந்துள்ள ஜோன் டி சில்வா கலையரங்கில் இவ்வைபவம் நடைபெறவுள்ளது. (ஓ-8)

## உள்ளம் என்ற ஆலயம்



எத்தனையோ பேர் இவ்வுலகில் வேதங்களையும், புராணங்களையும் படித்துள்ளனர். ஆனாலும் அவர்களது எண்ணங்கள் எல்லாம் நேராக இல்லாமல், வக்ரமாகி, மாறுபட்டு நிற்கின்றன. பண்டைக்காலத்தில் இருந்தே முனிவர்களும் ரிஷிகளும் எத்தனையோ ஆன்மீக சாதனைகளை மேற்கொண்டு சத்தியத்தைத் தேடிவந்தனர். சத்தியதரிசனம் கிடைக்கும் வரை அவர்கள் தங்கள் முயற்சியைக் கைவிடவில்லை. கடைசியாக அவர்கள் இறைவனின் தரிசனத்தைப் பெற்றனர்.

இறைவன் ஒளிமிகுந்து ஜாஜ்வல்யமான பிரகாசம் மிகுந்தவர் என்றும், அஞ்ஞான இருளிலிருந்து அப்பாற்பட்டவர் எனவும் அவர்கள் அறிவித்தனர். அதுமட்டுமல்ல, கடவுள் எங்கோ தள்ளி தூரதேசத்தில் இல்லையென்றும், மனித உடலிலுள்ளேயே உறைகின்றார் எனவும் தெரிவித்தனர். ரிஷிகளுக்கு கடவுளின் காட்சி கிடைத்தது. அவர் சின்மயமாக (பிரகாசமான ஒளியாக) மனித உடலினுள் நிறைந்திருக்கிறார் எனக் கூறுகின்றனர். ஆகவே, நாம் நமது உடலை வெறும் கேவலமான

**சாயி சிந்தனை**

உலகியல் சுகங்களுக்காக ஏற்பட்டது என்ற தவறான உணர்வுக்கு இடமளிக்கக்கூடாது. உடல் என்பது இறைவன் வாழும் ஆலயமாகும். இதனை ஒரு பெரிய இரும்பு பாதுகாப்புப் பெட்டகத்துக்கு ஒப்பிடலாம். விலைமதிக்க வொண்ணாத பொருள்களை பாதுகாப்புப் பெட்டகத்தினுள் பாதுகாப்புடன் வைக்கிறோம். அதுபோல் பகவானும் மனித உடலில் குடிகொண்டிருக்கிறார். ஆகவே, உள்ளிருக்கும் விலையுயர்ந்த ஆத்மா என்ற அணிகலனுக்காக உடலை ஜாக்கிரதையாகப் பாதுகாக்கவேண்டும். தங்கமும் வைரமும் பூமியிலிருந்தே கிடைக்கின்றன. அதேபோல் இறைவனின் இருப்பை, ஆத்மா என்ற அணிகலனை மண்ணாலான இந்த உடலினுள் தான் தேடிக்கண்டுபிடிக்க இயலும்.

ஆத்ம தத்துவத்தை அனுபவிக்கத் தடையாக, நம் வழியில் வருவது எது என்பதை ஆராய்ந்து உணர்ந்து கொள்ளவேண்டும். அகங்காரம், மமகாரம் என்ற இரண்டுமே இதற்குத் தடைகளாக இருக்கின்றன. மமகாரமும், அகங்காரமும் விலகினால்தான் உங்களுக்குத் தூய்மையான இதயம் உருவாகும். தூய்மையான இதயமே உயர்ந்த ஞானத்தை நீங்கள் அனுபவிப்பதற்கு இட்டுச்செல்லும். உங்களுக்குப் பற்றுதல் அதிகமாக, அதிகமாக பதற்றம் மேலும் அதிகரிக்கும். அகங்காரம் என்பது மிகவும் ஆபத்தானது. மனிதப் பிறவியின் குணப்படுத்தமுடியாத நோய் அது. ஆகவே, அகங்காரத்தையும், மமகாரத்தையும் கட்டுப்பாட்டுக்குள் வைத்துக்கொண்டு, உங்களை ஆத்மாவிற்குள் தேடுவதற்குத் தயார்ப்படுத்திக் கொள்ளுங்கள். *(ஆதாரம்: பிரசாந்தியில் பூத்த புதிய மலர்கள்)*





ஓய்வுபெற்ற வங்கியாளர்களைக் கௌரவிக்கும் நிகழ்வு யாழ்ப்பாணக் கல்லூரி மண்டபத்தில் அண்மையில் நடைபெற்றது.

இந்நிகழ்வில் கலந்துகொண்ட வங்கியாளர் சங்கத்தின் செயலாளரும் இலங்கை வங்கி யாழ்.இரண்டாம் கிளையின் முகாமையாளருமான ந.சிவரட்ணம், தேசிய சேமிப்பு வங்கியின் முகாமையாளர் எம்.சிவானந்தம், ஓய்வூதியர் சி.அருணாசலம், வடமாகாண வங்கி ஓய்வூதியர் நலன்புரிச் சங்கத் தலைவர் ஆர்.சுந்தரலிங்கம், யாழ்.பல்கலைக்கழக கலைப்பீடாதிபதி ப.கோபாலகிருஷ்ணஐயர், வர்த்தக வங்கியின் முகாமையாளர் எஸ்.ரவீந்திரா ஆகியோரை முதலாவது படத்திலும் ஓய்வூதியரான திருமதி கே.மயில்வாகனத்துக்கு தேசிய சேமிப்பு வங்கியின் முகாமையாளர் பரிசில் வழங்கிக் கௌரவிப்பதை இரண்டாவது படத்திலும் காணலாம். (ஒ-10)

## புதைத்த கசிப்பை எடுக்கவந்தோர் - பிடிபட்டனர்

கொழும்புத்துறை,டிசெ.19

கொழும்புத்துறை ஆனந்தன்வடலிப் பகுதியில் நேற்றுமுன்தினஇரவு சந்தேகத்துக்கு இடமான முறையில் பிளாஸ்ரிக் கொள்கலனுடன் நடமாடிய ஒரு நபரும் சிறுவனும் விழிப்புக்குழுவினரால் மடக்கிப் பிடிக்கப்பட்டு விசாரிக்கப்பட்டனர். அவர்கள் தெளிவற்ற விதத்தில் பதிலளித்து தப்பிக்க முயன்றதை அடுத்து கலாசாரத்தைப் பேணும் இளைஞர் குழுவின் கவனத்துக்கு விடயம் கொண்டுசெல்லப்பட்டது.

அவர்கள் தீவிர விசாரணையில் தாம் கசிப்பு உற்பத்தியில் ஈடுபடுபவர்கள் என்றும் -

மறைத்து வைத்திருக்கும் கசிப்பை எடுக்கவே அங்கு சென்றதாகவும் -

அந்த நபர் தெரிவித்தார்.

இதனையடுத்து அவர்கள் குறிப்பிட்ட இடத்திற்குச் சென்று பாலுடன் நிலத்தில் புதைத்து வைக்கப்பட்டிருந்த பெருளவு கசிப்பு மற்றும் கோடா என்பவை கைப்பற்றி அழித்தொழிக்கப்பட்டன. இவ்வாறான சமூக விரோதச் செயல்களில் இனிமேல் ஈடுபடக்கூடாதென எச்சரிக்கப்பட்டு அந்த இருவரும் விடுவிக்கப்பட்டனர்.

இப்பகுதியில் அண்மையில் 500 லீற்றருக்கும் மேற்பட்ட கசிப்பு மற்றும் கோடா என்பவை கலாசாரத்தைப் பேணும் இளைஞர்களால் கண்டுபிடிக்கப்பட்டு அழிக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (ஒ-30)

## கழிவுநீர் வாய்க்கால் குறித்து யாழ்.வர்த்தகர் முறைப்பாடு

யாழ்ப்பாணம்,டிசெ.19

யாழ்.மருத்துவமனை வீதியின் தென்புறத்தில் சத்திரச் சந்திக்கும், கஸ்தூரியார் வீதிச் சந்திக்கும் இடையேயுள்ள கழிவுநீர் வாய்க்காலில் கழிவுநீர் தேங்கியுள்ளது. இதனால் அப்பகுதியில் கடும் துர்நாற்றம் வீசுகிறது.

அப்பகுதியில் உள்ள 30இற்கும் மேற்பட்ட வர்த்தக நிலையங்களின் உரிமையாளர்கள் இவ்வாறு யாழ்.மாநகரசபை ஆணையாளருக்குத் முறைப்பாட்டுக் கடிதம் ஒன்றை அனுப்பியுள்ளனர்.

குடாநாட்டில் தொற்று நோய்கள் பரவும் அபாயம் ஏற்பட்டுள்ள நிலையில், இவ்வாறு கழிவுநீர் தேங்கி துர்நாற்றம் வீசுவது சுகாதாரக் கேட்டை உருவாக்கும் என்றும் அக்கடிதத்தில் வர்த்தகர்கள் சுட்டிக் காட்டியுள்ளனர்.

தமது முறைப்பாடு தொடர்பாக உடனடி நடவடிக்கை எடுக்கும் படியும் அவர்கள் கோரியுள்ளனர். (ஓ)

## ஆடியபாதவீதியின் ஒருபகுதி மிக மோசமாகச் சேதம்

நல்லூர்,டிசெ.19

ஆடியபாத வீதியில் - கல்வியங்காட்டுச்சந்திக்கும் நாயன்மார்கட்டுச் சந்திக்கும் இடையிலான ஒரு கிலோ மீற்றர் நீளமான பகுதி - மிகவும் மோசமான முறையில் சேதமடைந்து காணப்படுகிறது கடந்த 30 ஆண்டுகளுக்கு மேலாக இந்த வீதியில் திருத்த வேலைகள் எதுவும் மேற்கொள்ளப்படவில்லை என்று தெரிவிக்கப்படுகின்றது.

இப்பகுதியில் கிளை வீதிகள் பலவும்கூட தாருற்றி புனரமைக்கப்பட்டிருக்கின்றன. வாகனப்போக்குவரத்து நிறைந்த ஆடியபாத வீதி மட்டும் சேதமடைந்த நிலையில் அப்படியே கைவிடப்பட்டுள்ளது.

இருபாலை தெற்கு, நல்லூர் வடக்கு, திருநெல்வேலி கிழக்கு ஆகிய பகுதிகளிலிருந்து செம்மணி மயானத்திற்கு தகனக்கிரியைக்காகச் செல்வோரும் இந்த வீதியையே பிரதானபாதையாகப் பயன்படுத்திவருகின்றனர். யாழ். மாநகரசபையின் 12 ஆம் வட்டாரத்திற்குள்வரும் இவ்வீதியை உடனடியாகத் திருத்துவதற்கு நிதி இல்லை என மாநகர சபை வட்டாரங்கள் தெரிவித்தன. (ஐ-ரி)

## ஆயுத முனையில் பறிக்கப்பட்ட

# திக்கம் வடிசாலையை மீளப்பெற ஜனநாயக வழியில் போராடுகின்றோம்!

## தரமறுத்தால் நடவடிக்கை விஸ்தரிப்பு என்கிறார் கொத்தணித் தலைவர்

யாழ்ப்பாணம்,டிசெ.19

அன்று ஆயுதமுனையில் எம்மிடமிருந்து பறிக்கப்பட்ட திக்கம் வடிசாலையை இன்றைய ஜனநாயக அரசிடம் ஜனநாயக வழியில் கேட்கின்றோம் தரமறுத்தால் எமது போராட்டம் விஸ்தரிக்கப்படும்.

- இவ்வாறு வடமராட்சி பனை, தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கங்களின் கொத்தணித் தலைவர் கா.குணராசா தெரிவித்துள்ளார்.

நேற்று யாழ்.மாவட்ட பனை அபிவிருத்திச் சபையின் தலைமையகம் முன்பாக திக்கம் வடிசாலையை மீண்டும் வடமராட்சி கொத்தணி நிர்வாகத்திடம் கையளிக்கவேண்டுமெனக் கோரி இடம்பெற்ற மறியற் போராட்டத்தில் கலந்துகொண்டிருந்தபோதே அவர் இதனைக்கூறினார்.

அவர் அங்கு மேலும் தெரிவித்ததாவது:-

டக்ளஸ் தேவானந்தா வடக்கு புனர்வாழ்வு புனரமைப்பு அமைச்சராகவிருந்த காலகட்டத்தில் ஆயுதமுனையில் அன்றைய தலைவராகவிருந்த வி.ஸ்ரீராமச்சந்திரனிடம் இருந்து திக்கம் வடிசாலை பனை அபிவிருத்திச் சபைக்கும் பெற்றுக்கொடுக்கப்பட்டது. இதற்கு எம்மிடம் போதிய ஆதாரங்கள் உண்டு. அன்றைய தலைவருக்கு கொலை மிரட்டல் விடப்பட்டது. அத்துடன் வழக்குத் தாக்கல் செய்ய எந்த நீதிமன்றுக்கும் செல்லக் கூடாதெனவும் எச்சரிக்கப்பட்டார். ஆயுதமுனையில் அப்போது வடிசாலை எம்மிடமிருந்து பறிக்கப்பட்டது. ஆனால், நாம் இப்போது ஜனநாயக முறையில் வடிசாலையை மீளத் தரும்படிகோரிப் போராடுகிறோம். அவ்வடிசாலையை எமது உரிமையாகவும், உடைமையாகவும் கருதுகின்றோம். மீண்டும் அதனை நாம் பெறாது எமது போராட்டம் முடிவடையாது.

இன்று வடமாகாண பனை, தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கங்களின் உறுப்பினர்கள் அனைவரும் போராட்டத்தில் கலந்துகொண்டனர். அவர்களின் முழுப்பங்களிப்பும் தொடரும்; போராட்டத்தின் போது கிடைக்கும்.

எதிர்வரும் திங்கட்கிழமைக்கிடையில் நல்லதொரு பதில் கிடைக்காதுவிடில் இப்போராட்டம் வலுவாகி யாழ். மாவட்டம் முழுவதும் பரவும்.

இந்த வடிசாலைமூலம் அன்று எமக்கு ஆறுகோடி ரூபா நட்டம் ஏற்பட்டிருந்தது. ஆனால் இன்று எமது சகல உற்பத்தி வருமானங்களும் அந்த வடிசாலையினூடாக இந்து கலாசார அமைச்சுக்குச் செல்கின்றன.

இந்தநிலை தொடரவிடமாட்டோம். ஏழைத்தொழிலாளர்களின் வயிற்றில் அடித்துப் பெறப்படும் வருமானத்தில் எவரெவருக்கோ ஓட்டோக்களும் கௌரவங்களும் வழங்கப்படுகின்றன. ஆனால், வடிசாலைக்கு கள்ளை வழங்கும் தொழிலாளி ஓடுவதற்கு ஓட்டைச் சைக்கிள்கூட ஒழுங்காக இல்லை.

எம்மைக் கொண்டு வருமானமீட்டி இன்னொருவர் வாழ்வதை நாம் அனுமதியோம். ஏழைகள் சுரண்டப்படுகின்றனர். இதற்கு அமைச்சர் மகேஸ்வரன் துணைபோவது எமக்கு மிகுந்த மனக்கவலையை ஏற்படுத்துகின்றது.

உடனடியாக அமைச்சரும் சம்பந்தப்பட்டவர்களும் இந்த விடயத்தில் எமக்கு சாதகமான பதிலைத் தருவார்களாயின் எல்லோர்க்கும் நன்மையே. இல்லாவிடில் எமது போராட்டம் பாரிய வடிவம்பெறும்.

- என்று அவர் தெரிவித்தார். (ஒ-12-5)

# மணிவாசகர் சபை நடத்திய சமயப் போட்டி முடிவுகள்

காரைநகர்,டிசெ.19

காரைநகர் மணிவாசகர் சபை காரைநகர் பாடசாலை மாணவர்களுக்கிடையே நடத்திய சைவ சமயப் பாடப் பரீட்சை முடிவுகள் வெளியாகின.

தரம் ரீதியாக முதல் மூன்று இடங்களைப் பெற்ற மாணவர்களின் பெயர்கள் முறையே வருமாறு:-

*தரம் - 2* ந.பாலகுமார் (வலந்தலை வடக்கு அ.மி.த.க.பாடசாலை), உ. பிரியங்கா (சுந்தரமூர்த்தி நாயனார் வித்தி.), சி.இராகுலன் (தியாகராசா ம.ம.வி.),

*தரம் - 3* ஏ.தர்ப்பரன் (வலந்தலை வடக்கு அ.மி.த.க.பாடசாலை), சி. சிவரஞ்சனா (வலந்தலை வடக்கு அ.மி. த.க. பாடசாலை), ப.லோகவர்ணா (வலந்தலை வடக்கு அ.மி.த.க.பாடசாலை),

*தரம் - 4* ச.ராகவன் (யாழ்ரன் கல்லூரி), பி.நோபஸ்ரத்தினசிறி (வலந்தலை வடக்கு அ.மி.த.க.பாடசாலை), கு.ஜெயந்தி (வலந்தலை வடக்கு அ.மி.த.க.பாடசாலை),

*தரம் - 5* க.தயாபரன் (வலந்தலை வடக்கு அ.மி.த.க.பாடசாலை), த.விததியாதரன் (யாழ்ரன் கல்லூரி), ச. தினேஸ்வரன் (சுந்தரமூர்த்தி நாயனார் வித்தியாலயம்),

*தரம் - 6* - வி.பாலேந்திரன் (யாழ்ரன் கல்லூரி), செ.சசிகலா (யாழ்ரன் கல்லூரி), வி.ராகவி (தியாகராஜா ம.ம.வி.),

*தரம் - 7* வே.தேவகுமாரி (தியாகராஜா ம.ம.வி.), ம.சாம்பவி (யாழ்ரன் கல்லூரி), ச.சுபதர்சினி (தியாகராஜா ம.ம.வி.),

*தரம் - 8* கு.சோபனா (தியாகராஜா ம.ம.வி.), பா.அருள்பாலினி (தியாகராஜா ம.ம.வி.), க.அனுசியா (தியாகராஜா ம.ம.வி.),

*தரம் - 9* வி.மயூரதன் (தியாகராஜா ம.ம.வி.), சி.சிவப்பிரியா (தியாகராஜா ம.ம.வி), ந.தர்சிகா (தியாகராஜா ம.ம.வி.),

*தரம் - 10* க.சித்திரபானு (தியாகராஜா ம.ம.வி), தி.பவிதா (தியாகராஜா ம.ம.வி.), நா.உஷா (தியாகராஜா ம.ம.வி.) (ஒ-73)


நத்தார் புதுவருடத்தை முன்னிட்டு

CHRISTMAS TREE
CHRISTMAS (லைட்கள் உட்பட)
சிங்கப்பூர் சோடனைப் பொருள்கள்
ஓடியோ - வீடியோ CD
(சினிமாப்படம், சினிமாப் பாடல்கள், பக்திப் பாடல்கள்)
மின்சார இலத்திரனியற் பொருள்கள்
மொத்தமாகவும் சில்லறையாகவும் பெற நாடுங்கள்

ஏசியன் எலக்ரோனிக்சென்ரர்
இல. 11/4, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம்.
T.P. 0777 785549 (11951)

இதோ வந்துவிட்டது!!
DSI சைக்கிள் ரயர்!
DSI சைக்கிள் ரியூப்!
அதிரடி விலைகளில்




யாழ். மக்களின் நன்மதிப்பை வென்ற
DSI ரயர் மற்றும் ரியூப்
வகைகளை மிகக் குறைந்த
அதிரடி விலைகளில்
பெற்றுக்கொள்ளவும்

ஜப்பானிலிருந்து நேரடியாக இறக்குமதி செய்யப்பட்ட சைக்கிள்களை பெற்றுக்கொள்ளவும் நாடவேண்டிய ஒரே ஸ்தாபனம் (சி25.485)

லக்ஷ்மி நிறுவனம்
இல.253, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம்.
(ஸ்ரீதர் தியேட்டர் அருகில்)


## சொற்பொழிவு

யாழ்ப்பாணம்,டிசெ.19

தாவடி சாயி நிலையத்தில் இன்று வியாழக்கிழமை மாலை 5.30 மணிக்கு 'பகவத்கீதையும் வாழ்க்கையும்' என்ற பொருளில் டாக்டர் வாணி பிள்ளை சொற்பொழிவு நிகழ்த்துவார். (ஒ)

## திருப்பாவை போட்டி பிற்போடப்பட்டது

யாழ்ப்பாணம், டிசெ.19

தெல்லிப்பழை வடக்கு ஸ்ரீ வல்லிபுர ஆழ்வார் ஆலய அறங்காவலர் சபையினரால் இன்று வியாழக்கிழமை நடத்தப்படவிருந்த திருப்பாவை ஓதுதல் போட்டி தவிர்க்க முடியாத காரணத்தால் பிற்போடப்பட்டுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

இப்போட்டி எதிர்வரும் ஜனவரி மாதம் 12 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் ஒரு மணிக்கு இடம்பெறும். (ஒ)


தவறிவிட்டது

கதிரவேலு மருதலிங்கம் ஆகிய எனது முக்கிய ஆவணங்களை முகமாலையில் இருந்து யாழ்ப்பாணம் ரோக்கி வந்த பஸ்ஸில் (18. 12. 2002) புதன்கிழமை தவறவிட்டுவிட்டேன்.

தவறுதலாக எடுத்துச்சென்றவர் தயவுசெய்து கீழ்க்காணும் முகவரியில் ஒப்படைக்கவும்.

மயூரா பான்சிகவுஸ்
7,8, நவீனசந்தை (உட்புறம்)
யாழ்ப்பாணம். (95147)


# விளையாட்டுச் செய்திகள்

## யாழ்.மத்திய கல்லூரி அணி வெற்றிபெற்றது

யாழ்ப்பாணம்,டிசெ.19

கொழும்பு ஆனந்தாக் கல்லூரி மற்றும் யாழ்.மத்திய கல்லூரி ஆகியவற்றின் 16 வயதிற்குட்பட்ட அணிகளுக்கிடையில் நேற்று யாழ் மத்திய கல்லூரி மைதானத்தில் நடைபெற்ற உதைபந்தாட்டப் போட்டியில் யாழ்மத்திய கல்லூரி அணி 2:0 என்ற கோல் கணக்கில் வெற்றியீட்டியது.

போட்டியின் முதல்பாதி ஆட்டத்தில் போட்டி ஆரம்பமாகி 9ஆவது நிமிடத்தில் யாழ்.மத்திய கல்லூரி ஒரு கோலைப் பெற்றது.

தொடர்ந்து இடம்பெற்ற இரண்டாம் பாதி ஆட்டத்தில் ஆட்டம் தொடங்கி 6 ஆவது நிமிடத்தில் யாழ். மத்திய கல்லூரி அணி மேலும் ஒரு கோலைப் பெற்றது.

இறுதியில் யாழ்.மத்திய கல்லூரி அணி கொழும்பு ஆனந்தாக் கல்லூரியை 2:0 என்ற கோல் கணக்கில் வென்றது. (ஒ-5-86)

## வலைபந்தாட்ட சங்க கலந்துரையாடல்

யாழ்ப்பாணம்,டிசெ.19

யாழ்.மாவட்ட வலைபந்தாட்டச் சங்கத்தின் அவசர கலந்துரையாடல் ஒன்று இன்று வியாழக்கிழமை பிற்பகல் 3.00 மணிக்கு யாழ்.மத்திய கல்லூரி மண்டபத்தில் இடம்பெறவுள்ளது.

இதுவரை பதிவுசெய்யப்படாத கழகங்களுக்கான பதிவுகளும் அப்போது இடம்பெறுமென யாழ். மாவட்ட வலைபந்தாட்டச் சங்கத் தலைவி சறோஜா சிவச்சந்திரன் தெரிவித்துள்ளார். (ஒ-5)

## இன்றைய ஆட்டங்கள்

யாழ்ப்பாணம்,டிசெ.19

யாழ்.உதைபந்தாட்ட லீக்கினால் நடத்தப்படும் 'நொக்அவுட்' முறையிலான உதைபந்தாட்டச் சுற்றுப்போட்டியில் இன்று வியாழக்கிழமை பிற்பகல் 3.45 மணிமுதல் உரும்பிராய் இந்துக் கல்லூரி மைதானத்தில் இடம்பெறவுள்ள ஆட்டங்களில் பங்குபற்றும் அணிகள் பற்றிய விவரம் வருமாறு:

- பிற்பகல் 3.45 மணி - சென். மைக்கல் வி.க. எதிர் பொற்பதி வி.க.
- பிற்பகல் 5.00 மணி - சென் ரோக்ஸ் வி.க. எதிர் சென் அன்ரனிஸ் வி.க. (ஒ-5)

## யாழ்.அணி தோல்வி

கொழும்பு,டிசெ.19

வடமத்திய மாகாண கிரிக்கெட் சங்கத்தின் ஏற்பாட்டில் கொழும்பில் நடைபெற்றுவரும் 16 வயதுக்கு உட்பட்டோருக்கான கிரிக்கெட் சுற்றுப் போட்டியில் நேற்று நடைபெற்ற ஆட்டத்தில் வவுனியா மாவட்ட அணி யாழ்.மாவட்ட அணியை 10 விக்கெட்டுக்களால் தோற்கடித்தது.

முதலில் துடுப்பெடுத்தாடிய யாழ். மாவட்ட அணி நிர்ணயிக்கப்பட்ட 30 ஓவர்களில் 7 விக்கெட் இழப்பிற்கு 98 ஓட்டங்களை மட்டுமே பெற்றது.

அவ்வணி சார்பாக அணித்தலைவர் பிரசாந்தன், மா.பிரவீன் ஆகியோரே அதிகபட்சமாக முறையே 15,14 ஓட்டங்களைப் பெற்றனர்.

தொடர்ந்து துடுப்பெடுத்தாடிய வவுனியா மாவட்ட அணி 28 ஓவர்களில் விக்கெட் இழப்பின்றி வெற்றிக்கு வேண்டிய ஓட்டங்களைப் பெற்றுக்கொண்டது.

இவ்வணி சார்பாக நிமால் 54 ஓட்டங்களையும், நிமலேஸ்வரன் 34 ஓட்டங்களையும் பெற்றனர். (ஒ-5)


சித்த மருத்துவ மாணவர் ஒன்றியம்
யாழ். பல்கலைக்கழக சித்த மருத்துவத்துறை - கைதடி
அனைத்து மாணவர்களுக்குமான பொதுக்கூட்டம்

20.12.2002 காலை 11 மணி - 1 மணி வரை அவசர பொதுக் கூட்டம் ஒன்று துறைமண்டபத்தில் நடைபெறவிருப்பதால் அனைவரையும் தவறாது கலந்துகொள்ளும்படி கேட்டுக் கொள்கிறேன்.

தலைவர். (11955) செயலாளர்.

மகரகம
புற்றுநோய் வைத்திய நிபுணர்
Dr. வாணி பிள்ளை
கொழும்பிலிருந்து வருகை தந்துள்ள டாக்டர்
இன்று (19.12.2002) வியாழக்கிழமை
நோயாளர்களை துர்க்கா நர்ஸிங் ஹோமில்
பார்வையிடுவார்.
நேரம் பி.ப. 3 மணிமுதல் 4.30 மணிவரை
பதிவுகளை நண்பகல் 12 மணிக்கு முன் பதியவேண்டும்

T.THURGAA NURSING HOME
T.துர்க்கா நர்ஸிங் ஹோம்
தாவடி வடக்கு (சுதுமலை வீதி)
கொக்குவில். (95149)


# மரண அறிவித்தல்கள்

## சின்னராசா ரவிச்சந்திரன் (ரவி)

ஆனைக்கோட்டை, முள்ளியைப் பிறப்பிடமாகவும் ஆனைக்கோட்டை 3 ஆம் கட்டையை வசிப்பிடமாகவும் கொண்ட சின்னராசா ரவிச்சந்திரன் 17.12.2002 செவ்வாய்க்கிழமை அகாலமரணமானார்.

அன்னார் சின்னராசா தம்பதிகளின் அன்பு மகனும், திருநாவுக்கரசு தம்பதிகளின் அன்பு மருமகனும், பிரேமலதாவின் (சுசி) அன்புக் கணவரும், விதுஷன், விதுஷனா ஆகியோரின் அன்புத் தந்தையும் பிறேம், விஜே, தினேஸ் ஆகியோரின் அன்பு மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (19.12.2002) வியாழக்கிழமை அவரது இல்லத்தில் பகல் 11 மணிக்கு நடைபெற்று, பூதவுடல் காக்கை தீவு இந்து மயானத்தில் தகனஞ்செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*3 ஆம் கட்டை,*
*ஆனைக்கோட்டை.* (11954)

தகவல்:
நா. திருநாவுக்கரசு
(மாமன்)

## முத்தையா கந்தையா

*(ஓய்வுபெற்ற சுகாதாரத் திணைக்கள உத்தியோகத்தர்)*

சிங்கராயர் ஒழுங்கை, கல்வியங்காட்டைச் சேர்ந்த முத்தையா கந்தையா 14.12.2002 சனிக்கிழமை காலமானார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (19.12.2002) வியாழக்கிழமை காலை 10 மணிக்குப் பதிலாக பி.ப 4 மணிக்கு அன்னாரின் இல்லத்தில் நடைபெற்றுப் பூதவுடல் செம்மணி இந்து மயானத்தில் தகனஞ்செய்யப்படும்.

இந்த அறிவித்தலை அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*சிங்கராயர் ஒழுங்கை,*
*கல்வியங்காடு,*
*யாழ்ப்பாணம்.*
***T.P:-2223757*** (11952)

தகவல்:-
லயன் க.விஜயரட்ணம் (மகன்)
(பிராந்திய முகாமையாளர்,
அரசாங்க மரக்கூட்டுத்தாபனம்)

# பொலீஸ் திணைக்களமே நாட்டில் மிகமோசமான ஊழல் நிறுவனம்!

கொழும்பு,டிசெ.19

இலங்கையின் மிக மோசமான ஊழல் நிறுவனம் பொலீஸ் திணைக்களமே என்று இலங்கையின் 'ட்ரான்ஸ் பரன்ஸி இன்ரநஷனல்' நிறுவனத்தின் நிறைவேற்றுப் பணிப்பாளர் வெலிய முன தெரிவித்தார்.

ஊழல் ஒழிப்பில் தன்னை ஈடு படுத்தியுள்ள மேற்படி நிறுவனம், தென்னாசியாவில் ஐந்து நாடுகளில் ஆய்வு நடத்தியுள்ளது.

இலங்கையின் வடக்கு - கிழக் குத் தவிர்ந்த 17 மாவட்டங்களில் 2 ஆயிரத்து 278 வீடுகளில் கேள் விக் கொத்துக்களைச் சமர்ப்பித்து மக்களின் கருத்துக்கள் கேட்டறியப் பட்டன.

பொலீஸாருடன் தமது கருமங் களுக்காகத் தொடர்பு கொண்டவர் களில் நூறுசதவீதத்தினரும் லஞ் சம், ஊழல் விவகாரங்களில் சம்பந் தப்பட நேர்ந்ததாகத் தெரிவித்திருந் தனர். பொலீஸார் மிகவும் மோசமான ஊழல் புரிகின்றனர் என்று 39.2 வீதத் தினர் தெரிவித்துள்ளார்.

தமக்கு லஞ்சம், ஊழல் தொடர் பான அனுபவங்கள் ஏற்பட்டதாக 30 சதவீதத்தினர் தெரிவித்தனர். மதிப் பீடு கடந்த ஓராண்டு காலத்தை அடிப்படையாகக் கொண்டு நடத்தப் பட்டது.

பாகிஸ்தான் தவிர்ந்த ஏனைய நாடுகளில் நீதித்துறை, ஊழல் விவ காரத்தில் இரண்டாவது இடத்தை வகிக்கிறது என்று இனங்காணப்பட் டுள்ளது.

நீதித்துறையினருக்கும் தாம் கையூட்டு வழங்கியதாக இலங்கை, இந்தியப் பொதுமக்கள் தெரிவித்தனர்.

ஊழலுக்கெதிரான செயற்பாடு களில் பொதுமக்களை விழிப்படை யச் செய்வதற்கு நிறுவனம் முயன்று வருகிறது என்றும் -

பொதுமக்கள், அதிகாரிகள், அரசி யல்வாதிகள், ஊடகத்துறையினர் ஆகியோர் தமது நிறுவனத்துடன் இணைந்து செயலாற்ற முன்வர வேண்டுமென்றும் - செவ்வாயன்று பண்டாரநாயக்கா சர்வதேச ஞாப கார்த்த மாநாட்டு மண்டபத்தில் நடை பெற்ற செய்தியாளர் மாநாட்டில் வெலியமுன கேட்டுக்கொண்டார். (எ)


## சிறப்புக் கர்நாடக இசையரங்கு

இடம் : யாழ்.நல்லூர் திவ்விய ஜீவன சங்கக் கலாமண்டபம்.
காலம் : 21.12.2002 சனிக்கிழமை மாலை 4.00 மணி.

வயலின் ஷோலோ

*வயலின்* - இசைஞானதிலகம், சிவகலாபூஷணம்
திரு.உ.இராதாகிருஷ்ணன்
இசைக்கலைமணி திரு.சு.கோபிதாஸ்
*மிருதங்கம்* - கலாவித்தகர், லண்டன்
திரு. பரமசாமி கிருபாகரன்
(லண்டன் ஆவர்த்தனா இசைப்பள்ளி
அதிபரும், மிருதங்க மாமேதை காரைக்குடி ஆர்.மணி
அவர்களின் சீடனும்)
*கெஞ்சிரா* - வித்துவான் - S. அனந்தகோபன்
*கடம்* - வித்துவான் - சதா. வேல்மாறன்
*முகர்சிங்* - வித்துவான் - S. இராசா

அனைத்து இசை ரசிகர்பெருமக்களையும் அன்புடன்
அழைக்கின்றோம்

*பாலசம்ரக்ஷணாகானசபா*
பாலகதிர்காம தேவஸ்தானம்.

*விளம்பர அன்பளிப்பு:*
நல்லநாயகி பல்பொருள் வாணிபம்
*உரிமையாளர்* : ஜெ.தனுஸ்யந்தன், பருத்தித்துறை வீதி, கல்வியங்காடு.
(19561)


## செயலமர்வு

குருநகர் டிசெ.19

யாழ்.மாவட்டத்தில் இயங்கும் கல்வி வலயங்களில் பிரதிக்கல்விப் பணிப்பாளர், கோட்டக்கல்விப் பணிப் பாளர், சேவைக்கால ஆசிரிய ஆலோச கர்கள் மற்றும் வள உத்தியோகத் தர்களாகக் கடமையாற்றுபவர்களுக் கான செயலமர்வு எதிர்வரும் 22ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை தொடக் கம் 28ஆம் திகதி சனிக்கிழமை வரை யாழ்.இந்து மகளிர் கல்லூரியில் நடைபெறவுள்ளது.

இச்செயலமர்வு இந்நாள்களில் தினமும் காலை 8.30 மணி தொடக்கம் மாலை 6.30 மணிவரை நடைபெறும்.

ஆசிரிய வளநிலைப் பொறுப் பாளர், ஆங்கில வளநிலைப் பொறுப் பாளர்களையும் இச்செயலமர்வில் இணைத்துக்கொள்ளுமாறு வடக்கு - கிழக்கு மாகாண மேலதிக மாகாணக் கல்விப் பணிப்பாளர் ச.சுப்பிரமணியம் வலயக் கல்விப்பணிப்பாளர்களுக்கு அறிவித்துள்ளார்.

முகாமைத்துவ அணியினர் ஒவ் வொருவரும் தமது பொறுப்புக்கள், பணிகளைத் திட்டமிட்டு நிறைவேற் றுவதன் மூலம் கல்வித் தரத்தை மேம்படுத்துவதே இச்செயலமர்வின் நோக்கம் என்றும்-

குடாநாட்டில் உள்ள சகல வலயக் கல்விப் பணிப்பாளர்களும் இச் செயலமர்வில் வளவாளர்களாகக் கலந்துகொள்வர் - என்றும் அறிவிக்கப் பட்டுள்ளது. (எ-51)


எமது புதிய வீடியோ CD வெளியீடு
சூர்யாவின்
★மௌனம் பேசியதே
ITN பலாலி வீதி, பரமேஸ்வராச் சந்தி.


# அத்துருகிரிய ஆணைக்குழு கால எல்லை நீடிப்பு

கொழும்பு,டிசெ.19

அத்துருகிரிய 'மிலேனியம் சிட்டி' ஆயுதக்களஞ்சிய வீடு தொடர்பான ஜனாதிபதி ஆணைக்குழுவின் விசார ணைக்காலம் மேலும் ஆறு மாதங்க ளுக்கு நீடிக்கப்பட்டிருக்கிறது.

மேன் முறையீட்டு நீதிமன்றத்தின் முன்னாள் தலைவரான டி.கே. விக் கிரம தலைமையிலான இந்த ஆணைக் குழு, இதுவரை மூன்று பேரின் வாக்கு மூலங்களைப் பதிவு செய்திருக்கிறது. மேலும், பலரின் வாக்குமூலங்களைப் பெறுவதென ஆணைக்குழு தீர்மானித் திருக்கிறது.

வழமையாக இவ்வாறான ஆணைக் குழுக்களின் பதவிக்காலம் மூன்று மாதங்களுக்கே நீடிக்கப்படும். (ஐ)

## மானிய ஆணைக்குழு நடத்திய
# பல்கலை. ஓவியப்போட்டியில் யாழ். மாணவர்கள் முன்னிலை

பல்கலைக்கழக மானிய ஆணைக் குழுவால் இலங்கைப் பல்கலைக் கழக மாணவர்களிடையே நடத்தப் பட்ட இந்த வருடத்துக்கான ஓவியப் போட்டியில் முதல் மூன்று இடங்க ளையும் யாழ்.பல்கலைக்கழக மாண வர்களே பெற்றுள்ளனர்.

நேற்று மாலை வெளியாகிய பல்கலைக்கழகங்களின் மட்டத்திலான ஓவியப்போட்டி முடிவுகளில் யாழ். பல்கலைக்கழக சித்திரமும் வடிவ மைப்பும் கற்கைநெறி மாணவர் வரத ராஜன் பாலமுருகன் முதலிடத்தைப் பெற்றுள்ளார்.

சித்திரமும் வடிவமைப்பும் கற்கை நெறியைப் பயில்பவர்களான ரமேஸ் பிரகாஷ் இரண்டாம் இடத்தையும், சித்திராதேவி நடராஜா மூன்றாம் இடத்தையும் பெற்றுக்கொண்டனர்.

இவர்களுக்கான பரிசில்கள் வழங்கும் வைபவம் எதிர்வரும் 23ஆம் திகதி கொழும்பு பல்கலைக்கழக மானிய ஆணைக்குழு அலுவலகத்தில் நடைபெறவுள்ளது. -(ஒ-9)

## அம்பாறை மாவட்டத்தில்
# வெள்ளம் பாதித்த பிரதேசங்களை அமைச்சர் ஹக்கீம் பார்வையிட்டார்

கொழும்பு,டிசெ.19

அம்பாறை, திருகோணமலை, மட் டக்களப்பு ஆகிய மாவட்டங்களில் மழை வெள்ளத்தால் பாதிக்கப்பட் டுள்ள பிரதேசங்களை நேரில் பார்வை யிட்டு வெள்ள நிவாரண நடவடிக் கைகளை மேற்கொள்வதற்காக அமைச்சர் ரவூப் ஹக்கீம் நேற்று அம்பாறை மாவட்டத்துக்கு அவசர விஜயம் ஒன்றினை மேற்கொண்டார்.

அம்பாறை மாவட்டத்தில் பாதிக் கப்பட்டுள்ளோருக்கு நிவாரணம் பெற் றுக்கொடுப்பதற்கு விரிவான ஏற்பாடு களை மேற்கொள்ளவுள்ள அமைச் சர் ரவூப் ஹக்கீம், சமூக சேவைகள் அமைச்சரோடு இன்று மட்டக்களப்பு மாவட்டத்துக்கும் விஜயம் செய்ய வுள்ளார். இங்கு பாதிக்கப்பட்ட இடங் களைப் பார்வையிட்டு நிவாரணப் பணிகளை மேற்பார்வையிடும் அமைச் சர், திருகோணமலை மாவட்டத்தில் வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட இடங் களையும் நிவாரணப் பணிகளையும் நேரில் சென்று அவதானிப்பார். (எ)


## NEW SCIENCE COLLEGE
பௌதிகவியல்
(PHYSICS)
2005 (கணித, உயிரியல் பிரிவுகளுக்குரிய வகுப்புகள்)
ஆரம்பம் :- இன்று (19.12.2002) வியாழன் பி.ப.12.30 (ப.நே)
- ★ நேர அட்டவணையில் குழப்பம் இல்லாத வகையில் சனி, ஞாயிறு இரு பிரிவுகளாக நடைபெறும்.
- ★ பாடசாலை ஆரம்பிக்கும் வரை பகல் நேர விசேட வகுப்புகளும் நடைபெறும்.

By.R.குகன் B.Sc.
(95146)


# துயர் ஆறாத கண்ணீர் அஞ்சலி





**பாலசிங்கம் ஐங்கரன்** (மகன்)

**செல்லத்துரை பாலசிங்கம்** (பிரபல வர்த்தகரும் M.P. சுவாம்பிள்ளை உரிமையாளரும்)

**சண்முகம் சிவகுமாரன்** (மருமகன் - கைதடி)

சிரித்த முகத்துடன் எமை வரவேற்று
ஆதரவு தந்து எமை அனுசரித்து
உள்ளம் மலர எம்முடன் உரையாடி
ஆறுதல் கூறி எமை தேற்றிவைக்கும் உங்களை
கண்கெட்ட காலன் தீயாக வந்து அணைத்தானோ?

17.12.2002 அன்று கொழும்பில் நடந்த தீ விபத்தில் தீயுடன் போராடி அகாலமரணமடைந்த பாசத்தின் ஒளிவிளக்குகள், ஊழியர்களின் ஆத்மா சாந்தியடைய எல்லாம்வல்ல தலங்காவல் பிள்ளையாரைப் பிரார்த்திப்பதோடு தாங்கொணாத் துயரில் இருக்கும் இவர்களின் குடும்பத் தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவித்துக்கொள்ளுகின்றோம்.

பாசச்சுமையுடன்...

செ.சிவலிங்கம் குடும்பம்
அம்மன் வீதி,
திருநெல்வேலி.

குட்டி குடும்பம்
இராமலிங்கம் வீதி,
திருநெல்வேலி.

(C/25494)

# நினைவஞ்சலி



தோற்றம்
24 - 6 - 1928

மறைவு
16 - 11 - 2002

திருமதி
**செல்லக்கண்டு அழகுசுப்பிரமணியம்**

எமது கல்லூரியில் சேவையாற்றி ஓய்வு பெற்ற ஆசிரியை திருமதி செல்லக் கண்டு அழகுசுப்பிரமணியம் அவர்கள் அமரத்துவம் அடைந்தமையை யிட்டுத் துயருற்றிருக்கும் அன்னாரது குடும்பத்திற்கு எமது ஆழ்ந்த அனுதா பங்களைத் தெரிவிப்பதோடு அவரின் ஆத்மா சாந்தியடையவும் பிரார்த்திக்கி றோம்.

அதிபர், ஆசிரியர், ஊழியர்.
யா/உடுப்பிட்டி மகளிர் கல்லூரி.

(C/25493)

# கண்ணீர் அஞ்சலி

**கதிர்காமு தங்கம்** (சிறுப்பிட்டி)

எமது கல்வி நிலையத்தில் கல்வி கற்பிக்கும் ஆசிரியை **கண்மணி** அவர்களின் தாயாரின் மறைவையொட்டி ஆத்ம சாந்திக்காகப் பிரார்த்திப்பதுடன், குடும்பத்தினருக்கு அனுதாபத்தையும் தெரிவித் துக் கொள்கின்றோம்.

இயக்குநர், ஆசிரியர்கள், மாணவர்கள்
கலையகம் கல்வி நிலையம், ஆவரங்கால்

(11957)

# கொழும்புத் தீயில்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

வியாபாரப் போட்டியால் ஏற்பட்ட விஷமத்தனமா? அல்லது தற்செயலாக நடந்த சம்பவமா? ஒரே மர்மம். அது இன்னும் துலக்கப்படவில்லை.

கடைத் தொகுதியிலுள்ள பெரும்பாலான கடைகள் முற்றாகச் சேதமடைந்துள்ளன.

இந்தத் தீ விபத்தினால் ஏற்பட்ட நஷ்டம் எவ்வளவு என்பது இப்போதுதான் மதிப்பீடு செய்யப்பட்டு வருகிறது. அது 40 கோடி ரூபாவுக்கும் அதிகமாக இருக்கலாம் எனப் பூர்வாங்க மதிப்பீடுகள் தெரிவித்தன.

பொலீஸார் தீவிர புலன்விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். இதுவரை எவரும் சந்தேகத்தின் பேரில் கைதுசெய்யப்படவில்லை.

கொழும்பு தேசிய வைத்தியசாலையில் தொடர்ந்து சிகிச்சை பெற்று வருகின்றவர்களில் ஒரு பெண்ணும் இரண்டு குழந்தைகளும் ஆபத்தான நிலையில் உள்ளனர் என்று வைத்தியசாலையின் பணிப்பாளர் ஹெக்டர் வீரசிங்க நேற்றுத் தெரிவித்தார்.

இந்தத் தீ விபத்தில் இருபது கடைகள் முற்றாக எரிந்து விட்டன. கடைகளின் மேல்மாடியில் இருந்தவர்களே பெரும்பாலும் தீயில் சிக்கி இறந்திருக்கின்றனர்.

இந்தக் கட்டட மாடியில் இருந்து கீழே இறங்கிவர ஒரேயொரு படிக்கட்டுத்தான் உண்டு. இதனால் உயிர் தப்புவதற்காக மக்கள், படிக்கட்டில் முண்டியடித்ததில் பலர் சறுக்கிவிழுந்தும் மிதியுண்டும் காயமடைந்தனர் என்றும் தீயணைப்புப் படை அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

தயில் கடைகளுக்குள்ளும், மேல்மாடி வீடுகளுக்குள்ளும் சிக்கி இறந்தவர்களைத் தேடும் பணிகள் நேற்று நடைபெற்றன. தீ அணைப்புப் படையினர் இப்பணிகளில் ஈடுபடுவதற்காக ஐந்துலாம்புச் சந்தியிலிருந்து செட்டியார் தெருவுக்குச் செல்லும் பாதை நேற்று முற்பகல் முதல் மூடப்பட்டது.

- இறந்தவர்களின் சடலங்கள் கொழும்பு தேசிய வைத்தியசாலையின் சவச்சாலையில் வைக்கப்பட்டிருந்தன.

உயிரிழந்தவர்களில் 12பேர் நேற்று அடையாளம் காணப்பட்டனர். அவர்களின் மரணம் தொடர்பான விசாரணைகள் நேற்று நடைபெற்றன.

ஒன்பது பேர் தீ விபத்தின்போது மூச்சுத்திணறி இறந்ததாக விசாரணைகளில் தெரிவிக்கப்பட்டது.

மற்றொருவர் தீக்காயங்களால் கருகி உயிரிழந்தார்.

வேறு இருவர் தீக்காயங்களாலும் இடிபாடுகளுக்குள் சிக்கியும் மரணமானார்கள் எனத் தெரிவிக்கப்பட்டது.

அடையாளம் காணப்படாத நிலையில் வைக்கப்பட்டிருக்கும் ஐந்து சடலங்களில் இரண்டு முற்றாகக் கருகிய நிலையில் காணப்படுகின்றன.

எரிந்த கடைகளில் ஒன்று எம்.பி. சுவாம்பிள்ளை அன்சன்ஸ். இந்தக் கடையிலும் பட்டாசுகள் இருந்தன. இக்கடையே முதலில் தீயில் சிக்கியதாகக் கூறப்படுகின்றது.

இக்கடையின் உரிமையாளரும் அவரது மகன், மருமகன் உட்பட கடையில் அச்சமயம் இருந்த 9 பேரும் தற்போது காணாமற்போயுள்ளனர்.

அக்கடையின் உரிமையாளரான பிரபல வர்த்தகர் செல்லத்துரை பாலசிங்கம், அவரது மகன் பாலசிங்கம் ஐங்கரன் (வயது 32), பாலசிங்கத்தின் மருமகன் சண்முகம் சிவகுமரன் ஆகியோரும் மற்றும் அக்கடையின் ஊழியர்கள் ஆறுபேருமே காணாமற்போயுள்ளனர்.

மீட்கப்பட்டு தற்போது அடையாளம் காணப்படாத நிலையில் வைத்தியசாலையில் வைக்கப்பட்டுள்ள ஐந்து சடலங்களில் மூன்று, இவர்களது கடைப்பகுதியில் இருந்துதான் மீட்கப்பட்டிருப்பதாகக் கூறப்படுகின்றது.

அதனால் இச்சடலங்கள் மூன்றும் இக்கடையில் இருந்து காணாமற்போயிருக்கும் ஒன்பது பேரில் மூவருடையவை எனக் கருதப்படுகின்றது.

எஞ்சிய அறுவரின் சடலங்களும் எரிந்து கருகிய நிலையில் - சாம்பரான நிலையில் - கடையில் எரிந்த சிதிலங்களுக்கு இடையில் கிடக்கக்கூடும் என சந்தேகிக்கப்படுகின்றது. (ஐ-4)


A/L 2005

கலை, வர்த்தகம், கணிதம், உயிரியல் பிரிவுகள்

ஆரம்பம் 20.12.2002 வெள்ளி 3.00p.m.

மதுபாரத் வித்தியா நிலையம்

இந்து மகளிர் ஒழுங்கை, கந்தர்மடம். (11923)


## 44 இந்திய...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

கடற்படை கட்டளை அதிகாரிக்கு உத்தரவிட்டார். 44 மீனவர்களையும் அவர்களது வள்ளங்கள், வலைகள் ஆகியவற்றுடன் இலங்கை - இந்திய கடல் எல்லையில் வைத்து பாதுகாப்பாக இந்திய கடற்படை அதிகாரியிடம் கையளிக்குமாறு காங்கேசன்துறை கடற்படை அதிகாரிக்கு நீதிவான் உத்தரவிட்டார். (ஐ-3)

## குடும்பஸ்தர் குத்திக்கொலை

பகைமை காரணமாக இருவருக்கிடையே ஏற்பட்ட கைகலப்பு கத்திக்குத்தில் முடிந்தது. இதில் குடும்பஸ்தர் ஒருவர் உயிரிழந்தார்.

கொய்யாத்தோட்டம் சந்திப்பகுதியில் நேற்று மாலை இடம்பெற்ற இந்தச் சம்பவத்தில் குருநகரைச் சேர்ந்த ஆசீர்வாதம் கவிதாஸ் (வயது 40) என்பவரே உயிரிழந்தார். (ஐ-4-51)

## ஆனையிறவில்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

வைத் தாண்டி யாழ்ப்பாணத்திற்கு வந்து சேர்ந்தது. அந்த அம்புலன்ஸ் வண்டியைப் பின் தொடர்ந்து வேறு சில பயணிகள் வாகனங்களும் வந்து சேர்ந்தன.

காலையில் முகமாலையூடாகச் சென்ற கனரக வாகனங்கள் இயக்கச்சிப் பகுதிக்கு அப்பால் செல்ல முடியாது நிறுத்தப்பட்டன. பாரங்குறைந்த இலகுரக வாகனங்கள் மெதுவான வேகத்தில் ஆனையிறவு வீதியைக் கடந்து சென்றன. ஆனையிறவுக்கும் பரந்தன் வீதிக்கும் இடையில் சுமார் ஒருமைல் நீளமான பகுதி வெள்ளத்தால் மூடப்பட்டிருக்கிறது.

யாழ்ப்பாணத்திலிருந்து சென்ற பெரும் எண்ணிக்கையான வாகனங்கள் முகமாலை, பளைப் பகுதிகளில் தரித்து நிற்கின்றன. அதேபோன்று கொழும்பிலிருந்து வந்த வாகனங்கள் கிளிநொச்சிப் பகுதியில் தடுத்து நிறுத்தப்பட்டிருக்கின்றன.

இதேவேளை -

கிளிநொச்சி அரச அதிபர் தி.இராசநாயகம் நேற்றுப் பகல் வெள்ளம் பாதித்த வீதிப் பிரதேசத்தை அதிகாரிகளுடன் நேரில் சென்று பார்வையிட்டார். கண்டி வீதியில் உள்ள மதகுகள் சேதமடைந்தும் அடைபட்டும் இருப்பதாலேயே வெள்ளம் வீதியை மேவிப் பாய்கின்றது என்று அவர் தெரிவித்தார்.

பயணிகளின் பாதுகாப்புக் கருதி ஆனையிறவு ஊடான வாகனப் போக்குவரத்து நேற்று தற்காலிகமாக நிறுத்தப்பட்டதாக அவர் கூறினார்.

வெள்ளத்தால் சேதமடைந்த வீதியை பொறியியலாளர் குழு ஒன்றும் நேற்றுப் பார்வையிட்டு சேதங்களை மதிப்பீடு செய்தது. வெள்ளத்தால் தூர்ந்துபோன இடங்களில் மணல் மூடைகளை அடுக்கி வீதியைச் செப்பனிட்டுப் போக்குவரத்தைச் சீர்செய்வதற்கு முடிவுசெய்யப்பட்டிருப்பதாக கிளிநொச்சி அரச செயலக வட்டாரங்கள் நேற்றிரவு தகவல் வெளியிட்டன.

வீதியை செப்பனிடும் பணி நேற்று இரவே ஆரம்பமாகி நடைபெற்றதாக ஒரு தகவல் தெரிவித்தது. வேலைகள் பூர்த்தியடைந்த கையோடு போக்குவரத்து அனுமதிக்கப்படும் என்றும் தெரிவிக்கப்பட்டது. (ஐ-3-9)

# சந்தேகத்துக்குரிய கப்பலிலிருந்து ஆயுதங்கள் இறக்கப்படவில்லை

## தலைமைச் செயலகம் அறிக்கையில் தெரிவிப்பு

போர் ஆயுதங்களுடன் இலங்கையை நோக்கி வந்துகொண்டிருந்ததாகக் கூறப்படும் ஒரு கப்பலிலிருந்து இலங்கைக்குள் ஆயுதங்கள் இறக்கப்படவில்லை என்று பாதுகாப்பு அமைச்சின் நடவடிக்கைத் தலைமைச் செயலகம் நேற்று அறிவித்தது.

இராணுவப் பேச்சாளரான பிரிகேடியர் சனத் கருணாரத்ன விடுத்திருக்கும் அறிக்கை ஒன்றில் இது தெரிவிக்கப்பட்டது. சந்தேகத்துக்குரிய ஒரு கப்பல், போர் ஆயுதங்களை ஏற்றிக்கொண்டு இலங்கைக்கு வருவதாக இலங்கைக் கடற்படையினருக்குத் தகவல் கிடைத்தது. ஆயுதங்கள் இறக்கப்படுவதைத் தடுப்பதற்கு உடனடி நடவடிக்கைகளை கடற்படை மேற்கொண்டது. இதனால் ஆயுதங்கள் இலங்கைக்குள் இறக்கப்படவில்லை என்பது உறுதிப்படுத்தப்பட்டது.

எவ்வாறாயினும் குறிப்பிட்ட கப்பல் இலங்கை கடற்பிரதேசத்துக்குள் பிரவேசிக்கவில்லை.

- இவ்வாறு அந்த அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டிருக்கிறது. (ஐ-4)

### திருமலை எண்ணெய்க்குதம் குத்தகை:

# இந்தியாவும் இலங்கையும் ஜனவரியில் உடன்படிக்கை

திருகோணமலை,டிசெ.19

திருகோணமலை எண்ணெய்க்குதங்களை இந்தியாவுக்குக் குத்தகைக்கு வழங்குவதற்கான உடன்படிக்கையில் இரு நாடுகளும் எதிர்வரும் ஜனவரி மாதம் கைச்சாத்திடவுள்ளன.

முதற்கட்டமாக 62 மில்லியன் அமெரிக்க டொலர்களும் இரண்டாம் கட்டமாக 38 மில்லியன் அமெரிக்க டொலர்களும் இதற்கு முதலிடப்படவிருப்பதாக இந்திய பெற்றோலியக் கூட்டுத்தாபன முகாமைப் பணிப்பாளர் எஸ்.நாகேஸ்வரன் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பாகக் கொழும்பு தாஜ் சமுத்திரா ஹோட்டலில் நேற்று செய்தியாளர் மாநாடு ஒன்று நடைபெற்றது.

முதற்கட்டமாக இலங்கையில் நூறு பெற்றோல் நிரப்பு நிலையங்களை அமைக்கவிருப்பதாகவும் - திருகோணமலையில் தற்போது 15 குதங்கள் மட்டுமே பயன்படுத்தக்கூடிய நிலையில் இருப்பதாகவும் -ஏனையவற்றைத் திருத்தியமைக்கும் வேலைகள் விரைவில் ஆரம்பமாகும் என்றும் - தெரிவிக்கப்பட்டது. (ஐ-4)

## பட்டாசு...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

விபத்துக்கான காரணங்கள் கண்டறியப்பட்ட பின்னரே நஷ்டஈடு பற்றித் தீர்மானிக்கப்படும்.

இங்கு பட்டாசுகளை விற்பனை செய்வதற்கு அனுமதி வழங்கப்படவில்லை. அதேவேளை, இக்கட்டடத் தொகுதியில் காஸ் சிலிண்டர்கள்கூட களஞ்சியப்படுத்தப்பட்டு இருந்துள்ளன.

இந்தக் கட்டடத்தைத் தொடர்ந்து கட்டுவதா? அல்லது கைவிடுவதா? என்பது பற்றிப் பின்னர் தீர்மானிக்கப்படும்.

தீயிலிருந்து தப்புவதற்கான பாதைகள் இல்லாததாலேயே உயிரிழப்புக்கள் அதிகரித்துள்ளன. எதிர்வரும் காலங்களில் இவற்றைத் தவிர்ப்பதற்கு முயற்சிகள் மேற்கொள்ளப்படும்.


- என்றார் பிரதி மேயர். (ஐ)


JAFFNA TECHNICAL INSTITUTE.
JAFFNA SRI LANKA.
சிறுவர்களுக்கான இலவச கணனிப் பயிற்சி – 2003
CHILDREN'S PROGRAM

இவ் விண்ணப்பத்தை பூர்த்தி செய்து அல்லது கமாக தயாரித்து நேரடியாகவோ அல்லது தபால் மூலமாகவோ கீழ்காணும் முகவரிக்கு அனுப்பவும்.

பதிவாளர்
இல. 07 பலாலி வீதி
யாழ்ப்பாணம்.

பயிற்சி ஆரம்பம்
21.12.2002 (3.00pm)
28.12.2002 (3.00pm)




Head Office
No. 11/108, Stanly road.
Jaffna.

Branch
No. 07, Palaly Road
Jaffna.



நேற்றைய ஒறிஜினல் வீடியோ CD வெளியீடு

சூர்யாவின்

மௌனம் பேசியதே

(பிரதிகள் உடன் பெறலாம்)

வீடியோ விமல்

யாழ்ப்பாணம் (95125)



நலமான வாழ்வுக்கு என்றும் நலந்தருவது

புரோசிங் (PROZINC)


★ இழந்த சக்தியை மீட்டெடுத்தல்.
★ இரத்த உற்பத்தியை அதிகரித்தல்.
★ வளரும் பிள்ளைகளுக்கு பசி உணர்வை தூண்டுதல்.

போன்றவற்றில் முக்கிய பங்கு வகிப்பதுடன்

புரோசிங் - அனைத்து விற்றமின்களுடன் அதியுயர் தாவரப் புரதச்சத்து நிறைந்துள்ளதால் சைவப் பிரியர்களுக்கும் உகந்தது.

புரோசிங் - கர்ப்பிணித் தாய்மார், விளையாட்டு வீரர், வளரும் பிள்ளைகள், முதியோர் என முழுக் குடும்பத்தினருக்கும் ஏற்ற சிறந்த பானம்.

புரோசிங் - தற்போது யாழ்.நகரின் அனைத்து மருந்தகங்களிலும் கிடைக்கப்பெறும்.




தொடர்புகளுக்கு :
JEGAN PHARMACY - யாழ். நகர். Tel: 222 3191
ARKEM - கொழும்பு. Tel: 470290, 071-341956

(C-25208)


## மரண அறிவித்தல்

### திருமதி வீரவாகு பூமணி

நயினாதீவு, 7ஆம் வட்டாரத்தைச் சேர்ந்த திருமதி வீரவாகு பூமணி அவர்கள் நேற்று (18.12.2002) புதன்கிழமை நயினாதீவில் காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான இராமுப்பிள்ளை - பொன்னம்மா தம்பதியினரின் அன்பு மகளும் பொன்னர் - நாகமுத்து தம்பதியினரின் மருமகளும் வீரவாகு அவர்களின் அன்பு மனைவியும் தர்மகுலசிங்கம் (லண்டன்), மகாலிங்கம் (பூபாலசிங்கம் புத்தகசாலை, யாழ்ப்பாணம்), ஓங்காரலிங்கம் (அதிபர், அனலைதீவு தெற்கு அ.த.க. வித்தியாலயம்) ஆகியோரின் பாசமிகு தாயாரும், மகாலட்சுமி (எழுதுநர், யாழ். மாநகர சபை), விஜயகௌரி ஆகியோரின் அன்பு மாமியாரும், பொன்னுத்துரை, அப்பாத்துரை (ஓய்வுபெற்ற ஆசிரியர்), கணேசன் (ஓய்வுபெற்ற பொறியியலாளர்) மற்றும் காலஞ்சென்றவர்களான தங்கரத்தினம், பூபாலசிங்கம் (பூபாலசிங்கம் புத்தகசாலை நிறுவுநர்), விஜயரட்ணம் ஆகியோரின் அன்புச் சகோதரியும், சுப்பிரமணியம், மார்க்கண்டு, இராசரத்தினம் மற்றும் காலஞ்சென்றவர்களான சின்னத்தம்பி, சோமசுந்தரம், தங்கமுத்து, சின்னத்தங்கம் ஆகியோரின் அன்பு மைத்துனியும், மதூஷன், வைஷ்ணவி, மயூரன், கௌதமி, சுஜீபன், தாட்சாயினி, கிரிஷாயினி, சித்தார்த்தினி ஆகியோரின் அன்புப் பேர்த்தியுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (19.12.2002) வியாழக்கிழமை பி.ப 5 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்றுப் பூதவுடல் தகனக்கிரியைகளுக்காக நயினாதீவு சல்லிபரவை மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

7ஆம் வட்டாரம்,
நயினாதீவு.

(11958)

தகவல்:
வீ.மகாலிங்கம் (மகன்)


தென்னிந்தியாவில் இருந்து



முதல் முறையாக யாழ்ப்பாணம் என்னும் புண்ணிய பூமிக்கு வருகை தந்துள்ள பரம்பரை சோதிடக் கலையில் புகழ்பெற்ற சிவபால ஜோதிடர்

ராஜகுருசாமி அவர்கள்

★ கைரேகை ★ ஜாதகம் ★ எண்கணிதம்
★ பெயர்ராசி ★ திருமணப்பொருத்தம்

இவற்றில் பலவருட அனுபவமும் புகழும் பெற்றவர்.

ராஜகுருசாமி
60/1 (112), TEMPLE ROAD [NEAR.ICRC],
JAFFNA.
T.P 021-222-3804

(11920)



IIS

விண்ணப்பித்துவிட்டீர்களா?

இன்னும் இரண்டு நாள்களே உள்ளன

IIS இன் மாபெரும் புலமைப்பரிசில் திட்டம் 2003

விண்ணப்ப முடிவு திகதி: 20.12.2002

மாணவர்களே!

விண்ணப்ப முடிவு திகதி எக்காரணம் கொண்டும் நீடிக்கப்படமாட்டாது என்பதை அறியத்தருகின்றோம். (11953)



வெளிவந்துவிட்டது!

"அஷ்டலக்ஷ்மி" தினத்தாள்

கலண்டருடன் 12 இராசிகளுக்குமான 2003 ஆம் ஆண்டு புத்தாண்டு பலன் புத்தகம் இலவசம்!

கலண்டர் விலை ரூபா 170/-

✦ மேசை தினக்குறிப்பு
✦ Pocket Diary
} தமிழில் என்பனவும் கிடைக்கும்.

அஷ்டலக்ஷ்மி பதிப்பகம்

(11371) கண்டி வீதி, கைதடி.


இப்பத்திரிகை நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேட்) நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதி, 361ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 19.12.2002இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.

# முரளி சிறந்த பந்துவீச்சாளராகத் தெரிவாகியமை இலங்கைக்குக் கிடைத்த பெரும் கௌரவமாகும்!

## வாழ்த்துச் செய்தியில் அமைச்சர் அஸ்வர்



"இலங்கைத் திருநாட்டின் தேசிய சொத்தாகக் கணிக்கப்படும் தமிழ்ச் சிறுபான்மைச் சமூகத்தின் மகனான முத்தையா முரளிதரன் உலகின் மிகச்சிறந்த பந்து வீச்சாளராகத் தெரிவு செய்யப்பட்டுள்ளமை இலங்கைக்குக் கிடைத்த மகத்தான வெற்றியும், பெருமையுமாகும்."

- இவ்வாறு நாடாளுமன்ற விவகாரத்துறை அமைச்சர் அல்ஹாஜ் ஏ.எச்.எம்.அஸ்வர் இலங்கைக் கிரிக்கெட் வீரர் முத்தையா முரளிதரனுக்கு அனுப்பியுள்ள வாழ்த்துச் செய்தியில் தெரிவித்துள்ளார்.

டெஸ்ட் வரலாற்றின் மிகச்சிறந்த பந்துவீச்சாளராக முத்தையா முரளிதரனை விஸ்டன் சஞ்சிகை தெரிவு செய்துள்ளது.

இது தொடர்பாக முரளிதரனுக்கு அமைச்சர் அஸ்வர் அனுப்பியுள்ள வாழ்த்துச் செய்தியில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:-

"உலகின் தலைசிறந்த துடுப்பாட்டக்காரராக ஆஸ்திரேலியாவின் டொன் பிரட்மனைத் தெரிவுசெய்துள்ள 'விஸ்டன்' சஞ்சிகையே சிறந்த பந்து வீச்சாளராக முரளிதரனையும் தெரிவு செய்துள்ளமை மகிழ்ச்சியை இரட்டிப்பாக்குகிறது.

முரளிதரன் திறமையைத்தான் உலகம் கவனிக்கிறது. இனங்களுக்கிடையில் புரிந்துணர்வும், சகவாழ்வும் வெகுவாக வேண்டப்பட்டு, சமாதானப் பயணத்தைத் தொடர்ந்து கொண்டிருக்கும் முக்கியமான ஒரு காலகட்டத்தில் முரளிதரனின் இத்தெரிவு இன உறவை வலுவுறச் செய்யத் துணைநிற்கிறது.

150 வருடகால கிரிக்கெட் வரலாற்றில் முரளிதரன் பெற்ற இவ்வுயரிய கௌரவம் முழு இலங்கைக்கும் கிடைத்த பெரும் கௌரவமும் பாராட்டுமாகும். ஒருநாள் போட்டிகளுக்கான விஸ்டனின் தரப்படுத்தலில் முத்தையா முரளிதரன் 7ஆவது இடத்தைப் பெற்றுள்ளார். இதுவும் அவருக்குக் கிடைத்த மற்றொரு கௌரவமாகும்." - இவ்வாறு அமைச்சர் அஸ்வர் தமது வாழ்த்துச் செய்தியில் மேலும் தெரிவித்துள்ளார். (ஓ-5)

### விளையாட்டு அலுவலருக்கான கலந்துரையாடல்

கிளிநொச்சி,டிசெ.19

வடக்கு - கிழக்கு மாகாணத்தைச் சேர்ந்த விளையாட்டு அதிகாரிகள், விளையாட்டு உத்தியோகத்தர்கள், பயிற்றுநர்கள் மற்றும் பணிப்பாளர்களுக்கான முக்கிய கலந்துரையாடல் ஒன்று நாளைமறுதினம் சனிக்கிழமை காலை 10.00 மணிக்கு கிளிநொச்சி அரசியல்துறை நடுவப் பணியகத்தில் நடைபெறவுள்ளதாகவும் - சம்பந்தப்பட்ட அனைவரையும் இதில் கலந்துகொள்ளும்படியும் தமிழீழ விளையாட்டுத்துறைப் பொறுப்பாளர் அ.இஸ்பன் கேட்டுள்ளார். (ஓ)

# புதிய டெஸ்ட் தரப்படுத்தலில் ஆஸி. வீரர்கள் முதலிடம்

லண்டன்,டிசெ.19

டெஸ்ட் கிரிக்கெட் வீரர்களுக்கான தரப்படுத்தலில் ஆஸ்திரேலிய வீரர்களான மத்தியூ ஹைடன் துடுப்பாட்டத்திலும் கிளென் மக்ராத் பந்து வீச்சிலும் முன்னணியில் உள்ளனர்.

புதிய தரப்படுத்தல் பட்டியல் வெளியிடப்பட்டுள்ளது. இதன்படி பந்து வீச்சில் முத்தையா முரளிதரன் தொடர்ந்தும் இரண்டாம் இடத்தில் உள்ளார்.

நியூசிலாந்து வேகப்பந்து வீச்சாளர் ஷேன் பொண்ட் பந்து வீச்சாளர் வரிசையில் 8ஆவது இடத்தைப் பெற்றுள்ளார். அண்மையில் இந்தியாவுடன் நடைபெற்ற முதலாவது டெஸ்ட் போட்டியில் இவர் 8 விக்கெட்டுக்களை வீழ்த்தியமை குறிப்பிடத்தக்கது. இந்தியாவுடனான முதலாவது போட்டியில் சிறப்பாட்டக்காரராகத் தெரிவான மார்க் ரிச்சர்ட்ஸன் துடுப்பாட்ட வீரர்கள் வரிசையில் 16 ஆவது இடம்பெற்றுள்ளார்.

# விளையாட்டு

# ரொனால்டோவுக்கு தங்கப்பந்து விருது



இவ்வருடத்திற்கான ஐரோப்பாவின் சிறந்த உதைபந்தாட்ட வீரருக்கான தங்கப்பந்து விருது ரொனால்டோவுக்கு வழங்கப்பட்டுள்ளது.

1956முதல் இவ்விருது வழங்கப்படுகிறது. முன்னர் ஐரோப்பிய நாடுகளைச் சேர்ந்தோருக்கே இவ்விருது வழங்கப்பட்டது. 1994ஆம் ஆண்டின் ஐரோப்பாவைத் தளமாகக்கொண்ட அனைவரும் இவ்விருதுக்கான தெரிவுக்கு உட்படுத்தப்பட்டனர்.

இத்தாலியின் இண்டர் மிலான் கழகத்தில் விளையாடிய ரொனால்டோ, சில மாதங்களுக்கு முன் ஸ்பெயினின ரியல் மட்ரிட் கழகத்தில் இணைந்து விளையாடுகின்றமை குறிப்பிடத்தக்கது.

ஐரோப்பாவைச் சேர்ந்த 52 ஊடகவியலாளர்களிடம் வாக்கெடுப்பு நடத்தி இவ்விருதுக்குரியவர் தெரிவுசெய்யப்பட்டுள்ளார். பிரேஸில் வீரரான ரொனால்டோவுக்கு 171 புள்ளிகள் கிடைத்தன. மற்றொரு பிரேஸில் வீரரான ரொபர்ட்டோகார் லோஸ் இரண்டாமிடத்தையும் ஜேர்மன் அணியின் கோல்காப்பாளர் ஒலிவர்கான் மூன்றாமிடத்தையும் பெற்றுள்ளனர். பிரான்ஸ் வீரர் ஸிடைன்ஸிடன் 4 ஆவது இடத்தையும் ஜேர்மன் வீரர் மைக்கல் பிளக் ஐந்தாம் இடத்தையும் பெற்றுள்ளனர்.

1997ஆம் ஆண்டிலும் ரொனால்டோ இவ்விருதைப் பெற்றுள்ளமை குறிப்பிடத்தக்கது.

இதன்மூலம் இரு தடவை இவ்விருதை வென்ற ஐரோப்பியரல்லாத வீரர் எனும் பெருமையை ரொனால்டோ பெற்றுள்ளார்.

இவ்வருடம் நடைபெற்ற உலகக்கிண்ணப் போட்டிகளில் தங்கப் பாதணி விருதை வென்றார் ரொனால்டோ. அண்மையில் உலக உதைபந்தாட்ட சஞ்சிகையின் சிறந்த வீரர் விருதும் இவருக்கு வழங்கப்பட்டது. (ஓ-5)

# ஏ.சி.சி.ஏயின் பயிற்சிப் பட்டறை

அங்கீகரிக்கப்பட்ட பட்டயக் கணக்காளர் சங்கம் (ACCA) தற்போது 160 நாடுகளில் சுமார் 3 லட்சம் உறுப்பினர்களையும், மாணவர்களையும் கொண்டதாக உலகளாவிய ரீதியில் கணக்கியல்துறையில் மிகப் பரந்த அளவிலும் வேகமாகவும் வளர்ந்துவரும் ஒரு அமைப்பாகும். இந்தச் சங்கத்தின் இலங்கைக் கிளை தனது துறையினை நெறிப்படுத்தும் நோக்கமாக, யாழ்ப்பாணத்தில் சென்.ஜோன்ஸ் கல்லூரியில் அண்மையில் ஒரு பயிற்சிப் பட்டறையை நடத்தியது. யாழ்ப்பாணத்திலுள்ள பல பாடசாலைகளிலிருந்து பெருமளவிலான அதிபர்கள், ஆசிரியர்கள், மாணவர்கள் இப்பட்டறையில் கலந்துகொண்டனர்.

இந்தப் பட்டறைக்கு சென்ஜோன்ஸ் கல்லூரி அதிபர் தனபாலன் தலைமை வகித்தார். இலங்கைக் கிளையின் முகாமையாளர் திருமதி அஜிதா பெரேரா அங்கு உரையாற்றினார் அவர் தமது உரையில், யாழ். குடாநாட்டு மாணவர்களுக்கும் இச்சங்கத்தின் செயற்பாடுகளை விளங்கவைத்து, அவர்களையும் இதில் இணையச்செய்தலே இந்தப் பயிற்சிப் பட்டறையின் முக்கிய நோக்கமென்றார். இச்சங்கத்தினால் வழங்கப்படும் தராதரம் இலங்கையில் மட்டுமன்றி உலகளாவிய ரீதியில் பிரபலமானதும் மதிப்புக்குரியதுமாகும். இது ஒரு தொழில்சார்ந்த தராதரமுமாகும். யாழ்மாணவர்களுக்கு இது ஒரு வரப்பிரசாதமாகவும் அமைகின்றது என்று அவர் மேலும் தெரிவித்தார்.

இது தொடர்பாகத் தகவல்களைப் பெற்றுக்கொள்வதற்காக யாழ்ப்பாணத்திலும் வர்த்தக சம்மேளத்தின் உதவியுடன் ஒரு தகவல் நிலையம் திறக்கப்படவுள்ளதாகவும் அவர் மேலும் கூறினார். இச்சங்கம் தொடர்பான மேலதிகத் தகவல்களுக்குப் பின்வரும் முகவரியுடன் தொடர்பு கொள்ளும்படி அறிவிக்கப்பட்டது. திருமதி அஜிதா பெரேரா முகாமையாளர், A.C.C.A. - இலங்கை.

# வேலைவாய்ப்புகள் அதிகமுள்ள ஹோட்டல் முகாமைத்துவம்

புரிந்துணர்வு உடன்படிக்கையின் பின்னர் இலங்கை உல்லாசப் பிரயாண சபை யாழ்ப்பாணத்தில் சுற்றுலா மற்றும் ஹோட்டல் முகாமைத்துவ ஸ்தாபனத்தின் கிளையைத் தொடங்கியுள்ளது. இதில் வரவேற்பாளர், பொது விடயங்கள் மற்றும் அறைகள் ஆகியவற்றின் பராமரிப்பு போன்ற பணிகளுக்கான பயிற்சி வகுப்புகள் நடத்தப்படுகின்றன. எதிர்வரும் ஜனவரி மாதத்தில் இருந்து இவற்றுக்கான பயிற்சி வகுப்புகளும் நேரடிப் பணிக்கான வகுப்புகளும் ஆரம்பிக்கப்படவுள்ளன. இந்த வகுப்புகள் வார நாள்களில் மட்டுமே நடத்தப்படுகின்றன. அடிப்படைத் தரத்தில் 5 மாதங்களும், நேரடிப் பணிப் பயிற்சி 3 மாதங்களும் நடத்தப்படும்.

இந்த வகுப்புகள் அனுபவம் மிக்க பயிற்சியாளர்களால் நடத்தப்படுகின்றன. அத்தோடு, ஆங்கிலம், பிரெஞ்சு ஆகிய மொழிகளும் இலங்கையின் சுற்றுலா முக்கியத்துவம் வாய்ந்த இடங்கள் பற்றிய அறிவும் தன்னார்வக்கல்வி, பிரத்தியேக மற்றும் தொழில்முறைக்கல்வி ஆகியனவும் இதில் சேர்த்துக் கொள்ளப்பட்டுள்ளன. இந்தப் படிப்புகள் ஹோட்டல் முகாமைத்துவம் படித்துமுடிக்க ஓர் அடிப்படையாக அமையும் உலகில் மிகப் பாரிய வேலைவாய்ப்பினைக் கொண்டிருப்பது சுற்றுலா மற்றும் பயணத்துறையாகும்.

இலங்கையில் சுற்றுலாத்துறையில் புரளும் பணம் 230 மில்லியன் அமெரிக்க டொலர்களாகும். இதில் 35 ஆயிரம் நேரடிப் பணிகளும், 50 ஆயிரம் மறைமுகப் பணிகளும் உள்ளன.

இதேசமயம் சர்வதேச மட்டத்தில் 204 மில்லியன் நேரடி வேலைவாய்ப்புகளும், 347 மில்லியன் மறைமுக வேலைவாய்ப்புகளும் உள்ளன.

அதுமட்டுமன்றி, இலங்கை உல்லாசப் பயணச் சபை நடத்தும் இந்த முகாமைத்துவ வகுப்புகள் இலங்கையிலும் பிற நாடுகளிலும் அங்கீகாரம் பெற்றவை. அதனால் வேலைவாய்ப்புப் பெறுவதற்கு ஒரு நன்மதிப்பு உண்டு.

ஆகவே, குடாநாட்டு இளைய தலைமுறையினர் ஹோட்டல் முகாமைத்துவம் படிக்கவும், அதன்மூலம் இலங்கையிலும் வெளிநாடுகளிலும் வேலைவாய்ப்புகளைப் பெறுவதற்கும் இது ஓர் அரிய வாய்ப்பு என்பதில் ஐயமில்லை. இந்தப் பயிற்சி வகுப்புகள் குறித்து மேலும் அறிய விரும்புவோர் ஸ்ரீலங்கா சுற்றுலா மற்றும் ஹோட்டல் முகாமைத்துவம் (யாழ்ப்பாணக் கிளை), மணியம் கட்டடம், சிறாம்பியடி ஒழுங்கை, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம் என்ற முகவரியில் தொடர்புகொள்ளலாம்.

# முதலீட்டுச் சபைச் சட்டத்தால் கிராமங்களில் சுபிட்சம் கிட்டும்

## பேராசிரியர் பீரிஸ் கூறுகின்றார்

முதலீட்டுச் சபைச் சட்டத்தின் மூலம் கிராமங்கள் சுபிட்சம் காணும். சிறிய, நடுத்தர முதலீட்டாளர்கள் ஊக்குவிக்கப்படுவார்கள் என்று அரசமைப்பு, முதலீட்டு ஊக்குவிப்பு, கைத்தொழில் அமைச்சர் ஜி.எல்.பீரிஸ் தெரிவித்தார்.

அமைச்சர் பீரிஸ் மேலும் கூறியதாவது:- ஐந்து வலயங்களில் பொருளாதார அபிவிருத்தி ஆணைக்குழுக்கள் அமைக்கப்படவுள்ளன. அவற்றின்மூலம் முதலீட்டாளர்களுக்கான மேலதிக வசதிகள் செய்துகொடுக்கப்படும். அவர்கள் மேலும் ஊக்குவிக்கப்படுவார்கள். இதனால் சிறிய மற்றும் நடுத்தர முதலீட்டாளர்களுக்கு அதிக சந்தர்ப்பம் வழங்கப்படும்.

நாடு சமாதானத்தின் வழியில் சென்றுகொண்டிருக்கிறது. இந்தச் சூழலில் முதலீடுகளை ஊக்குவிப்பது அவசியமாகின்றது. அதேவேளை, சாதாரண மக்களுக்குப் பயனளிக்கக்கூடிய இந்தச் சட்டத்தை எதிர்ப்பவர்கள், அம்மக்களை எதிர்ப்பவர்களாகவே கருதப்படுவார்கள் - என்றார் அமைச்சர் பீரிஸ்.

# தொழில் வளம்



# 1983ஆம் ஆண்டிலிருந்தே முதலீட்டுத்துறை தள்ளாடுகிறது!

## றொனி டி மெல் விசனம்

நாட்டின் முதலீட்டுத் திட்டங்கள் அனைத்தும் 1983ஆம் ஆண்டுடன் மந்தமடைந்துவிட்டன. இப்போது அத்துறை தள்ளாடிக் கொண்டிருக்கின்றது என்று பொதுமக்கள் ஐக்கிய முன்னணி நாடாளுமன்ற உறுப்பினரும் முன்னாள் நிதியமைச்சருமான றொனி டி மெல் தெரிவித்தார்.

அவர் மேலும் கூறியதாவது:-

எமது பிராந்திய நாடுகளில் கைத்தொழில்துறை தற்போது பாரிய மாற்றங்களைக் கண்டுள்ளது. அத்துறை முன்னேற்றம் அடைந்துவிட்டது. இதனால், 1983ஆம் ஆண்டைவிட இப்போது சந்தைப் போட்டி நிலைமை மிக உயர்வாகக் காணப்படுகின்றது.

நாட்டில் சட்டங்களை ஏற்படுத்துவது இலகுவான காரியம். ஆனால், அவற்றை நடைமுறைப்படுத்துவதற்குத் தேவையான நடவடிக்கைகள் எடுக்கப்படுவதே அவசியம். முதலடுகளை ஊக்குவித்தால் மட்டும் போதாது. அவற்றின்மூலம் உற்பத்தி செய்யப்படும் பொருள்களை ஏற்றுமதி செய்யவும், தேவையான பொருள்களை இறக்குமதி செய்யவும் எமது துறைமுகங்களும் விமான நிலையங்களும் அபிவிருத்தி செய்யப்படவேண்டும். குறிப்பாக பிராந்திய விமான நிலையங்களும் துறைமுகங்களும் அபிவிருத்தி செய்யப்படவேண்டும். அதற்காக காலி, அம்பாந்தோட்டைத் துறைமுகங்கள் மீது அதிக கவனம் செலுத்தப்படவேண்டும்.

அப்படியில்லாமல் இத்தகைய சட்டங்களை அறிமுகப்படுத்துவதில் பயனேதும் கிடைக்கமாட்டாது என்றார் றொனி டி மெல்.



மில்லேர்ஸ் நிறுவனத்தின் 'கொடாக்' புகைப்படக் கூடத்தை (MINI LAB) பருத்தித்துறை குகன் ஸ்ருடியோவில் கொடாக் பிலிம் தொழில்நுட்ப உத்தியோகத்தர் ஏ.சிவகுமார் திறந்துவைப்பதையும் இயந்திரத்தை செல்வி வேலுகா குகன் ஆளியை இயக்கி ஆரம்பித்து வைப்பதையும் படங்களில் காணலாம். (படம்: வடமராட்சி செய்தியாளர்)

# சின்னஞ்சிறு விளம்பரம்

## விற்பனைக்கு

வான்சீர் மூன்று (புதியது) விற்பனைக்குண்டு. தொடர்பு: இராசு கடை, வைமன் சந்தி, நாவலர்வீதி.(95132)

## காணி விற்பனைக்கு

கச்சாய் பாலாவியில் கச்சாய் வீதியிலிருந்து கிழக்குப் பக்கமாக கிணற்றுடன் கூடிய தோட்டம் செய்வதற்கு ஏற்ற 20 பரப்புக்காணி உடன விற்பனைக்குண்டு. தொடர்பு: தி.அமிர தலிங்கம் (ஆசிரியர்), படித்த மகளிர் குடியேற்றத்திட்டம், மிருசுவில்.(11860)

## மணமகன் தேவை

யாழ்இந்து கௌரவ குடும்பத்தைச் சேர்ந்த, 1963இல் பிறந்த, அனுஷம், 5'4" உயரமுடைய, சிவந்தநிற அழகான, பாமசிஸ்ட் வேலையிலுள்ள பெண்ணுக்கு மணமகன் தேவை. வேலையற்றவராயின் விரும்பமான தொழில் ஏற்படுத்திக் கொடுக்கப்படும். தொடர்பு: கே.அருளானந்தம் (லெக்சரர்), குருநதப்பிள்ளையார் கோவிலடி, சுதுமலை தெற்கு. (11932)

## மணமகள் தேவை

யாழ்இந்து கௌரவ குடும்பத்தைச சேர்ந்த, 1966இல் பிறந்த, 12இல் செவ்வாய், பூரநட்சத்திரம், கடையுரிமையாளரான மணமகனுக்கு பெற்றோர் தகுந்த மணமகளைத் தேடுகின்றனர். வி.இல.1725.மே/பா உதயன்.(95131)

யாழ்.இந்து கௌரவ குடும்பம், 75ஆம் ஆண்டு, உத்தராடம் (5'6" உயரம்) மணமகனுக்கு (தைமாதம் இத்தாலியிலிருந்து வருகின்றார்) அழகான, படித்த மணமகள் தேவை. தொடர்பு: கல்யாணமாலை திருமண சேவை, 235/7, பருத்தித்துறை வீதி, ஆனைப்பந்தி, யாழ்ப்பாணம்;67/A, ஆட்டுப்பட்டித்தெரு, கொழும்பு-13. T.P. 338162 Fax 338161 (98127)

## மணமக்கள் தேவை

கனடா, அமெரிக்கா, ஆஸ்திரேலியா, லண்டன், சுவிஸ், ஜேர்மனி, பிரான்ஸ், இத்தாலி முதலிய நாடுகளிலுள்ளவர்களினதும் டாக்டர், எஞ்சினியர், எக்கவுண்டன், அரச, தனியார் துறை உத்தியோகத்தர்கள் மற்றும் தராதரமுள்ளவர்களினதும் குறிப்புக்கள் எம்மிடம் உண்டு. தொடர்பு: கல்யாணமாலை திருமண சேவை, 235/7, பருத்தித்துறை வீதி, ஆனைப்பந்தி, யாழ்ப்பாணம்; 67/A, ஆட்டுப்பட்டித் தெரு, கொழும்பு-13. T.P. 338162 Fax338161 (95128)

## இறைச்சிக்கோழி தேவை

இறைச்சிக்கோழிகள் தேவை. நல்லவிலை தரப்படும். உடன் தொடர்பு கொள்ளவும்: இல.19, முருகேசர் ஒழுங்கை, முத்திரைச்சந்தையடி, நல்லூர். (11910)

## திருத்துதலும் ஒட்டுதலும்

மூக்குக் கண்ணாடி ஒட்டுதல், சகல கெமராவகைகள், எலக்ரோனிக பிளாஸ்கன் திருத்துதல், சிறிய பிளாஸ்டிக் பாட்ஸ் ஒட்டுதலுக்கு. தொடர்பு: சு.நாராயணசாமி, இலக்கம் 301, கஸ்தூரியார் வீதி (மேல்மாடி), கன்னாதிட்டிச் சந்திக்கு அருகில். (11852)

## தவறிவிட்டது

பன்னாலை, தெல்லிப்பழையைச் சேர்ந்த ஆசிரியை செனகரத்தினம் இராசேஸ்வரி என்பவரின் தே.அ.அ. (இல.718611539V), வி.அ.அ.என்பன திருநெல்வேலிக்கும், கைதடிக்கும் இடையில் தவறிவிட்டன. கண்டெடுத்தவர்கள் வசாவிளான் ம.ம.வி. அதிபரிடம் ஒப்படைத்துதவவும் அல்லது T.P. 2962இல் தொடர்புகொளளவும்.(95123)

## M.Com. காமராஜர் பல்கலைக்கழகம், மதுரை

- மேற்குறிப்பிட்ட பட்டப் பாடநெறியை **தமிழ்/ஆங்கிலம்** ஆகிய இரு மொழியிலும் பதிவுசெய்து கற்றுக்கொள்ளமுடியும்.
- இதற்குரிய பல்கலைக்கழகப் பதிவுகள் **18.12.2002** இல் இருந்து ஏற்றுக்கொள்ளப்படுகின்றன.
- இதற்குரிய விரிவுரைகள் **04.01.2003** இல் ஆரம்பமாகவுள்ளது.
- பதிவுகள், விரிவுரைகள் தொடர்பான சகல விவரங்களையும் நேரில் பெற்றுக்கொள்ளவும்.

விவரங்களுக்கு :

காமராஜர் பல்கலைக்கழக யாழ்.இணைப்பாளர்

**புதிய உயர் கல்லூரி,**

ஆரியகுளம் சந்தி,

யாழ்ப்பாணம்.

(11926)

## நெஞ்சம் நிறைந்த நன்றிகள்

மலர்வு 18 - 11 - 1934



உதிர்வு 08 - 11 - 2002

### விசுவலிங்கம் மகாலிங்கம் (துரை)

08.11.2002 அன்று சிவபதமடைந்த எமது குடும்பத் தலைவர் அமரர் விசுவலிங்கம் மகாலிங்கம் (இளைப்பாறிய அதிபர்) அவர்களின் அமரத்துவச் செய்திகேட்டு, உடன் ஓடிவந்து உதவியவர்களுக்கும், இறுதிச் சடங்கிலும் இறுதி ஊர்வலத்திலும் கலந்துகொண்டவர்களுக்கும், மலர் வளையம் வைத்து அஞ்சலித்தவர்களுக்கும், உள்நாட்டிலிருந்தும், வெளிநாட்டிலிருந்தும் இரங்கற் செய்தி அனுப்பியவர்களுக்கும், உற்றார், உறவினர், நண்பர்கள், அயலவர்கள் அனைவருக்கும் எமது மனமார்ந்த நன்றியைத் தெரிவித்துக்கொள்கின்றோம்.

- குடும்பத்தினர்.

*தொலைபேசி: 01-739363* (C/25480)


சித்தாலேப ஹெட்டிகொட குரூப்

உங்கள் இல்லத்தில்.....

உங்களுடன் ஒரு நிரந்தர வைத்தியர்.....

நம்புங்கள்

சாத்தியமாகும்........

**சித்தாலேப**




வீட்டு வைத்தியர்.

சர்வரோக நிவாரணி.

தலைவலி, தடிமல், காய்ச்சல், மூட்டுவலி, பல்வலி, வாதம், தசைப்பிடிப்பு எதுவானாலும் நிவாரணி - சித்தாலேப.

**இது மட்டுமா?**

சித்தாலேப தடவியவுடன் நுளம்புகள் கிட்ட வரவே வராது. நுளம்புத் தொல்லையில் இருந்தும் பாதுகாப்பு தருகிறது சித்தாலேப.

ஏக விநியோகஸ்தர்கள்

**வனிக்கா மெடிக்கல்ஸ்**

85, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம். TP:2222445

(11864)


## 45ஆம் நாள் நினைவஞ்சலி

மண்ணில் 09 - 02 - 1947



விண்ணில் 09 - 11 - 2002

### திருமதி நற்குணம் யோகேஸ்வரி

எங்கள் குடும்பத்தின் குலமகளே!
தாங்கள் இயற்கை எய்தி நாற்பத்தைந்து
நாள்கள் உருண்டோடிவிட்டன. ஒரு நூறு
வருடம் கழிந்தாலும் தங்கள் நினைவு
எங்கள் நெஞ்சங்களில் நிலைத்து நிற்கும்
அன்புத் தெய்வமே!

தங்கள் ஆத்மா சாந்தியடைய எல்லாம்வல்ல இறைவனை இறைஞ்சுகின்றோம்.

ஓம் சாந்தி! சாந்தி! சாந்தி!

*இடைக்குறிச்சி, வரணி.*

தகவல்: ந.உதயசூரியன் (மகன்- பிரான்ஸ்)

*உமது பிரிவால் துயருறும்*
கணவர், பிள்ளைகள், மருமக்கள், பேரப்பிள்ளைகள், உற்றார், உறவினர்.

(95126)

ஓம் விராட் விஸ்வப் பிரம்மனே நம!

## முதலாம் வருட நினைவஞ்சலி

மலர்வு 30 - 06 - 1930



உதிர்வு 30 - 12 - 2001

விஸ்வகர்ம குலதிலகர்

### அமரர் ஐயாத்துரை தம்பிராஜா

*(குஞ்சுப் பத்தர்)*

ஆண்டு ஒன்று மறைந்தாலும் உங்கள்
நினைவுகள் மட்டும் மறையவே மறையாது!
இங்கு தினமும் உங்களை நினைந்தே
கவலையுடன் கலங்கித் தவிக்கின்றோம்.

*ஓம் சாந்தி!*

*இல.3, செம்மணி வீதி, நல்லூர், யாழ்ப்பாணம்.* (95130)

பிரிவால் வாடும்: பிள்ளைகள், மருமக்கள், பேரப்பிள்ளைகள்.

## மரண அறிவித்தல்

### நா.சி.வேலுப்பிள்ளை

*(நாகப்பர்)*

அச்சுவேலி, இடைக்காட்டைப் பிறப்பிடமாகக் கொண்ட நா.சி.வேலுப்பிள்ளை 17.12.2002 செவ்வாய்க்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற பார்வதியின் அன்புக் கணவரும் முருகையா (முன்னாள் இறைவரித் திணைக்கள ஊழியர்), வள்ளிநாயகி, சிவகாமிப்பிள்ளை (முன்னாள் ஆசிரியை), சின்னையா (முன்னாள் பொறியியலாளர், இ.மி.ச. - ஆஸ்திரேலியா), திலகவதி, குமாரசாமி ஆகியோரின் பாசமிகு தந்தையும் தெய்வானை, காலஞ்சென்ற பொன்னையா (சுங்க அதிகாரி) மற்றும் சிவனேசபிள்ளை (முன்னாள் ஆசிரியர்), கலையரசி (முன்னாள் யாழ்.பல்கலைக்கழக விரிவுரையாளர், ஆஸ்திரேலியா), அமுதலிங்கம் (இ.மி.ச., பொறியியலாளர், கொழும்பு), கிருபாமலர் ஆகியோரின் அன்பு மாமனாரும் நோர்வேயைச் சேர்ந்த வேலழகன், சாந்தினி, செல்வ அழகன், கனடாவைச் சேர்ந்த சாமினி, வேற்செல்வன், உதயணன், சிவரூபி, வேல்விழி, ஆஸ்திரேலியாவைச் சேர்ந்த Dr.நர்மதா, நிரந்தரி, அன்பரசி (பொறியியலாளர்), திசங்கர் (பொறியியல்பீடம், பேராதனை), சுகந்தினி, திரிகரன், கசுந்தலன், அபர்ணா ஆகியோரின் அன்புப் பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று(19.12.2002) வியாழக்கிழமை மு.ப. 9.00 மணியளவில் இடைக்காட்டில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் சாமித்திடல் மயானத்தில் தகனஞ்செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் ஏற்றுக்கொள்ளவும்.

*கூழாவடி, இடைக்காடு, அச்சுவேலி.* (95129)

தகவல்: பிள்ளைகள்.

அகவை அறுபதில் காலடி வைக்கும் எங்கள் டாக்டருக்கு

# நல்வாழ்த்துக்கள்



உயர்திரு.

## மாப்பாணபிள்ளை யோகீஸ்வரதேவன்

*(பதிவு வைத்திய அதிகாரி)*

கடந்த 39ஆண்டு காலமாக நாட்டின் பல பகுதிகளிலும் குறிப்பாக, கடந்த 14ஆண்டு காலமாகப் பருத்தித்துறை, கரவெட்டி, அம்பன் அரசினர் வைத்தியசாலைகளில் கடமையாற்றி வடமராட்சி மக்களுக்குச் சிறப்பான வைத்திய சேவையினை மனமகிழ்வுடன் வழங்கிய தன்னலமற்ற

எங்கள் டாக்டர் **யோகீஸ்வரதேவன்**

அவர்கள் தனது அகவை அறுபதில் இன்று சேவையிலிருந்து இளைப்பாறுகின்றார்.

இராணுவ நெருக்கடிகள், இடப்பெயர்வுகளினால் மக்கள் அல்லற்பட்ட வேளையில் காலநேரம் பாராது மனம் தளராது டாக்டர் அவர்கள் ஆற்றிய அளப்பரிய சேவை எமது நினைவுகளிலிருந்து என்றும் அழியாது. அகவை அறுபதைக் கண்டுள்ள டாக்டர் எல்லா வளமும் பெறவேண்டுமென நாம் அவரைப் பாராட்டி வாழ்த்துவதுடன், அவர் ஆற்றிய சேவைகளை நன்றியுடன் நினைத்து, இளைப்பாறிய பின்னும் இவரின் மக்கள்பணி தொடர இறை ஆசி வேண்டி நிற்கின்றோம்.

(95133) - வடமராட்சி மக்கள்.

## சேவை நலன் பாராட்டு



இன்று 19.12.2002முதல் சேவையிலிருந்து ஓய்வுபெறும்

டாக்டர்

**மா.யோகீஸ்வரதேவன்**

அவர்களின் சிறப்பான சேவையைப் பாராட்டிக் கௌரவிப்பதுடன் எதிர்காலத்திலும் சகல நலன்களும் பெற்று நீடூழி வாழ வாழ்த்துகின்றோம்.

கி.பரமதாஸ் குடும்பத்தினர்,
மாலுசந்தி.

(C/25483)

## 31ஆம் நாள் நினைவஞ்சலியும் அந்தியேட்டி அழைப்பும்



திருமதி

**இராமலிங்கம் புஸ்பராணி**

மலர்வு 16.06.1961 — உதிர்வு 19.11.2002

19.11.2002அன்று சிவபதமடைந்த திருமதி இராமலிங்கம் புஸ்பராணி அவர்களின் இறுதிக்கிரியைகளில் கலந்துகொண்டவர்களுக்கும், உள்ளூரில் இருந்தும், வெளியூரில் இருந்தும் அனுதாபச் செய்தி தெரிவித்தவர்களுக்கும், எமது துயரினைப் பகிர்ந்துகொண்ட அனைவருக்கும் எமது நன்றியைத் தெரிவிப்பதோடு, இன்று (19.12.2002) வியாழக்கிழமை அன்னாரின் இல்லத்தில் நடைபெறும் ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் மதியபோசனத்திலும் கலந்துகொள்ளுமாறு உற்றார், உறவினர், நண்பர்கள், கொ.ப.தெ.அ.கூ. சங்க ஊழியர்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

தவசிகுளம்,
மிருசுவில்.
(95135)

தகவல்: கி.இராமலிங்கம் (கணவர்)
குடும்பத்தினர்.

## காரைநகர் வித்தியாலய ஒன்றுகூடல்

காரைநகர்,டிசெ.19

காரைநகர் கலாநிதி ஆ.தியாகராசா மத்திய மகா வித்தியாலய பழைய மாணவர் சங்கத்தினரின் தேநீர் விருந்துபசாரமும் ஒன்றுகூடலும் எதிர்வரும் ஞாயிற்றுக்கிழமை காலை 9.00 மணிக்கு இடம்பெறவுள்ளது.

கல்லூரி அதிபர் பண்டிதர் மு.சு வேலாயுதபிள்ளை தலைமையில் நடைபெறும் இந்நிகழ்விற்கு பிரதம விருந்தினராக இந்து கலாசார அமைச்சர் தி.மகேஸ்வரனும் சிறப்பு விருந்தினராக தீவக வலய கல்விப்பணிப்பாளர் ப.விக்கினேஸ்வரனும் கலந்துகொள்ளவுள்ளனர். (ஒ-73)

## யாழ்.வலய அலுவலக ஒளிவிழா

யாழ்ப்பாணம்,டிசெ.19

யாழ்.கல்வி வலயத்தின் ஒளிவிழா எதிர்வரும் 23ஆம் திகதி திங்கட்கிழமை காலை 10.00 மணிக்கு பிரதிக் கல்விப் பணிப்பாளர் நா.வரதராசா தலைமையில் வலயக்கல்வி அலுவலக முகாமைத்துவ மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

இந்த நிகழ்வில் சிறப்பு விருந்தினராக யாழ்.மறைக்கல்வி நிலைய இயக்குநர் அருட்தந்தை ஜோன்.மௌலீஸ், புனித அந்திரேயா பங்குத்தந்தை இ.இராஜ்குமார் ஆகியோர் கலந்துகொள்ளவுள்ளனர். (ஒ-10)

## இலவச விதை நெல் விநியோகம்

செம்பியன்பற்று,டிசெ.19

மருதங்கேணி உதவி அரச அதிபர் பிரிவிலுள்ள மருதங்கேணி உடுத்துறை, செம்பியன்பற்று ஆகிய கிராமங்களில் மீளக்குடியமர்ந்த விவசாயிகளுக்கு 500 ஏக்கர் நெல் சாகுபடி செய்வதற்கேற்ற விதைநெல், பசளை போன்றவற்றை சர்வோதய இயக்கம் இலவசமாக வழங்கியுள்ளது.

இதேவேளை, விவசாயிகளுக்கு சேவா லங்கா நிறுவனம் மண்வெட்டி, கத்தி போன்ற விவசாய உபகரணங்களை வழங்கியுள்ளது. (ஒ-36)

## யாழ்ப்பாண மாநகராட்சிமன்ற அறிவித்தல்

புதிதாக தனியார் வீடுகளுக்கு குடிதண்ணீர் வழங்குவதை இடைநிறுத்துதல்

மாநகராட்சிமன்ற எல்லைக்குள் தனியார் வீடுகளுக்குப் புதிதாக நீர்வழங்கும் சேவை தற்காலிகமாக இடைநிறுத்தப்பட்டுள்ளது என்பதை சகல பொதுமக்களுக்கும் அறியத்தருகின்றோம்.

மாநகரசபை,
யாழ்ப்பாணம்.
18.12.2002. (C/25482)

இ.இராமலிங்கம்
மாநகர ஆணையாளர்,
யாழ்ப்பாணம்.

## நெஞ்சகலா நினைவில் ஓராண்டு



**செல்வி செல்லையா சசிகலாதேவி** *(சசி)*

மண் மீது 30.08.1969 — விண் மீது 30.12.2001

ஆண்டொன்று போனதம்மா உனைப் பிரிந்து சசியே!
ஆறாது எம் நெஞ்சு உன் நினைவினாலே
நீங்காத நினைவுகள் தொடர்கதைகளாக
நெஞ்சை வருத்தும் நிதம் நிழலாடும் உன்னுருவம்
*ஓம் சாந்தி! சாந்தி! சாந்தி!*

தற்காலிக முகவரி:
*கப்பண்டா வீதி,*
*சங்கானை.*

குடும்பத்தினர்.
*மாவை கலட்டி, தெல்லிப்பழை.*
திருமதி செல்லையா நேசம்மா (ரெயிலர்).

(95139)

## அபிவிருத்தி அதிர்ஷ்டம்

உத்தியோகபூர்வ முடிவுகள்

| சீட்டிழுப்பு வாரம் | 432 | டிக்கட்டின் நிறம் - நீலம் |
|---|---|---|
| திகதி | 17.12.2002 | செல்லுபடியாகும் தொடர் இல. 4632326-4645829 |

வெற்றி இலக்கங்கள் **08 31 41 50**

லக்கினம் சிங்கம்



ஜக்பொட் பரிசு ரூபா. 1,638,650/- வெல்லப்படவில்லை.

இந்த வெள்ளிக்கிழமைக்கான ஜக்பொட் ரூபா **2,302,200/-**

| இணையும் இலக்கங்கள் | வெற்றியாளர் தொகை | பரிசுத் தொகை(ரூ.) | மொத்தப் பரிசுத் தொகை(ரூ.) |
|---|---|---|---|
| 1 இல | 297,195 | 10 | 2,971,950 |
| 2 இலக்கங்கள் | 27,242 | 20 | 544,840 |
| 1 இல + லக்கினம் | 26,943 | 30 | 808,290 |
| 2 இல + லக்கினம் | 2,497 | 100 | 249,700 |
| 3 இலக்கங்கள் | 726 | 500 | 363,000 |
| 3 இல + லக்கினம் | 65 | 5,000 | 325,000 |
| 4 இலக்கங்கள் | 03 | 100,000 | 300,000 |
| 4 இல + லக்கினம் | - | 1,638,650 | - |
| மொத்தம் | 354,671 | - | 5,562,780 |

மொத்தப் பரிசுத் தொகை
ரூபா. 5,562,780/-

தொடர் இல. 5628710க்கு மேற்பட்ட சிவப்பு நிற டிக்கட்டுகள் 2002 டிசம்பர் 20ம் திகதி வெள்ளிக்கிழமை செல்லுபடியாகும்.
வெற்றி பெறும் டிக்கட்டுகள் 6 மாதங்களுக்கு செல்லுபடியாகும்.

அபிவிருத்தி அதிர்ஷ்ட சீட்டிழுப்பில் பணப்பரிசு வெற்றி பெறாத டிக்கட்டுகளில் பஜாஜ் முச்சக்கர வண்டி வெற்றி பெறும் 5 டிக்கட்டுகளின் தொடர் இலக்கங்கள்

4641016-5-21
4643985-9-88
4636221-2-73
4639535-3-10
4644503-3-36

வாக்குறுதிகளை நிறைவேற்றும்

அபிவிருத்தி லொத்தர் சபை
இல. 33, சென்ற் மைக்கேல் வீதி, கொள்ளுப்பிட்டி, கொழும்பு 3.

வட்டுக்கோட்டை ஜீவஒளி சிறுவர் கழகம் 15.12.2002 இல் நடத்திய

## அதிர்ஷ்டலாபச் சீட்டிழுப்பு முடிவுகள்

வெற்றியீட்டிய இலக்கங்கள் :-

(1) முதலாம் பரிசு - 653
(2) இரண்டாம் பரிசு .- 4143
(3) மூன்றாம் பரிசு - 2485

ஆறுதல் பரிசுகளுக்குரிய இலக்கங்கள்:

2772, 1009, 4673, 3754, 404

ஜீவஒளி சிறுவர் கழகம்,
வட்டுக்கோட்டை.

*இன்பச்சோலை.* (11920)

## நன்றி நவில்கின்றோம்

மீசாலை மேற்கு, இலந்தைக்கூடல் கங்காணியார் கந்தசுவாமி கோயில் பரிவார மூர்த்தியாகிய விநாயகப்பெருமானுக்கு தனிக்கோயில் அமைக்க என்னிடம் பணமாகவும் பொருள்களாகவும் மற்றும் சரீர உதவியும் நல்கிய அனைத்து அடியார்களுக்கும் விநாயகப் பெருமான் மற்றும் முருகப்பெருமான் திருவருள் கிடைக்கப் பிரார்த்தித்து எனது உளப்பூர்வமான நன்றியைத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

*மீசாலை மேற்கு,*
*மீசாலை.* (95105)

திரு.சுப்பிரமணியம் பாலகுமார்
(தபால்)

DSI DSI DSI DSI DSI DSI DSI DSI DSI DSI

SALE SALE SALE

CHRISTMAS NEW YEAR SALE

நத்தார், புதுவருடத்தை முன்னிட்டு

DSI பாதணிகள் மலிவு விற்பனை

10% முதல் 40% வரை
விசேட கழிவு

DSI மலிவு விற்பனை நிலையம்
(பூபாலசிங்கம் புத்தகசாலை முன்பாக)

224, ஆஸ்பத்திரி வீதி,
யாழ்ப்பாணம். (C/25478)

DSI DSI DSI DSI DSI DSI DSI DSI DSI DSI

## சுகாதாரத் திணைக்களம் நடவடிக்கை

வடமராட்சி கிழக்கு மருதங்கேணி உதவி அரச அதிபர் பிரிவில் மீளக் குடியமர்ந்த மக்கள் வைத்திய சேவைகளைப் பெற்றுக்கொள்வதில் எதிர்நோக்கும் இடையூறுகளைக் களைவதற்கு யாழ்.சுகாதார சேவைத் திணைக்களம் அவசர நடவடிக்கைகளை மேற்கொண்டுவருகிறது.

இதன்படி மருதங்கேணி வைத்தியசாலையை இயங்கவைக்க துரித நடவடிக்கை மேற்கொள்ளப்படுகிறது.

பருத்தித்துறை அரசினர் வைத்தியசாலையில் கடமையாற்றும் உதவி வைத்திய அதிகாரி டாக்டர் திருமதி எம்.மங்கையர்மணி மருதங்கேணி வைத்தியசாலைக்கு இடமாற்றஞ் செய்யப்பட்டுள்ளார். மருதங்கேணி கிராமிய வைத்தியசாலையில் இடப்பெயர்வுக்கு முன் கடமையாற்றி தற்போது வேறு ஆஸ்பத்திரிகளில் தற்காலிகமாகக் கடமையாற்றும் ஊழியர்களைப் பணியிலிருந்து விடுவிக்குமாறு சகல வைத்தியசாலைகளுக்கும் சுகாதாரத் திணைக்களம் அறிவித்துள்ளது. இதன்படி மந்திகை அரசினர் வைத்தியசாலை, வல்வெட்டித்துறை வைத்தியசாலை போன்றவற்றிலிருந்து படிப்படியாக ஊழியர்கள் விடுவிக்கப்பட்டு வருகின்றனர்.

இப்பகுதியில் தற்போது இடம்பெயர்வு சேவை மட்டும் வழங்கப்பட்டுவருகின்றது. வாரத்தில் மூன்று நாள்கள் மட்டுமே இச்சேவை நடைபெற்றுவருகிறது. (ஓ-36)

## விவசாய குடும்பங்களுக்கு உதவி நடவடிக்கை

ஏ-9 பாதை திறக்கப்பட்ட பின்னர் வன்னியிலிருந்து குடாநாட்டில் தமது சொந்தக் கிராமங்களில் குடியேறியுள்ளவிவசாயக் குடும்பங்களுக்கு, விவசாய நடவடிக்கைகளை தொடரவும், ஊக்குவிக்கவும் பட்டினிக்கெதிரான நிறுவனம் பல்வேறு வகையான உதவிகளை வழங்கிவருகின்றது.

அச்செழு கிராமத்தில் குடியேறியுள்ள பல குடும்பங்களுக்கு அண்மையில் மேற்படி நிறுவனம் பல விவசாய உபகரணங்களை வழங்கியுள்ளது. ஒவ்வொரு விவசாயக் குடும்பத்துக்கும் விதை உருளைக்கிழங்கு மற்றும் மண்வெட்டி என்பன இவ்வாறு வழங்கப்பட்டுள்ளன. (ஓ-152)

# மரண அறிவித்தல்கள்

## வேலுப்பிள்ளை மார்க்கண்டு

நெடுந்தீவைப் பிறப்பிடமாகவும் பங்குரு வீதி, வட்டுக்கோட்டையை வதிவிடமாகவும் கொண்ட வேலுப்பிள்ளை மார்க்கண்டு (சுப்பீரியர் பழைய காட், 2ஆம் குறுக்குத்தெரு, கணேசன் ஸ்ரோர், யாழ்ப்பாணம், முன்னாள் முகாமையாளர்) அவர்கள் 16.12.2002 திங்கட்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற வேலுப்பிள்ளை - பூரணம் தம்பதிகளின் அன்பு மகனும் செல்லைத்துரை - தையல்நாயகி தம்பதிகளின் அன்பு மருமகனும் யோகேஸ்வரியின் அன்புக் கணவரும் கிருபானந்தன் (ஜேர்மனி), சசியானந்தன் (ஜேர்மனி) ஆகியோரின் அன்புத் தந்தையாரும் வசந்தகுமாரி (ஜேர்மனி), கவிதா ஆகியோரின் அன்பு மாமனாரும் மனோஜனின் அன்புப் பேரனும் லோகேந்திரன், சண்முகநாதன், பத்மநாதன், சரோஜினிதேவி, தனலட்சுமி (லண்டன்), சந்திராதேவி ஆகியோரின் அன்புச் சகோதரனும் சண்முகநாதன், துரைராஜா (ஜேர்மனி) ஆகியோரின் அன்பு மைத்துனரும் பராசக்தி, சுசிராணி ஆகியோரின் சகலனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (19.12.2002) வியாழக்கிழமை முற்பகல் 11.00மணிக்கு அவரின் இல்லத்தில் நடைபெற்றுப் பூதவுடல் வழுக்கையாறு மயானத்தில் தகனஞ்செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*பங்குரு வீதி,*
*வட்டுக்கோட்டை.* (95121)

தகவல்:
யோகேஸ்வரி (மனைவி).

## சுப்பர் பாலசிங்கம்

சிறுப்பிட்டி தெற்கு, நீர்வேலியைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட சுப்பர் பாலசிங்கம் 15-12-2002 ஞாயிற்றுக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சுப்பர் - இளையபிள்ளை தம்பதியினரின் அன்பு மகனும் காலஞ்சென்றவர்களான வைத்தி - நன்னி தம்பதியினரின் அன்பு மருமகனும் செல்லம்மாவின் அன்புக் கணவரும் மாணிக்கம், குஞ்சுப்பிள்ளை, முத்துப்பிள்ளை, குணவதி, வள்ளியம்மை, சின்னம்மா ஆகியோரின் அன்புச் சகோதரரும் காலஞ்சென்றவர்களான சின்னம்மா, மயிலு, கணபதி மற்றும் ஐயம்பிள்ளை, சின்னப்பிள்ளை ஆகியோரின் அன்பு மைத்துனரும் புஸ்பநாதன், புஸ்பராசா (லண்டன்), கருணன், பாமா (சுவிஸ்), ஆனந்தராசா (ஹொலண்ட்), மகேந்திரராசா (சுவிஸ்), காலஞ்சென்றவர்களான விமலாவதி, பஞ்சநாதன் (மேஜர் - பலே) மற்றும் உமா ஆகியோரின் அன்புத் தந்தையும் சந்திரலேகா, தங்கா (லண்டன்), ஜீவராணி, இராமநாதன் (சுவிஸ்), அருட்செல்வி (ஹொலண்ட்), மதிவதனா (சுவிஸ்) ஆகியோரின் அன்பு மாமனாரும் யதீசா, பிரியங்கா, அபிராம், விதுஷன், விதுஷா, கஜானா, கஜிவன், நிரோஜினி, நிரோஜன், நிருபன், ஆரபி ஆகியோரின் அன்புப் பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (19.12.2002) வியாழக்கிழமை பிற்பகல் 2.00மணிக்கு அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் சிறுப்பிட்டி காலையன்புலம் இந்து மயானத்தில் தகனஞ்செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*சிறுப்பிட்டி தெற்கு,*
*நீர்வேலி.* (95121)

தகவல்;
குடும்பத்தினர்.

